ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-எளரு வைகாசித்திங்கள் 1928ஆ மே—ஜூன் மீ	பரல் ரு

திருச்சிற்றம்பலம்

திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
யுரைகளெல் லாமுணர் வெய்திநல்ல
வுத்தம ராயுயர்ந் தாருலகி
லரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே.

சம்பந்தர்

காவிரியாற்றின் வாய்க்கா லலைகளெல்லாம் மலர் முதலானவைகளைச் சுமந்து, கரையோரங்களில் வரிசை வரிசையாக வந்துராய்ந்து நல்ல மணிகளோடும் முத்துக்களோடும் பொற்றுகள்களையுங் கொழித்தெடுத்துக்கொண்டு மண்வளத்தையும் உரிஞ்சிப் போராடப்பெறுகின்ற கீழைத்திருக்காட்டுப்பள்ளியின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் அரையிலே பல பாம்புகளை வீக்கிய பெருஞ் செல்வரான சிவபிரானுக்கு, நூலாலும் வழக்காலும் வழங்கி வருகின்ற ஆன்றோருரைகளின் கருத்துண்மைகளை யுணர்ந்து நல்லொழுக்கமுடையராய் ஏனை எல்லா மக்களினுஞ் சிறந்து திருவடிப்புணிசெய்ய, அவ்வாற்றால் தமக்குள்ள துன்பங்களை எல்லாரும் நீக்கிக்கொண்டுய்யலா மென்பது.

வரன்றல் - கொழித்தல்; ஆவது, மண்வேறாவும் மணிமுத்துக்கள் முதலியன வேறாவும் அரித்துப் பிரித்தெடுத்தல். அணி-வரிசை; இதனை "ஆண் அணி புகுதலும்" என்னுஞ் சிறுபாணாற்றுப்படையடிக்கு (௨௧௧) 'வீரர்சென்ற அணியிலே நின்று அவ்வணியைக் குலைத்தலையும்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியருரைக்கும் உரையினாற் கண்டுகொள்க. 'காவிரிகால் போநும்' என்னுங் குறிப்பினால், திரைகளே இங்கு வீரராதலுங் காண்க. உணர்வெய்தி - உணர்ந்து. உயர்ந்தார் - முற்றெச்சம்; அல்லததனை முற்றாவே வைத்து வினையாலணையும் பெயராகக்கொண்டு, 'உயர்ந்தார் ஆட்செய' என்று எழுவாய்த்தொடராக்கலுமாம். ஆர்த்த-கட்டிய. அல்லல்-ஆணவத்தின் விளைவான மாயையிருவினைத்துன்பங்கள். அவை அறவே, ஆணவமும் அறுந்ததென்றபடி. காட்டுப்பள்ளிச் செல்வர்க்கு உயர்ந்து ஆட்செய அல்லலறுக்கலாமென்று கூட்டுக.

கற்றுக் கருத்துணர்ந்து நல்லொழுக்கமுடையராய்ச் சிறந்து ஆட்செய அல்லலறுக்கலா மென்றமையால், கற்று நல்லொழுக்கமுடையவரே கடவுட்பணி செய்யுந் தகுதியுடையாரென்பதும், அவரே அல்லலறுக்க வல்லா ரென்பதும், கற்றலோடு அமையாது நல்லொழுக்கமுடையராகவும் ஆனதன் பின்னரே இறைவன் பணிசெய்யுந் தகுதியும் அத்தகுதியால் அல்லலறுக்கும் அருளாற்றலும் அவர் பெற்றிடுவரென்பதும் நன்கு பெறப்படும். இவ்வுண்மைகள்,

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி"

என்று சேந்தனார் திருமொழியிலும்,

"நீதிபலவும் தன்னுருவாமென மிகுத்தவன்"

என்று சம்பந்தர் அருண்மொழியிலும் உணர்த்தப்படுதல் காண்க.

பத்துப்பாட்டு

[திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் M. A., M. L.]

பத்துப்பாட்டென்பது மிகுந்த அடிகளையுடைய பத்துச் செய்யுள் நூல்களின் தொகுதியாகும். ஆசிரியப்பாவே இவற்றுட் பெரும்பாலும் பயின்றாலும் வஞ்சியடிகளும் பட்டினப்பாலை முதலியவற்றுள் இடையிடையே வந்துள்ளன. இப்பத்தினுள்ளும் ஐந்து ஆற்றுப்படை யென்னுஞ் செய்யுண்முறையைச் சார்ந்தன. பரிசில்பெற்ற ஒருவன் பெறாதவனைப் பரிசில் அளிப்பவன்பாற் சென்று பயிறாவண்ணங் கூறுவது. தொல்காப்பியப் புறத்திணையியல் ௩௬-வது சூத்திரத்தில்

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்றதாற் பெறப்படும். இத்தொகுதியின் முதலிலுள்ள திருமுருகாற்றுப்படை, புலவராற்றுப்படையெனப்படும். முருகக் கடவுளிடத்தே ஞானம் பெற்று நன்னெறியடைய விரும்புவோரை வழிப்படுத்தற் பொருட்டு ஆசிரியர் நக்கீரனாராற் பாடப்பெற்றது. இதனுள் முருகக்கடவுள் ஆறு படைவீடுகளிலும் வீற்றிருக்கு முறைமை இனிதாகக் கூறப்பட்டது. முதற்படை வீடு திருப்பரங்குன்றம். சோலைவளமுஞ் சுனைவளமும் வானர மகளிர் முருகனைப் பாடுஞ் சிறப்பும் இதனுட் கூறப்பட்டன. இரண்டாவது படைவீடு சீரலைவாய் என்னுந் திருச்செந்தூர். இங்கே முருகப்பெருமான் யானைமேல் ஆறு திருமுகமும் பன்னிரண்டு திருக்கையும் உடையவராய் யாவர்க்கும் பயனுதவும் வண்ணம் திருமேனிகொண்டெழுந்தருளு முறைமை கூறப்பட்டது. இதன் கருத்து பிற்காலத்தில் கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபர அடிகளால் நன்கு எடுத்தாளப்பட்டது. மூன்றாவது படைவீடு திருவாவினன்குடி. இது பழனிமலையின் அடிவாரத்திலுள்ளது. இதனுள் பலவகை அடியவர் சிறப்பும் முருகனை வழிபடும் மும்மூர்த்திகளியல்பும் விளக்கப்பட்டன. ௪-வது திருவேரகம். இஃது இப்பொழுது கும்பகோணத்திற்கருகேயுள்ள சுவாமி மலையென்ப. இங்கே சிவபெருமானுக்கு முருகக் கடவுள் பிரணவப் பொருள் உரைத்ததாகப் புராணங் கூறும். இங்கே ௪௮-ஆண்டுவரை இல்லறம் புகாது நின்ற அந்தணர் ஈர உடையை ஈரம் புலரும்படி உடுத்திக்கொண்டு ஆறெழுத்து மந்திரத்தை ஓதி வழிபடுமுறை கூறப்பட்டது. ௫-வது படைவீடு ஓரிடமாகத் தெரியவில்லை. குறிஞ்சி நிலமுழுவதும் முருகனுக்கு உரியதாகலின் அஃது அனைத்துமே ஒரு படைவீடாகக் கொள்ளப்பட்டது. இதனுட் குன்றக் குறவரது தொண்டகப் பறை முழக்குதல் கூறப்பட்டது. பழமுதிர்சோலை யென்பது அழகர் கோயிலென்று சிலரும், பழனியென்று சிலருங் கூறுகின்றார்கள். இப்பகுதியுள் முருகனை வழிபடும் இடங்கள் பலவுஞ் சுட்டப்பட்டன.

கடவுளில்லை என்பார் அஞ்சும்படி முருகப்பிரான் வெளிப்பட்டருளுந் திறனுங் கூறப்பட்டது. மு

தாய்

இது சமய நூலாகக் கருதப்பட்டு நாடோறும் பயன்விரு ாழில் வோரால் ஓதப்பட்டு வருகின்றது. ப கலந்

பிலிருந்து

பொருநராற்றுப்படை யென்பது போர்க்களம் , 'தமிழ்ப் களம் முதலியவற்றிற் பாடும் ஒருவகைப் பாவலர்ந்த நெல் பொருநருள் பரிசில் பெற்றான் ஒருவன், பரிசில் பிலே வெண்ணெய் ஒருவனைச் சோழன் கரிகால் வளவனிடத்தே

பிப்பதாக முடத்தாமக் கண்ணியராற் பாடப்பெற்றது. இதிற் கரிகால் வளவன் வண்மையையும், அவன் வெண்ணி யென்னு மிடத்துச் சேரமன்னனை வென்றதையும், அவனது நாட்டின் இயற்கை வளத்தையுங் கூறிக் காவிரியானது ஆயிரமடங்கு விளையும்படி நெல் வயல்களுக்குச் செழிப்பினைத் தருகின்றதென்று குறிப்பித்தார். பாணர் காட்டுத் தெய்வத்தைப் பாடி வழிபாட்டுக் கடன் முடிக்கு முறையும் இதனுட் குறிக்கப்பட்டது. பயன் குறித்துத் தவஞ்செய்வோர் தமது உடம்பை யிழக்காது இம்மையிலேயே தவப்பயன் பெறுதல் சிறப்பென்பதையுஞ் சுட்டியுள்ளார். வீடுபேறு குறியாது செல்வத்தைக் குறிப்பவர்களை மக்களென்னுது மாக்களென்றது கவனிக்கத்தக்கது.

"தவஞ்செய் மாக்கள் தம்முடம்பிடாஅது அதன் பயனெய்திய அளவைமான" என்றது காண்க. இன்னும் அக்காலத்து இசைக் கருவிகளும் உணவு வகைகளும் இவற்றுட் காணப்படும். அக்காலத்துப் பொருநர் முதலியோர் சோறு புளிக்குழம்பு முதலியவற்றோடு ஊனுணவுங் கொண்டனரென்று தெரிகின்றது. நன்றாக வெந்த சோற்றின் அவிழுக்கு முல்லை முகையைஉவமித்தார். (௧௧உ - ௧௧௪) பலவகை மரங்களின் பெயர்களும் இதனுட் காணப்படுகின்றன.

சிறுபாணாற்றுப்படை: இது பெரும்பாணாற்றுப்படையோடொத்த சிறிய நூலாகக் கொண்டாடப்படும். இது உ௬௯ அடிகளையுடையது. பெரும்பாணாற்றுப்படை ௫ா அடிகளையுடையது சிறுபாணாற்றுப்படை ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் என்னுங் குறுநில மன்னனைச் சிறப்பித்து இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. இடைக்கழி நாடென்பது சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு சிறு நாடென்று தெரிகிறது. நல்லூர் என்பது ஆசிரியர் ஊர். தத்தனா என்பது இயற்பெயர். நகரம் உயர்வைக்குறிக்கும்.

இப்பாட்டுடைத் தலைவன் நாடு சோழ நாட்டிற்கு வடக்கே ...ள அருவாவடதலை நாடென்றும், அருவா நாடென்றுங் ...ப. இதனுட் குட்டுவனது வஞ்சியுஞ் செழியனது கொற் ...ந் சோழனது உறந்தையுங் கூறப்பட்டுள்ளன. மயிலுக்கு ...ல்கிய பேகன் சிறப்பும், முல்லைக்குத் தேர் நல்கிய பாரி ...மையும், இரவலர்க்கு அன்புமிக்க காரியினியல்பும், நெல்லிக்கனி ஈந்த அதிகன் சிறப்பும், சிவபெரு...கம் கொடுத்த உடையினை ஈந்த ஆயின் பெரு... கொடுக்கும் நள்ளியின் வண்மையும், ஓரியின்

கொடையும், நல்லியக் கோடன்பா லமைந்ததாகக் கூறினர். ஓவியர் கூட்டத்திற்கு அவன் தலைவன் என்பதையுங் குறித்தார். நெய்தல் நிலத்திலுள்ள எயிற்பட்டினமும், முல்லை நிலத்திலுள்ள வேலூரும், மருத நிலத்திலுள்ள ஆமூரும் அவனுக்கு உரியன வென்று சிறப்பித்துக் கூறியுள்ளார். அவனுடைய பலவகை நற்குணங்களையும் நன்கு பாராட்டியுள்ளார். அவன் பொருநர்க்கும், புலவர்க்கும், அந்தணர்க்கும் அடையா வாயிலையுடையவனென்றுஞ், செய்ந்நன்றியறிதலுஞ் சிற்றினமின்மையும் இன்முகமுடைமையும் அறிஞர்க்களித்தலுங் கருதியது முடித்தலும் உடையோனென்றுங் கூறினர்.

பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. வென்வேற் கிள்ளியென்பவனுக்குப் பீலிவளை என்னும் நாககன்னிகையிடம் பிறந்த புதல்வன் இளந்திரையன்.

உருத்திரன் என்றொரு புலவர் குறுந்தொகையிற் செய்யுள் செய்துள்ளார். இவர் கரிகால் வளவன் காலத்திற் பட்டினப்பாலை பாடி அதற்குப்பின் பெரும்பாணாற்றுப்படையைப் பாடினர் என்று ஊகிக்க இடமுண்டு. இளந்திரையன் வீரத்தைக் கூறுமிடத்து அவனைக் 'கடம்பமர் நெடுவேளன்ன மீளி' என்றது காண்க. காஞ்சிநகர் மருங்குள்ள வெவ்வேறு மரபினரிருக்கை இதனுள் நன்கு விளக்கப்பட்டன. இடைக்குலமகளிர் புலியினது முழக்கம்போல் ஒலியுண்டாகும்படி தயிர் கடைதலுங் காலையில் நெல்லுக்குப் போய்விற்றலுங் குறிஞ்சி நிலத்திலே சென்று நெய்யை விற்று எருமை முதலியவைகளை வாங்கிக் கொள்ளுதலுங் கூறி, இடையர் குடியிருப்பிலே தினையரிசிச் சோற்றினைப் பாலோடு பெறக்கூடுமென்று குறிப்பித்தார். பின்னர் முல்லை நிலத்திலே வரகு முதலியவற்றை விதைத்து உழுதுண்பார் இருக்கையைக் கூறுமிடத்து வரகரிசியோடு அவரை விதைப்பருப்பை யொன்றாய்ப் பொங்கியுண்ணும் வழக்கத்தைக் குறிப்பித்தார். பின்னர் மருதநிலங் கூறுமிடத்துச் செந்நெல் முதலிய பலவகை உணவுப் பொருள்களின் வளங்களைக் கூறினார். 'முகடு துணித்தடுக்கிய பழம்பல் உணவின்' என்றது காண்க. தச்சர்கள் வீடுகளிற் சிறுபிள்ளைகள் சிறுதேர் உருட்டி விளையாடுவதும், செவிலித்தாய் முலைப்பாலுண்டு துயில் கொள்ளுமியல்புங் கூறினார். தொழில் செய்வார் வெள்ளிய நெற்சோற்றோடு கோழியூனையுங் கலந்துண்டல் குறிக்கப்பட்டது. வலைஞர்கள் கொழியலரிசியிலிருந்து செய்த கள்ளினை இறைச்சியோடு உண்பர் என்றனர். 'தமிழ்ப் பார்ப்பார் வீடுகளிலே கற்புடைப் பெண்டிர் உயர்ந்த நெல்லுணவை மாதுளங்காய் மிளகு பொடி கருவேப்பிலை வெண்ணெய்

இவை கலந்து செய்யப்பட்ட கறியோடு மாவடு ஊறுகாயுஞ் சோறுமிடுவரென்றுங் குறிப்பித்தார். மகளிர் பந்தாடுதல், கழங் காடுதல் முதலிய வழக்கங்களும் இதனுட் குறிக்கப்பட்டன. பெரிய மாடங்களின்மீது ஏற்றிய விளக்கு மரக்கலங்களுக்கு ஊரின் கரையைக் காட்டிக்கூவுந் தன்மையுடையன என்றார்.

"விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்கு சுடர்ஞெகிழி
உறவுநீர் அழுவத்து ஓடு கலங்கரையும்"

என்றது காண்க. யவனரது ஒதிம விளக்கு இதனுட் குறிக்கப் பட்டது. திருமால் கொப்புளில் நான்முகன் பிறந்ததும் பாரதப் போரும் இதனுட் குறிக்கப்பட்டன. முக்கனி முதலிய இயற் கைப் பொருள்களின் வளமும் இதனுள் திகழ்கின்றது.

முல்லைப்பாட்டு இதுபோரின் பொருட்டுப் பிரிந்த தலைமகன் மீளுமளவுந் தலைவியாற்றியிருந்தமையும், அவன் மீண்டதைக் கண்டு தோழி முதலியவர்கள் வாயில் மொழிந்தவற்றையுந் தெரி விப்பது. இது காவிரிப்பூம்பட்டினம் பொன் வணிகர் மகனார் நப்பூதனார் பாடியது. இதுவே பத்துப் பாட்டில் மிகச் சுருங்கிய அளவையுடையது. ௱௩ அடியுடையது. முகிலுக்குத் திருமாலை யுவமித்தல் இதனுட் காணப்படுகின்றது. மழை பொழிந்த மாலைப் பொழுதின்கண் தலைவன் வருவதைப்பற்றி நல்ல உரை கிடைக்கின்றதாவென்று பார்த்து நல்லுரைபெற்றதும், அதனைக் கூறியவிடத்துந் தலைவி கன்னியரோடிருந்ததும், தலைவனது இயல்பும் யவனர் முதலியோர் மெய்ப்பையணிந்து காவல்காத்த செய்கையும், தலைவன் மீண்டகாலை முல்லை நிலம்வளமாக இருந் தலையும், மான்கள் தம்பிணையோடு திரிவதையுங்கண்டு தலைவியைக் காணும் வேட்கையால் குதிரையை விரைந்தோட்டி மீண்ட தையும் ஆசிரியர் செவ்விதின் நவின்றனர். இதனுள் யவனர் விளக்குத்தூக்கிச் செல்லுதலும், வாயாற் பேசாது கையாற் குறிகள் காட்டுஞ் சட்டையிட்ட மிலேச்சர் பள்ளிகொள்ளு மிடத்தைக் காவல் காத்தலும் பாவை விளக்கு எழுநிலை மாடம் என்பவைகளும் ஆயத்தக்கன.

மதுரைக் காஞ்சி: இது தலையாலங்கானத்துச் செருவென்ற வனுக்கு மாங்குடிமருதனார் நிலையாமையை யறிவுறுத்தி வீடு பேற்றை நாடுவிக்குங் கருத்துடன் பாடியது. இது பத்துப் பாட்டு எல்லாவற்றிலும் அளவாற் பெரியது. ௭௱௨ அடிகளை யுடையது. இதனுட் பாண்டியனது முன்னோர்களுடைய பெருமை கூறுமிடத்து இராவணனை இசையில்வென்ற அகத்தி

யரைப் பொதிய மலையிலுள்ள தொன்முது கடவுளென்றும், அவர்க்குப் பின்வைத்து எண்ணப்படும் மேன்மை பாண்டியனுக்கு இருப்பதாகவுங் கூறினர். சேர சோழரையும் வேளிர் பலரையுஞ் செருவில் வென்றதுங் கூறப்பட்டது. வடிம்பலம்ப நின்ற பாண்டியனது பெருமையும் இமயமுங் குமரியுமாகிய தமிழ் நாட்டு எல்லைகளும் பாணர்க்குக்களிறு, பொற்றாமரை முதலியன கொடுத்ததுங், கொற்கைக்குத் தலைவனென்பதுங், தென்பரதவரைப் போரில் வென்றவனென்பதும், பகைவரை வென்று நாட்டை யழித்த வெற்றியும் 'அரசியல் பிழையாது அறநெறிகாட்டிப் பெரியார் சென்ற அடிவழி பிழையாது நின் கொற்றம் வழி வழி சிறக்க' வென்றும், விண்ணவருலகத்தை அமிழ்தத்தோடு பெறுவதாயிருந்தாலும் பொய் புகலாத நெறியில் நிற்பவனென்றும், இவ்வுலகமும் விண்ணுலகும் திரண்டு வந்தாலும் பகைவர்க்கஞ்சாத ஆண்மையுடையவனென்றும், பழி நீக்கி ஈதலைமேற்கொண்டு இசைவிரும்புகின்றவன் எனவுங்கூறி உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்த்தி நிலைபெற்ற பரம்பொருளை நாடவேண்டுமென்று குறிப்பித்தார். எத் தெய்வத்துஞ் சிவபெருமான் முதற் கடவுளென்பதே

"நீரும் நிலனும் தீயும் வளியும்
ஆகவிசும் பொடு ஐந்துட னியற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக,
மாசற விலங்கிய யாக்கையா சூழ
சுடர்வாடாப் பூவின் இமையா நாயது
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றருமாயின் பலிகொடு காகில்"

என்றமையால் விளங்கும். அந்தணரிருக்கை காவிதிப்பட்டம் பெற்ற வேளாளரிருக்கை, வணிகரிருக்கை, அமைச்சரொழிந்த நாள், பெருங்குழுவினரிருக்கை, தொழிலாளரிருக்கை, கடைத்தெரு, வீதிகளின் சிறப்பு முதலியயாவும், அரசாங்கங்கட்குரிய பலவகைக்குழுவினரியல்பும் மிகவும் இனிய முறையிற் புனைந்துரைக்கப்பட்டன. முதுகுடுமி பல யாகங்கள் செய்ததும் அவன் சங்கப்புலவரைப் பாதுகாத்து அவர்களால் மேலாகிய தத்துவக் கொள்கையை அறிந்த சிறப்பும் நிலந்தருதிருவிற் பாண்டியனது பெருமையும் எடுத்துக்கூறி, அவர்களைப்போலப் பாண்டியன் வாழவேண்டுமென்று வாழ்த்தினர். சங்கமென்பதைத் தனித் தமிழ்ச் சொல்லால் இனிது விளக்கியுள்ளார். 'தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ் சால் சிறப்பின் நிலந்தரு திருவின் பாண்டியன் போல' என்றது காண்க. பாண்டியன் மரபில் வந்த மாறன் முதலிய பல குறுநிலமன்னர் நெடுஞ்செழி

யனுக்குத் துணைவராக அவனைப் போற்றி நின்றனரென்று இதனுட் காணப்படுகின்றது.

மாங்குடி மருதனாரைப்பற்றிச் சிறப்பாக நெடுஞ்செழியன் கூறிய புறப்பாட்டில் விளங்குதல் காண்க. (பு. எ௨) இவருடைய செய்யுள் குறுந்தொகையிலும் ஒன்று உண்டு.

நெடுநல்வாடை: இது நெடுஞ்செழியன் தலைவிக்குப் போரின் பொருட்டுச்சென்ற அரசனது பிரிவாலுளதாகிய வருத்தம் நீங்கும்பொருட்டு அவன் விரைவில் வருவானென்று கொற்றவை பரவும் பெண்மணி கூறியதாக நக்கீரனாரால் செய்யப்பட்டது. இதன்கட் கூறப்பட்ட பிரிவு கூதிர்காலத்தில் நிகழ்ந்தது. அரசர்க்கு நயந்தருவதாய்த் தலைவிக்கு நெடியதாய்த் தோன்றும் வாடைக்காலமாதலின், நெடுநல்வாடை என்றபெயர் இந்நூலுக்கு வந்தது. கூதிர்காலத்தில் மழைத் துளிகள் மாறாதிருப்பவும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது உடல்வலி மிக்க நகரக் காவலராகிய மிலேச்சர் என்பார் தமக்கு வேண்டிய இடத்திலே திரிவதையும் இருப்பு விளக்கேற்றி நெல்லுமலரும் தூவி இல்லுறை தெய்வத்தைக் கடைத் தெருவினர் வணங்குவதும், யவனருடைய ஓவியவேலையமைந்த பாவை விளக்குகள் பல விடங்களில் ஏற்றப்பட்டிருப்பதும், பிரிவாற்றாமையால் வருந்திய தலைவியிருக்குமியல்புந், திங்களோடு உரோகிணி பிரியாதிருப்பது போலத் தாமுந் தலைவரோடு பிரியாதிருக்கப் பெற்றிலோமே யென்ற நினைவால் தலைவிவாடுதலும், தலைவன் பாசறையிலிருக்கு நிலையும், பாசறைத் தொழில் விரைவில் முடிவதாகவென்று கொற்றவையைப் பரவுவதும் இப்பாட்டின் முடிவில் அமைக்கப் பட்டிருக்கின்றது.

குறிஞ்சிப் பாட்டு: இது தோழி செவிலிக்குத் தலைவியின் இயல்புகூறி அறத்தொடு நிற்குங் கூற்றாகக் கபிலர் பாடியது. இஃது ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் தமிழ் நயம் உணர்த்துங் கருத்தாற் புலவர் பாடியது. இதனுள் தலைவனுந் தலைவியுந் தாமாகவே செய்யும் மண இயல்பும், பிரிந்த காதலன் வாரானாயினும் இறக்குந்துணையும் துயரத்தைப் பொறுத்திருந்து மறுபிறப்பினும் அக்கூட்டத்தைக் கருதுவது தலைவியியல்பென்றும், தினைப்புனத்திற் கிளியோட்டும் முறையும் மின்னல், மின்னுவது முருகவேளின் வேல்போலவென்றுங், குறிஞ்சி நிலத்திற்குரிய பலவகைப் பூக்களின் பெருக்கமும், பூக்களாலும் தளிராலும் மகளிர் அழகு செய்துகொள்ளும் முறையும், குறிஞ்சி நிலத்துத் தலைவன் ஆயத்தோடு நின்ற தலைவியைக்கண்டு வினவியதும், வேட்டை நாய்களை அவன் ஓட்டியதும், ஓடுநீரிற் குதித்துக் கால்

வன் தலைவியைப் பாதுகாத்ததும், கள
ந்ததும், குறிஞ்சிக் கடவுளாகிய முருகனை
உரைத்ததும், மாலைக்கால இயல்பும், வரைவு
ாமைப்பற்றித் தலைவி வருந்தியதுங் கூறப்

லை: இது கரிகால் வளவன்மீது கடியலூர் உருத்திரங் [illegible] ணனார் பாடி ௧௬ நூறாயிரம் பொன் பரிசுபெற்றமை கூறுவது. இது கலிங்கத்துப் பரணியுட் குறிக்கப்பட்டது. இதனுட் போந்த அகக்கருத்து பிரிதற்கரிய தலைவனது பிரிவின் கடுமையைத் தனது நெஞ்சிற்குக் கூறியது. இதனுள் காவிரி எக்காலத்தும் வற்றாது ஓடுவதும், அது பொன் கொழிப்பதும், இடையறாவிளைவைத் தருவதும், மகரக் குழையால் நெல்லைத் தின்னுங் கோழியை எறிவதும், மூன்றுருட் சிறு தேரைப் புதல்வர்கள் வீட்டு முற்றங்களில் ஓட்டுவதும், சோலை குளம் முதலியவற்றின் வனப்பும், பலவகைக் குடிகளினிருக்கையியல்பும் காவிரிப்பூம்பட்டினத்தே கடலாடி விளையாடி ஐம்பொறிகளுக்குரியவற்றை நுகர்ந்து ஆடவரும் பெண்டிரும் பலவகை இன்பங்களைத் துய்ப்பதும், ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடங்களில் அளவில்லாத பண்டங்களைப் புலியடையாளமிட்டுச் சுங்கங் கொள்ளு முறைமையும், முருகவேளுக்கும் ஏனைத் தெய்வங்களுக்கும் மகளிர் முதலியோர் விழாக்கொண்டாடுவதும், பல்குழுவினர் தத்தந் தொழிலைக் குறிப்பான் எடுத்த கொடிகளினியல்பும், வணிகத்தால் வந்து மிகுந்த பொருட் செறிவாற் சிறப்புற்றோங்கிய தெருக்களின் வளமும் இனிது கூறப்பட்டன. பல நாடுகளிலிருந்து வந்த பலமொழிபேசும் மக்களின் செறிவுஞ் சுட்டப்பட்டது. வேளாளரியல்பு கொலைகடிந்து களவு நீக்கி வாழ்ந்தனரெனவும், பசுக்களைப் பாதுகாத்தும் வேள்விசெய்தும் விண்ணவரை வழிபட்டும் அந்தணர் புகழ்பரப்பியும் நல்லுணவு பலர்க்குங்கொடுத்தும் அறத்தொழில்கள் முட்டுப்படாது அருளுடன் இல்வாழ்க்கை நடத்தியும் நடுவு நிலைமை பொருந்தி வணிகஞ் செய்தும் ஊதியத்தை வெளியாகச் சொல்லிப் பொருள் மிகுதி தேடியுமிருந்தனரென்றுங் கூறப்பட்டது. பின்னர், கரிகால் வளவன் வெற்றியும் வீரமும் விரிவாயக் கூறப்பட்டன. இதன் அகக்கருத்து ௨௧௪ - ௨௨௰ சுட்டப்பட்டது. "முட்டாச் சிறப்பிற்பட்டினம் பெறினும், வாரிருங் கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன் வாழிய நெஞ்சே." கரிகால்வளவன் ஒளிநாட்டாரையும் அருவாளரையும் வட அரசரையும் குடநாட்டிலுள்ளாரையும் பொதுவர் என்பாரையும், இருங்கோவேள் என்ற வேளிரையும்

வென்றானெனவும், காடு கெடுத்து நாட
வளம் பெருக்கினனெனவுங் கூறப்பட்டது
இரண்டு மூன்று அடிகளில் மிகவும் அழ
உளய - உளங.

மலைபடுகடாம்: இஃதுஇரணிய முட்டத்
பெருங் கௌசிகனார் என்பவர் பல் கு
செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் ந
அவனிடத்தே கூத்தர் என்பாரை ஆற்றுப்
கூத்தராற்றுப்படை யெனவும் பெயர்பெறும். ......கரு யானையை உவமைகூறி மலையிலுள்ள ஓசையைக் கடாம் என்றனர். ஆதலின் மலைபடுகடாமெனப்பட்டது. நன்னனது வீரமும் வண்மையும் நவிரம் என்னும் மலையில் நீலகண்டர் வீற்றிருப்பதும் நன்னனது குறிஞ்சிநிலத்தின் இயற்கைவளமுங் கூறிப் பாணர் நன்னன்பால் உணவைப் பெறுவாரென்றுங் கூறினர். பலவகை ஊனுணவும் மலைப் பண்டங்களும் போவதற்குரிய வழியின் கடுமையுங் கூறி, மலையிலுள்ள பல ஓசைகளும் ஒருங்கு ஒலிக்குமிடத்துயானையின் ஒலி திசைகளெல்லாம் ஒலிப்பதுபோல 'மலைபடுகடாஅம் மாதிரத்தியம்ப' (ஙசஅ) என்றது காண்க; மலையில் விழுகின்ற அருவிகள் வெற்றிக் கொடிகள்போலத் தோற்றுமென்று குறிப்பித்தார். மலையின் இயல்பு இதனுட் கூறப்பட்டது போல் வேறெங்குங் கூறப்படவில்லை.

அருஞ்சொல் ஆய்தல்

[திரு. மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் B.A., L.T.]

(உளங-ம் பக்கத்தொடர்ச்சி)

மாடு:—இது விலங்கின் பெயர். 'ஆடு மாடு' என்ற அடுக்கில் வருவதைக் காணலாம். தலைமாடு கால்மாடு என்ற தொடரில் மாடு என்பதன் பொருள் பக்கமாகும். தலைப்பக்கம் கால்பக்கம் என்பது மதுவே. உலக வழக்கில் இங்ஙனம் இயல, செய்யுட்களில் 'மாடு' என்பது பொன் என்ற பொருளில் வழங்கிவரும். இப்பொருளிலேயே திருநாக்வுகரசர் 'மாடு தேடி மயக்கினில் வீழ்ந்து நீர் ஓடி எய்த்தும் பயனிலை ஊமர்காள்,' 'மாட்டைத்தேடி மகிழ்ந்து நீர் தம்முளே, நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்' 'வைத்த மாடு மடந்தை நல்லார்களும் ஒத்தொவ்வாத வுற்றார்களு மென்செய்வார்' என்றாற் போன்ற பல வடிகளில் வழங்குகின்றனர்.

கோள்ளை:—உலகவழக்கில் இச்சொல் திருடுதல், பறித்த லென்ற பொருளில் வரும். அங்ஙனம் பறித்தபொருள் மிகுதி காட்டற்கண் 'கொள்ளை கொள்ளையாய்க் கொண்டுபோதல்' என்ற அடுக்கு ஏற்பட்டுளது. பல வுயிரைப் பறிக்கும் நோய்க்குக்கொள்ளையென்றும், கொள்ளைநோயென்றும் பெயர் களுள. கம்பர் 'எள்ளுமேனலு மிறுங்குஞ் சாமையுங் கொள்ளுங் கோள்ளையிற் கொணரும் பண்டியும்' (இறுங்கு-சோளம், ஏனல்-பைந்தினை.) என்றும், 'வெண்டளக் கலவைச்சேறுங் குங்கும விரை மென் சாந்தும், குண்டலக் கோலமைந்தர் குடைந்த நீர் கோள்ளைச் சுற்றில்'' என்றும் அமைத்துளார்.

வெள்ளம்:—இச்சொல் தமிழ் நாட்டில் 'மிகுந்த நீர்' என்ப தைக் குறிக்கும். 'ஆற்றில் வெள்ளம்.' ஆற்றுக்கும் பெயராம். கடல் என்ற பொருளில் 'பாண்டி வெள்ளமே தெரிவரியபரம், என்றார் மணிவாசகனாரும். மலையாள மொழியில் அது நீர் என் பதைமட்டு முணர்த்தும். நாயர்கள் 'அடே வெள்ளம் கொண் டுவா' என்று கட்டளையிடுவதைக் கேட்டிருக்கலாம். சேனைப் படையைப் பேசுங்கால் வெள்ளமென்பது பேரெண் என்றபொ ருளில் வரும். இராவணன் சேனையை அளவிடுமிடங்களில் இச் சொல்லே மிகுதியாக வழங்கப்படுகிறது. இரண்டு பொருளிலும் இம்மொழி திருக்குறளிற் காணப்படும். 'வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு.' 'வெள்ளத்தனைய விடும்பை அறிவுடையான் உள்ளத்தினுள்ளக் கெடும்.'

நூல்:—'பருத்தி நூல்', 'பூணூல்' இம்மொழிகளில் நூல் பஞ்சிழையைக் குறிக்கும். நன்னூலில் நூல் இத்தகையது என்று ஒருவெண்பாவில் பவணந்தி முனிவர் கூறியுள்ளார்.

> 'பஞ்சுதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
> செஞ்சொற் புலவனே சேயிழையா—வெஞ்சாத
> கையே வாயாகக் கதிரே மதியாக
> மையிலா நூல்முடியு மாறு'

நூல்— பனுவல் (சாத்திரம்,) 'நவில்தோறும் நூல் நயம் போலும்', 'உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின் அமை வரண் என்றுரைக்கு நூல்'

களைகண்:—இம்மொழி உலக வழக்கிற் கண்டிலம். நூல் களிலே வந்துளது. இதன் பொருள் ஆதரவு, உதவி, பற்றுக் கோடாம். கம்பர் சடாயு கூற்றாகச் சொல்லிய செய்யுளொன்று இஃதாகும்.

'உய்விடத் துதவற் குரியா னுந்தன்
மெய்விடக் கருதாது விண்ணே றினன்
இவ்விடத் தினிஎெம் பெருமானன் எமைக்
கைவிடிற் பினையார் களைகண் ணுளார்'?

கட்டளை :—உத்தரவு, கற்பனை இப்பொருளிலே இச் சொல் வழங்கி வருகின்றது. எசமான் கட்டளை, 'அரசன் கற்பனை' உரைகல் என்ற பொருளில் வருங்கால் கட்டளையென்றும், கட்டளைக்கல்லென்றும் வழங்கக் காணலாம். நாயனார் 'சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்', 'தத்தங் கருமமே கட்டளைக் கல்' என்றார் புலவரும்.

துப்பு :—வாய்நீரை வெளியிடுதல், உமிழ்தல், துப்புதலாம். மறைபொருளைக் காண்பவன் துப்பாவான். உணவு என்ற பொருளிற் குறள் முறையிடும். "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயதூஉ மழை."

அந்தணர் :—குறளிற் கூறுமாறு 'அந்தணரென்பார் அறவோர், மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலால்' அறவோர் யாவர்? இல்லறத்தினரா, துறவறத்தினரா? துறவறத்தினராயின் பற்றற்ற துறவிகளுக்கு எவ்வுயிர் மேலும் விருப்பு வெறுப்பு கிடையா. இல்லற வாசிகளாயின் சிறந்த குளிர்ந்த தன்மையுடன் நடத்தலே கடமையாகக் கொண்டு உயிர்வதை செய்யாமலும், ஊனுண்ணாமலும், பசிப் பிணி நீக்குபவரும், விருந்தினரை ஓம்புநரும் யார்? 'எந்நாளுங் காப்பாரே வேளாளர்காண்.' மக்களையன்றி எவ்வுயிர்களையும் புரந்தருளும் பெரியாரே அந்தணராவர். கோலும் புல்லும் ஒரு கையிற் கூர்ச்சமும், தோலும் பூண்டு துயருறுபவர் அந்தணராவரா? திருஞானசம்பந்தரும் திருஆக்கூர்ப் பதிகத்தில் 'வேளாளரென்றவர்கள் 'வள்ளன்மையான் மிக்கிருக்குந் தாளாளர்' என்று கூறியுள்ளார். மக்கள் பொருளைப் பறிப்பாரும், தன்னயமே பெரிதாக நாடுவாரும் தம்மைத் தவிர்ந்த ஏனையரை மக்கட் பகுதியிற் சேர்ந்தவராக மதியாதாரும் அந்தணராவரா? கடவுள் அறவாழியென்றும், அந்தணனென்றும், கூறப்பட்டிருத்தல் பொருத்தமுடைத்து. கம்பர் அந்தணர் தொழில்களைக் கூறுகின்ற விடத்தில் மாதவத்தொழுகல், மறைகள் ஓதல், ஓதுவார்க்கு உதவல், உதவும் ஆற்றலுடைமை, (எரி ஈசன துரு வருக்கமாதலின்) மூஎரி வளர்த்தல் இவை சிறந்தனவென வற்புறுத்துகின்றனர். நச்சினார்க்கினியர் வல்லமையாக அந்தத்தை அணவுவோர் அந்தணரென்றனர். அழகிய குளிர்ந்த தன்மையுடையவர். (அம்-

தண்-அர்) அந்தத்தை எக்காலும் அணவி உயிர்கட்கு அந்தத்தைத் விளைப்பவர் எங்ஙனம் அந்தணராவர்? அந்தணர் நூலென்பது தமிழ் மறையேயாம்.

உழிதரல் :—தேவார திருவாசகங்களில் இச்சொல்லை அடிக்கடி காணலாம். இதன் பொருள் சுழலல், (சஞ்சரித்தல்) திரிதலாம். 'குவிமுலையார் நகை காணா துழிதர்வேனை,' 'தெத்தேயென முரன் றெம்முள் உழிதர்வர்' என்றனர் அப்பரடிகள். 'உழிதருகாலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும் உழிதரு காலத்த (நீடுவாழ்கின்ற) உன்னடியேன்'—(திருச்சதகம், அ.)

பஞ்சவடி:—இஃது ஒரு தலத்தின் பெயர். கம்பர் 'பனிதரு படிவ பஞ்சவடி யெனும் பருவச்சோலை' என்றனர். 'மயிர்ப்பூணநூல்' மற்றொரு பொருளாம். இதனை யணிபவர் உட்சமயத்தாரி லொருவராகிய மாவிரதியர். 'பருப்பதத்தைப் பஞ்சவடி மார்பினானை' என்றனர் அப்பரடிகள். சுந்தரமூர்த்திகளும் 'பாசுபதர் பஞ்சவடி மார்பினர்' என்றனர்.

பிணி :—நோய், பிறவிப்பிணி, பசிப்பிணி, பிணித்தல் - கட்டுதல். 'பிணித்த புன்சடையன்' என்றனர் திருஞானசம்பந்தர். சுந்தரரும் 'பிணியார் சடையர் மயானத்து' என்றுளார்.

கம்பன் :—கம்பையுடையவன் கம்பனென்றும், கம்புத்தோட்டத்தைக் காத்தவன் கம்பனென்றுங் கூறுவது வழக்கம். கம்பம் என்பதன் திரிபு கம்பனாயின் அது நடுக்க மென்ற பொருளில் வரும். 'தரணி கம்பிக்கிலென்' என்றனர் அப்பரடிகள். கம்பர்பெருமான் 'கம்பிக் கக்கரி,' என்றுளார். கம்பன், நல்ல கம்பன், பெரிய கம்பன், கள்ளக் கம்பன், வெள்ளக் கம்பன் என்ற தெய்வப் பெயர்களுமுள. 'உமை நங்கை மருவியேத்தி வழிபடப் பெற்ற பெரிய கம்பனை யெங்கள் பிரானை.' உருத்திரராற் பூசிக்கப் பெற்ற சிவலிங்கப் பெருமானுக்கு நல்ல கம்பனென்ற பெயருளது. 'உருத்திர னலத்தகு மொருமை பூண்டுயர், கருத்தொடு வழிபடு நல்லகம்பனை என்றார் காஞ்சிப் புராணத்தார். 'உமை நங்கை யென்று மேத்தி வழிபடப் பெற்ற நல்ல கம்பனை யெங்கள்பிரானை.' இதனால் ஏகாம்பர நாதனுக்கும், நல்ல கம்பனுக்கும் பேதமின்மை வெளிப்படை. விஷ்ணுவினாற் பூசிக்கப்பெற்ற சிவலிங்கப் பெருமானுக்குக் கள்ளக் கம்பன் என்று பெயர். 'வெள்ளங்காட்டி வெருட்டிட வஞ்சி வெருவியோடித் தழுவி வெளிப்பட்ட கள்ளக்கம்பனை எங்கள் பிரானை.' காஞ்சிப் புராணத்தில் திருவேகம்பப் படலத்தில் 'மருள்புரி கருத்தினன் மாயன் ஏத்தலும், கருதும் அப்பெரிய

கள்ளக்கம்பனை' என்று கூறப்பட்டுள்ளது. பிரமனால் பூசிக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு வெள்ளக்கம்பன் என்பது ஒரு பெயர். 'வாலிய சிந்தையான் மலர்ப் பொகுட்டனை, மேலவன் வழிபடு வெள்ளக் கம்பனை' என்றதுங் காஞ்சிப்புராணத்தில் ௯௪ படலத்தில் ௮௨ - வது செய்யுளாகும்.

கன்னல் :—இது கரும்பு, சர்க்கரை யென்ற பொருளில் வரும். மணிவாசகனார் 'தேனைப் பாலைக் கன்னலின் தெளியை' என்றுள்ளார். இது நாழிகைக்கும், நாழிகை வட்டிலுக்கும் பெயராம். நைடதம் சுயம்வர காண்டத்திற் கணிதநூல் வல்லுநர் ௯௪ வட்டிலில் நாழிகை இவ்வளவென்று தெரிவாரெனக் கூறப்பட்டுள்ளது, "மழைமதர் நோக்கி மன்றல்செய் காலை வல்லவர் கன்னலிற் றெரிவர்."

"தமுள்" மொழியின் கடவுட்டன்மை

[திரு. ச. நாகலிங்கம்]

(உ௱௰-ம் பக்கத்தொடர்ச்சி)

இத்தகைய பொதுத்தன்மை எம்மொழியாளராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாய், நாமெடுத்தாளும் "தமுள்" என்னும் பெயரினும் அமைந்திருப்பதைப் பிறர்தம்வாய் நுண்பொருள்காண வல்ல அறிவுடையார் கண்டு மகிழ்வாராக.

இனி, "தமிழ்" என்றால் "இனிமை" என்று பொருள் கொள்பவர்க்கும் ' தமுள்" என்பதின்கண்ணுள்ள "உள்" எனுமடியே பொருத்தமான கருத்தைக் கொடுக்க வல்லதென்றித் "தமிழ்" என்பதிலுள்ள "இழ்" என்னும் அடிகொடுக்க வல்லதாகத்தெரியவில்லை. ஏனெனின், இனிமையென்பது மக்களகத்தே நிகழும் உள்ள நிகழ்ச்சியாதலினென்க.

"பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பினான் மெல்ல மெல்லவுள்ள
வரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே"

என்னும் அருணகிரியார் மொழியும் ஈண்டு உள்ளற்பாலது. இனி அன்பு எனும் பொருளோடொற்றுமையுடைய "சிவம்" எனும் பொருளும் "உள்" எனும் அடியைத் துணைக்கொண்

டெழுந்ததென்று கொள்வதே பொருத்தமுடைத்து. அஃதும் உள்ள நிகழ்ச்சியின்பாற் படுமாகலின். எனவே, எம்முன்னோர் வாழ்க்கைத்துறைகளனைத்திலும் பிறரின் உதவிவேண்டி நில்லாத பல்லாயிர ஆண்டுகட்குமுன்னே தமது உயரிய நிலைக்கேற்பத் தாம் வழங்கிவந்த மொழிக்குப் பரந்த நோக்குடைய "தமுள்" எனும் பெயரீடுகொடுத்து அழைத்துவந்திருக்கவேண்டுமென் பதும், அவர்களின் வழிவந்தமக்கள் அவ்விழுமிய நிலையினின் றுங் கீழிறங்கியகாலத்தே அப்பெயரீடானது திரிந்து "தமிழ்" என்னும் எம்மனோரால் இக்காலத்து நிலைக்கும் ஏற்பவழங் கப்பட்டு வருகிறதென்பதும், நடுவுநிலை பிறழாது உய்த் துணர்ந்துபார்க்க வல்லார்க்கு இனிது விளங்கும்.

இன்னும் எமது மொழியானது தன்னை வழங்கிவருபவர் களின் நிலைகளுக்கேற்பத் "தமுள்" என்னும் உருவையும் "தமிழ்" என்னும் உருவையுந் தாங்கிநின்று பயன்பட்டு வருதலின்

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்
பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்
பெற்றியனே"

என்னும் மணிவாசகனார் இறைவன் றன்மையைப்பற்றிக் கூறி யிருக்குங் கூற்றுக்கு மெடுத்துக்காட்டாக நின்று நிலவி வரு முண்மையையும் உய்த்துணர்ந்துகொள்க.

இன்னும் எம்மொழியானது, பிறமொழிகள்போலாது

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேம்நஞ் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட் டிலேம்"

என்னுங் கூற்றிற்கிணங்கப் பண்டும் இன்றும் என்றும் நின்று நிலவும் பெற்றியெய்தி யிருப்பக்காண்டலானும், அதுபிறப்பிறப் பில்லா முழுமுதற் பொருளின் தன்மை யெய்தி யிருப்பதையும் நுனித்துணர்ந்துகொள்க.

இதுகாறுங் கூறியவாற்றால் மொழிகளுள் ஒரு சிலகடவு ளாலும், இன்னுஞ் சில மக்களாலும் ஆக்கப்பட்டனவென்று கொள்ளல் நடுவுநிலையின் பாற்படாதென்பதும், கடவுளாலாக்கப் பட்டதென்னுங் காரணங்கொண்டு மொழிகளின் உயர்வு தாழ்வு கற்பித்தலமையாதென்பதும், கடவுட்டன்மை என்னும் பொதுத்

தன்மையை ஒப்பிட்டுப்பார்த்து அப்படிச்செய்தல் ஒருவாற்றான் பொருத்த முடைத்தென்பதும், அப்படி ஆராய்வுழி "தமிழ்" என்னும் பெயர் எமது மொழிக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட பெயராக விருக்கவேண்டுமென்பதும், எம்முன்னோர் இருந்த உயிரிய நிலைக்கேற்ப அவர்தம் மொழியும் பொதுநோக்குடைய "தமுள்" என்னும் பெயரா னழைக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதும், இப்பெயரான் உலகிலுள்ள எம்மொழியையும் அழைத்தலமையுமென்பதும், இத்தன்மை இயல்பின் பாற்படுமென்பதும், இன்னும் எம்மொழியானது கால நிலைக்கேற்ற வடிவுதாங்கி நிற்குமாற்றலுடைய தென்பதும் பிறப்பிறப்புக் கற்பித்தலமையா இறைத்தன்மை யமைந்துள்ளதென்பதும் எம்மாலியன்றவரை எடுத்து விளக்கப்பட்டது.

"தமுள்" மொழி பேணுந் தொண்டர்க்கோர் வேண்டுகோள்.

அடியேன் தாய்மொழியிற் புலமையுடையவனல்லன். ஆங்கில மொழியிலும் வயிற்றுப் பிழைப்புக்குப் போதிய வளவுக்கன்றி நுண்பொருளாராய்ச்சி வல்லபுலமையுடையவனல்லன். பிறமொழிகளிலோ கஞ்சிக்குட் பயிறுபோட்ட வளவேனும் பயிற்சியுடையனல்லன். இப்படிப்பட்ட நிலையினின்றும் இக்கட்டுரையை வரையத் துணிந்தது எவருக்கும் பெருவியப்பினை விளைக்கும். சிறந்தநூற்பயிற்சி யில்லாவிடினும் எமது மக்கள் நிலையைப்பற்றிப் பல துறைகளிலுங் கவனித்து எமக்குள் உணர்ந்துணர்ந்து காரணங் கண்டுகொள்ள வேண்டுமென்னும் வேணவாவினால் விழுங்கப்பட்டமையே இக்கட்டுரை எழுந்ததற்குக் காரணம். இப்படி உணர்வுமிக்கு வருநாளில் எமது நாட்டின் ஓர் பகுதியில் தம்முளுணரும் ஆற்றல் மிகவாய்க்கப் பெற்றவரும், உலகிலுள்ள பற்றுக்களனைத்தையும் ஒருங்கே விட்டவரும், எல்லா உயிர்களினிடத்துஞ் செந்தண்மை பூண்டொழுகுபவருமாகிய வள்ளுவரின் இலக்கணத்துக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வரும் ஓர் அந்தணரின் பெருமையைப்பற்றி யறிந்து அப்படி யறிந்த நாட்டொடங்கி அப்பெரியாரை அடிக்கடிகண்டு பயனெய்தி வருவது அடியேனின் வழக்கம். அந்நாட்களொன்றில் நிறைமொழி யுடைய அப்பெரியார் தமதுணர்வின் வன்மையால் அடியேனது உள்ளத்தெண்ணத்தையறிந்து தமதாணையிற் கிளந்த மறைமொழியாக எடுத்துரைத்துவிட்ட மந்திரமொழியே இக்கட்டுரையில் அடியேனால் எடுத்தாளப்பட்ட "தமுள்" எனுஞ்சொல். நூலறிவு இல்லேனெனினும் இயற்கையறிவின் வழியுணர்ந்து பார்க்கும்பொழுது "தமுள்" எனும் பெயரே எமது மொழிக்குப் பொருத்த முடையதென அடி-

யேற்குத் தெரிகிறது. இதை எல்லாரும் ஆராய்வின்றி ஒத்துக்கொள்ள வேண்டுமென்னும் கொள்கை அடியேற்குச் சிறிதுமின்று. அறிவாற்றல்களான் மிக்க அறிஞர் இதைப்பற்றித் தம்முளுணர்ந்து பார்த்துச் சரிவரின் ஏற்புக. இன்றேல் விடுக. இக்கொள்கையை வலியுறுத்த வேறுசான்றுகள் கிடைப்பின் அடியேற்குத் தெரிவித்து அடியேனை மகிழ்வடையச் செய்தல் அறிவுடையார் கடன். அழகும் அன்பும் அருளும் நிறைந்து விளங்கும் ஆதி இறை யருள்சுரக்க.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

> "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

> "எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
> நுண்பொருள் காண்ப தறிவு"

> "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
> ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
> உற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கட்
> குற்றமுந் தோன்றாக் கெடும்"

கனியிருப்பக் காய்கவர்தல்

[திரு. இராமசாமி பிள்ளையவர்கள்]

இது திருவள்ளுவரருளிய திருக்குறளில் இனியவைகூறல் என்னும் அதிகாரத்தின் ஈற்றுப்பாட்டின் இறுதியடியிலுள்ள சொற்றொடராகும். இச்சொற்றொடரை இவ்வதிகாரத்தில் வைத்தது நினைந்து நினைந்து மகிழ்தற்குரித்து. "கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே" என்ற அரசுகள் திருமொழியும் இப்பொருள்பற்றியே யெழுந்தது. 'கனியிருப்பக் காய்கவர்தல்' என்னும் இச்சொற்றொடர் பிறிது மொழிதலணியாய் நன்மையை விட்டுத் தீமையைக்கொள்ளல் என்னும் பொருளிலேயே ஆட்சிபெறுவது. ஆதலின் அத்தன்மைத்தாக மயங்கிப் பொருள்கொள்ளும் நந் தமிழ் மக்களின்மேல் வைத்து முறையே கூறுதும்.

தமிழ் என்னுஞ் சொல்லைப் பலர் பலவாறாகப் பொருள் கூறுகின்றனர். சிலர் திராவிடமென முன்வழங்கி, பின் அச்

சொல் திரமிளமென்றாகி, தமிளம் என்று திரிந்து நாளடைவில் தமிழாயிற்றென்றும், இன்னுஞ் சிலர் தமில் என்று வழங்கிப் பின்னர்த் தமுள் என்றாகிப் பின்பே தமிழாயிற்றென்றுங்கூறுப. உலகிற்பிறந்த உயிர்களும் முதன்முதற் குழவியாக இருந்து இளமைக்காலம் நண்ணிக் கிழக்காலம் வந்துறுகின்றது. எவ்வெக் காலத்து எவ்வாறு கொள்ளுதல்வேண்டுமோ அவ்வாறு கொண்டு "பெரியதனுவி பெரிது" என்றபடி போற்றலே அறிவுடைமையாகலின் எஃது எவ்வாறு திரியினுந்திரிக. இப்பொழுது வழக்கிலிருப்பது தமிழென்பதே. தமிழ் என்னுஞ் சொற்கு இனிமையென்றே பல்லான்றோரும் பொருள் கூறுகின்றனர். "தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" யென்ற கம்பநாடர் திருமொழியும், "மறம்பயின்றதெங்கோ தமிழ்மாருதம்" என்ற தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழார் பெருமான் கடவுண் மொழியும் இப்பொருட்டாதலறிக.

தமிழ் என்பது தமிழு என்பதே. அதுமொழியென்னுஞ் சொல்லோடு புணரும்போது நிலைமொழியீற்றினின்ற உகரங் கெடத் தமிழ்மொழி யென்றே புணரும். பின்னரே வழக்கில் வந்து வந்து தமிழ் என நின்றது. தமிழு என்ற சொல்லை யொத்த சிலமுற்றியலுகரச் சொற்கள் வந்து வழங்குவன இரண்டொன்று எடுத்துக்காட்டுதும். கூழு, ஏழு, நெல்லுமுதலிய சொற்கள் பானை, கடல், பொரி யென்னுஞ் சொல்லோடு புணரும்போது கூழ்ப்பானை, ஏழ்கடல், நெற்பொரி என ஈற்றுகரங் கெடவே புணரும். எனவே தமிழு என்பதே அதன் இயற்கையான சொல்லென்பது விளங்குகின்றது.

இனி தமிழு என்ற சொல்லைத் தம் + இழு என இரு சொல்லாகப் பிரித்துத் தம்—தம்மிடத்தே இழு—இழுத்தலையுடையது என்க. இழுத்தல் என்ற தொழிற்பெயர் தல்விகுதி கெட்டு இழு என முதனிலையோடு நின்றது. யாரேனுமொருவர் கேட்டவளவினுமே அவர்களைத் தனது இனிமையாலேயே தம்மிடத்தேயிழுப்பது என்பதுதான் அதன் சிறப்புடைப் பொருளெனச் சிறியேன் சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது. இனிமையில்லையேல் இழுக்கமுடியாதன்றோ? இவ்விழுத்தலாகிய இனிமையென்பது கொண்டே புலமை மிக்க நம் ஆன்றோர் அதற்குத் தமிழு என்ற பெயரிட்டனர்போலும். இவ்வாறு பொருள் கொள்ளுதலை விட்டு விட்டுச் சிலர் பார்ப்பனமக்கள் வெற்றுரையை நம்பித் திராவிடமென்ற சொல்லே இவ்வாறாயிற்றென்று கூவிக் கனியிருப்பக் காய்கவர்தல் நன்றோ கூறுமின்!

உலக வழக்கில் திருக்குட நீராட்டல் 'கும்பாபிஷேகம்' என்றும், குளித்தல் 'ஸ்நானம்' என்றும், குடித்தல் 'பானம்' என்றும், மனைவி, பெண்டாட்டி, 'பாரி' என்றும், உடன் தோன்றினார் 'சகோதரர்' என்றும், தண்ணீர் 'ஜலம், தீர்த்தம்' என்றும், திருமணம் 'விவாகம்' என்றும், இறுதிக்கடன் 'கர்ம கிரியை' என்றும், சோறு 'அன்னம், சாதம்' என்றுங் கற்றார் முதற் கல்லாதார் ஈறாக வழங்குவதோடு சங்க நூல்களைப் பின் பற்றாத பிற்காலப் புலவர்களும் தாம் பாடிய உலா, மடல்தூது, லம்பகம், அந்தாதி, கோவை, மாலை முதலிய சிறுநூல் களினும், இராமாயணம், பாரதம் முதலிய தொடர் நிலைச் செய்யுள் நூல்களினும் நூற்றுக்குத் தொண்ணூறு வடசொற் களைப் புகுத்திப் பாடி இளமை மணமாறாத தமிழ்ச்சொற்களின் சீரிய வனப்பைக் கெடுத்து மாய்த்தனர். அவரை நாமும் பின் பற்றி அவர் நூற்றுக்குத் தொண்ணூறு சொற்கள் வழங்கினால் நாம் நூறாயிரம் சொற்களை அளவின்றிச் சேர்த்துத் தமிழுரு வேயில்லாது செய்து விடுவதோடு போதாக் குறைக்கு ஆங் கிலத்தையும் கலந்து வழங்கிக் கனியிருப்பக் காய் கவர்தலால் நலனென்னை! சொல்லுமின்.

கருவூர்த் தேவர்

[திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள்]

(௨௨௪ - ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு கலந்தபின்னர் உயிரானது இறைவனது ஆனந் தத்திலேயே மூழ்கி நிற்பதல்லது வேறொன்றினையும் அறியாது. அது மட்டோ, அவ்வாறு நிற்கும் தன்மையையும் அறியும் ஆற்றல் இல்லையாய் நிற்கும் என்பதை,

"சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்"

என்று விளக்கியருளினார். இன்னும் இங்கே,

"பனுவற் படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி"

என்ற விடத்துப் பெரியபுராணத்தில் கண்ணப்பநாயனார் புரா ணத்தில்............தாமும்,

"பேணாதத் துவங்களென்னும் பெருகுசோ பானமேறி
ஆணையாஞ் சிவத்தைச்சாரா வணைபவர் போல" (103)

என்ற திருப்பாட்டின் கருத்தும் அந்தப் புண்ணிய சரித்திரத்தின் பின் நிகழ்ச்சியும் நமது நினைவுக்கு வாராமற்போகா.

சிவபெருமானுக்குச் சூரியன், சந்திரன், உயிர், ஐந்துபூதங்கள் ஆகிய எட்டுமே திருமேனியாக உள்ளன என்பதனையும், இவை எட்டினையும் தமது உருவாக இருக்க அட்டமூர்த்தங் கொண்டு சிவபெருமான் விளங்குகிறார் என்பதனையும்,

" அம்பரா ! அனலா ! அனிலமே ! புவிநீ !
அம்புவே ! இந்துவே ! இரவி !
உம்பரா லொன்று மறிவொணா வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே !"

முகத்தலை..............(9)

என்ற திருவிசைப்பாவிலே தேவர் அழகாக விளியடுக்குகளாலே விளக்கி யருளி யிருக்கின்றார்.

"போற்றிநின் கருணைவெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவு ளானே"

திருவாசகம், திருச்சதகம் (63)

"எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே"

திருஞான, தேவாரம். திருவாலவாய். கௌசிகம். (2)

என்பனவாதி திருவாக்குகளின் பொருளையும் காண்க.

"சுருதிவா னவனுந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பிலிந் திரனும்
பருதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனு மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனு மெயில்கண்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (5)

என்ற திருவிசைப்பாவிலே சிவபெருமானே தேவதேவன் என்பதும், அவனே முழுமுதற் கடவுள் என்பதும், எல்லாத் தெய்வங்களும் தானேயாகி அவர்களை இயக்கி ஆட்டுவிக்கின்றவன் என்பதும்,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்"

என்ற திருவாக்கின்படி பின்னும் புதிது புதிதாக எவ்வெவ்வுரு வில் யார் யார் எண்ணுகின்றார்களோ அவ்வவ்வுருவில் அங் கங்கே வந்து அருளுபவன் சிவபிரான் ஒருவனே என்பதும் அழகாக எடுத்துக் காட்டப்பெற் றிருக்கின்றது.

"ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்"

என்ற எமது அப்பமூர்த்திகளது அருளிப் பாட்டையும் இங்கே நாம் ஞாபகப் படுத்திக் கொள்ளலாம்.

எனவே சிவபெருமானே எல்லாவற்றுக்கும் மூலகாரணன் என்பது இதனாற் பெறப்படும்.

"அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோ
ரண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டவூ னுனக்காம் வகையென துள்ள
முள்கலந் தெழுபரஞ் சோதி" கங்கை ....(6)

என்ற திருவிசைப்பாவிலே சிவபெருமான் பெரியதிற் பெரிய னாயும், சிறியதிற் சிறியனாயும் விளங்கும் தன்மை அரிதிற் பேசப் பெறுகின்றது.

இஃது

"அணோரணீயாம் மகதோர் மகீனும்"

என்ற வேதவசனக் கருத்தை வெளியிட்டு நிற்கிறது. இக்கருத் தையே யன்றி

"அண்டங்களெல்லா மணுவாக
அணுக்களெல்லாம் அண்டங்களாகப்
பெரிதாய்ச் சிறிதாயினனும்"

என்பதாதிப் பல இடங்களிலே பிற்காலத்துப் பல பெரியோர் களும் எடுத்துப் பேசிப் பரமசிவனது இறைமைத் தன்மையைப் பாராட்டித் துதித்திருக்கின்றனர்.

"கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே
கறந்துபுக் கொடுங்கினேற் கங்கண்
நுண்ணியை யெனினும் நம்ப நின்பெருமை
நுண்ணிமை யிறந்தமை யறிவன்" பூதனம்....

"...............................அருவி
மலங்கலங் கண்ணிக் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே" (9)

"நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுண்ணிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே" (9)

என்பனவாதி திருவிசைப்பாக்கள் கண்ணினுள்ளே மணிபோல உயிர்களுக்குள்ளே உள்ளுயிராய்க் கலந்து சிவபெருமான் மறைந்து நின்று உயிர்களுக்குக் காட்டி நிற்கின்ற அத்துவிதக் கலப்பினை உவமான வகையிலே வைத்து விளக்குகின்றன. இறைவன் காட்டுங் கருத்தாவாகவும் உயிர்கள் அவன் காட்டக் காணும் கருத்தாக்களாகவும் உள்ள தன்மையையும் இவை காட்டி நிற்கின்றன.

"காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

எனவும்,

"கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்"

எனவும் வரும் வாகீசத் திருவடிகளின் திருவாக்குகள் இங்கு நாம் ஊகித்துணரற் பாலன.

"உள்ளங் கவர் கள்வன்"

"உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து
நின்ற கள்வன்"

எனவும்,

பெரியார் பேசியபடி சிவபெருமான் அளவிறந்த பெருமையனாயினும் மிகச் சிறிய அணுத்தன்மை வாய்ந்த உயிர்க்குள்ளும் உளத்தினுள்ளும் தன்பெருமை காணப்படாமல் நுழைந்து ஒளித்து நிற்கும் திறமும், தான் உயிர்க்கு எல்லாவற்றையும் காட்டி நிற்பானாயினும், இவன்தான் காட்டுகின்றான். இவனை
ன்றி நாம் காணும் வகையில்லை என்று அறிய முடியாதபடி
றைந்து நிற்கும திறமும் இத்திருவிசைப்பாக்களிலே அருமை
ப்ப் பேசப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு இறைவனது
எல கணங்களைப் பேசி நின்ற தேவர் அவ்விறைவனே குரு
பதுட வந்து உயிர்களுக்கு அருள்செய்யும் திறங்களையும் வகுத்
எங்க ருக்கின்றார்.
என்பது

"உன் கைத்தலமடியேன் சென்னிமேல் வைத்த
கங்கைகொண்ட சோளேச்சரத்தானே" (8)

"உங்கைகொண் டடியேன் சென்னி வைத்தென்னை
யுய்யக்கொண் டருளினை" கங்கை (10)

என்ற திருவாக்குகள் சிவபெருமான் குருவாக வந்து உயிர்களின் பக்குவம் நோக்கி அருள்செய்யும் முறைகளைக் குறிக்கின்றன.

"முழங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழக்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளு
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா னந்த
வெள்ளமா யுள்ளமா யினையே" (2)

இத்திருப்பாட்டிலே சிவபெருமான் தன்னை யறியும் உணர்வாகிய சிவஞானத்தை முதல் தகுதியுள்ள உயிர்களுக்கு உயிர்க்குள்ளே இருந்துகொண்டு உண்முகமாக வெளிப்பட்டும் உணர்த்தியருளுகின்ற தன்மை குறிக்கப்பெற்றிருக்கின்றதாகும். பின்னும் இப்பாட்டிலே "உள்ளமாயினை" என்றமையாலே இறைவன் உயிர்களின் சிவபுண்ணிய மேலீட்டினாலும் பக்குவத்தாலும் அவையே தானாய் நின்று அவற்றின் செயல் யாவும் தமது செயலாகச் செய்தருளுகின்ற நிலை குறிக்கப் பெற்றதாம்.

"நிச்சமென நெஞ்சின்மன்னி யானாகி நின்றானே"
திருவாசகம் - உயிரு—(9)

என்ற திருவாசகமும் இங்கே ஒப்பு நோக்கற் பாலதாம். முதிர் நிலையுடைய உயிர்களைப் பரமன் தானாக ஆக்குகின்றான். அதாவது தனது தன்மைகளையே அவையும் உடையனவாக ஆக்குகின்றான். அவ்வாறாக்கியபின் அவ்வுயிர்களே தானேயாகவும் நிற்கின்றான்.

"சித்தஞ் சிவமாக்கி"

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி"

என்பனவாதி திருவாசகத் திருவாக்குகளையும்,

"சேர்வார் தாமே தானாகச் செயுமவ னுறையுமிடம்"
(திருஞானசம்பந்தர், திருக்கழுமலம், திருத்தாளச்சத்தி,
வியாழக்குறிஞ்சி (7)

என்ற திருவாக்கினையும் இன்னும் இவைபோல்வன பலவற்றையும் இங்கு நாம் உய்த்துணரலாம்.

"அவனே தானே யாகிய வந்நெறி
யேகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"

என்ற சிவஞானபோதப் பத்தாஞ் சூத்திரத்தானும்,

"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"

என்ற பதினோராஞ் சூத்திரத்தாலும் பெறப்பட்ட உண்மைகளை இவை விளக்கி நிற்பதும் காணலாகும்.

"வழங்குதேன் பொழியும் பவளவாய்"

என்றமையால் ஞான உபதேசம் செய்யும் குருவின் வாயினை வழுத்திப் பாராட்டியதாயிற்று.

உணர்வுநூல் என்றமையால் உணர்வுகொண்டு காணத்தக்க முடிந்த முடிபுகளாகிய உண்மைகளைத் தரும் ஞானநூலாகிய சிவஞானபோதம் சுட்டப்பெற்றதாம்.

ஈண்டே குருவருள் ஆகிய எட்டாஞ் சூத்திரக் கருத்தும் இனிது இயம்பப் பெற்றதாகும்.

"................வீங்கிருள் நடுநல் யாமத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல் செய்காதில்
ஐயசெம் பொற்றோடு........." (2)

"..................தூங்கிருள் நடுநல் யாமத்தென்
மனனிடையணுகி நுணுகியுள் கலந்தோன்........." (3)

"..................தூங்கிருள் நடுநல் யாமத்தே
யருள்புரி முறுவல் முகிழ்நிலா வெறிப்ப....... (5)

"......நெஞ்சமிடர்படாவண்ணந் தூங்கிருள் நடுநல் யாமத்தோர்
மழலை யாழ்சிலம்ப வந்தகம் புகுந்தோன்........" (7)

"......எண்ணில் புன்மாக்கள் உறங்கிருள் நடுநல் யாமத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர்
விளக்குங் கலந்தெனக் கலந்து........" (10)

திருவிடைமருதூர்.

எனவரும் திருவிசைப்பாக்களில் உலகமெல்லாம் துஞ்சி நிற்கும் கள்ளிரவின் நடுயாமத்திலே இறைவன் தமக்கு அருளியவற்றைத் தேவர் பாராட்டிப் போற்றுகின்றார். இஃது குறிக்கற்பாலதோர் அரிய பொருளாகும்.

(தொடரும்)

இதழொலிகளைப்பற்றிய குறிப்பு

[திருக் கபசம் எழுதியது]

(உ௲உ-ம்—பக்கத்தொடர்ச்சி)

முடிவு, துணிவு, பிரிவு என்ற சொற்களின் ஈற்றுகரம் புணர்ச்சியிற் குற்றுகரத்தன்மை காட்டும். 'முடிவின்பம்', 'துணிவொன்றி', 'பிரிவாற்றாமை' என்பவற்றில் வருமொழி முதலிலுள்ள உயிர்முன் இவ்வுகரம் நீங்குகின்றது. இது குற்றுகரமாயினும் முற்றுகரமாயினுமாக; ஈண்டு நோக்கற்பாலது இச்சொற்களிலுள்ள உகரமேறிய வகரமே. இந்த வகரத்தை எழுத்துப்பேறாகக் கொள்ளவேண்டுமென்று முன் குறித்தோம். எழுத்துப்பேறென்று பெயர் கொடுப்பதால் வகரந்தோன்றுமிந் நிகழ்ச்சி விளக்கம் பெற்றுவிடவில்லை. அவ்வெழுத்துப்பேறு தான் இச்சொற்களில் வரவேண்டியதேனென வினவினால் விடையொன்றுமில்லை. உடம்படு மெய்யைப்பற்றிக் கூறுங்கால், அவை இன்னவை, இன்னவிடங்களில் தோன்றுபவை, என்றொன்றுங்கூறாது விடுத்தார் தொல்காப்பியனார். நிலைமொழி ஈற்றில் இகர, ஈகார, ஐகாரங்கள் வரின் யகரமும், பிற உயிர்கள் வரின் வகரமும் உடம்படு மெய்களாகத் தோன்றுமென்று உரைகாரர் மொழிந்தனர். அதுகொண்டு, "இ, ஈ, ஐ வழியவ்வும்" என்று பின்வந்தவர் கட்டளை செய்தனர். "இ, ஈ, ஐ வழியவ்வும்" என்று சொல்வதன் இயைபு நமக்குத் தெரியும். ஐகாரத் தோற்றத்தில் யகரமிருப்பதோடு அதன் வடிவிலும் யகரம் பார்வைக்குத் தெரியும்படி அமைந்து கிடக்கின்றது. ஆனால், தொல்காப்பியர் இதை அறியாதிருந்தனர் என்று சொல்ல

லாகுமோ! ஆதலின், எழுத்துப்பேறு என்று எளிதிற் கூறப்படும் இவ்வகரம் கற்றோரது ஆராய்ச்சிக்குரியது.

முடிவு என்பது முடிபு என்றும் வரும். வகரமும் இதழொலிகளானமையின் அவை ஒன்றோடொன்று விரவும். ஆனால், இடை எழுத்தாகிய வகரத்திற்கும், வல்லெழுத்தாகிய பகரத்திற்கும் பொருளில் வேற்றுமையுண்டு. முடிபு என்ற சொல்லால் குறிக்கப்படுங்கருத்து, முடிவு என்பதிலுள்ள கருத்தைவிட உரமுள்ளது; 'முடிப்பு என்ற பகர ஒற்றுடன் வருஞ்சொல் இன்னும் உரமுடையது.

துணி—துணிவு,—துணிபு—துணிப்பு
அள—அளவு—அளபு—அளப்பு

எனவருஞ் சொற்களையும் நோக்குக. 'கல' எனும் அடியாகப் பிறக்கும் கலவி, கலவை, கலப்பு என்ற மும்மொழிகளில், கலவி, கலவை என்பவற்றின் பொருளிலுள்ள நுட்பம், கலப்பு என்ற சொல்லிலில்லை. வகுப்பு, பகுப்பு; வழக்கம், பழக்கம் என்ற சொற்களாலும், வகரத்திற்கும் பகரத்திற்குமுள்ள பொருள்வேற்றுமை விளங்கும்.

வகரம் பகரமாதலேயன்றி மகரமுமாகும். மூன்றுமிதழொலிகளானமையால் அவை ஒன்றோடொன்று கலக்கும். 'குவி' என்ற முன்னிலை கூட்டு, திரட்டு என்று பொருள் தரும். இப்பொருளில் அது குமி என்றும் வரும். முதல்வன் முதல்வி—செல்வன், செல்வி என்று ஆண்பால் பெண்பாற் பெயர்களமைந்திருப்பதுபோல, சிறுவன்—சிறுவி என்றுதான் வரவேண்டும். ஆயினுமது, சிறுமி என்றுதான் பெரும்பான்மை வழங்குகின்றது. 'அவன் வந்தானோ என்னவோ' என்பது பேச்சில் 'அவன் வந்தானோ என்னமோ!' என்று வருகிறதை எல்லோருமறிவார்கள். 'வானம்' என்பதை 'மானம்' என்று சொல்லும் வழக்குமுண்டு. 'விழித்தான்' என்ற முற்றுப்பேச்சில் 'முழித்தான்' என வருங்கால், வகரம் மகரமானதோடு மற்றொரு மாறுதலும் நேருகின்றது. வகரம் மகரமானபின், 'விழித்தான்' என்பது 'மிழித்தான்' என வரவேண்டியதிருக்க, 'முழித்தான்' என்பது எங்ஙனம் வந்தது? வகரம் மறைந்தபின் அது தன் உயிர் நண்பனாகிய உகரத்தை மகரத்தின்மேலேற்றுகின்றது. மகரத்தின்மேல் இகர ஈகாரங்கள் ஏறிவருஞ் சொற்கள் சிலவற்றை எடுத்துக்கொள்வோம். விடு என்பது உடு என்றும், விழுந்தான் என்பது உழுந்தான் என்றும், வீடு என்பது ஊடு என்றும் வரும். இவற்றால் உகர, வகர, மகரங்க

ளுக்குள்ள பிறப்பொற்றுமை வழக்கில் தெளிவாக விளக்கப் படுதல் காண்க.

'குவி' எனும் அடியிலிருந்து, 'குவியல்' என்ற பெயர் வருவது அறிதற்கெளிது. குவியல் என்பதற்குத் தெலுங்கில் 'குப்ப' என்று சொல்வர். தமிழிலும் 'குப்பல்' என்றொரு சொல்லுண்டு. 'குவியல்' என்ற பொருளில வரும் 'கும்பை' என்ற மற்றொரு தமிழ்ச் சொல்லுமுண்டு.

"குன்றெனக்குவைஇய குன்றுக்குப்பை"

(பொருநராற்றுப்படை, 244)

இவ்வடியில் 'குப்பை' என்பது நெற்குவியலைக்குறித்தது.

"கொள்ளும் பயனில்லை குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை"

என்ற நாலாயிரச் செய்யுளில், 'குப்பை' என்பது சாம்பற்குவியலைக் குறித்தது. இக்காலத்தில் 'குப்பை' என்பது இழிபொருளையே தரும். 'குவி' என்பதற்கு மற்றொரு பொருளுமுண்டு. இப்பொருளை 'மலர்குவிந்தது', 'கைகுவித்தான்' என்பவற்றிற் காணலாம். 'கைகுவித்தான்' என்பது 'கைகூப்பினன்' எனவும் வரும். ஆதலின், குவித்தல், கூப்பல் ஆகிய இரண்டும் ஒன்றே. கூப்பல் என்பதுடன் தொடர்புடைய 'கூம்பு' என்றொரு சொல்லுமிருக்கிறது.

'கொக்கொக்கக் கூம்பும் பருவத்து'

என்ற குறளில், கூம்பல் ஒடுங்கியிருத்தலைக் குறிக்கும். இங்ஙனம் வகர, பகர, மகரங்கள் ஒன்று மற்றொன்றாய்த் திரிவதால் ஒரே அடிப்படையான பொருளைக்கொண்டு பிறக்கும் பற்பல சொற்கள் உண்டாகின்றன. குவி, குவை, குவவு, குவ்வு கும்பு, கூம்பு, கூப்பு, கும்பிடு, குப்பை என்ற சொற்களிலெல்லாம் ஒரே முதற்கருத்து இருப்பது காண்க. இவ்வாறே, செம்மை, செம்மல், செப்பம், செம்பு, செவ்வை, செவப்பு (சிவப்பு) என்ற சொற்கள் தோன்றுகின்றன.

(தமிழ்) கொழுப்பு	—	(தெலுங்கு)	கொவ்வு
,, கொம்பு	—	,,	கொம்மு
,, இருபது	—	,,	இரவய்
,, நோவு	—	,,	நொப்பி

என்று வருவனவற்றை உற்று நோக்குக. தமிழிலுங்கூட 'இருபது' என்பது 'இருவது' என்றுதான் பேச்சில் வரும்.

'நோவு' என்பதும் 'நோப்பாளம்' என வரும். 'உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம்' என்ற பழமொழியில் இச்சொல்வருவது காண்க. 'வெற்றிலை' என்ற தமிழ்ச் சொல் 'பெற்றிலை' என்றாகி ஆங்கிலத்தில் பீட்டல் (Betel) என நிற்கின்றது. வண்டி என்பது தெலுங்கில் பண்டி என்று வரும். 'வல்' எனும் முன்னிலையடியாகப்பிறக்கும் வலம், வல்லமை, வன்மை என்பவற்றுள் வலம் என்ற சொல் 'பலம்' என வந்ததென்று கொள்வதில் தவறு யாது? பலம் என்பது வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்த சொல்லென்று கொள்ளவேண்டிய அமைதியாது? உ, வ, ப, ம என்ற எழுத்துக்கள் தமிழில் மாத்திரமேயன்றிப் பிறமொழிகளிலும் ஒன்று மற்றொன்றாய்த் திரியும். (தொடரும்)

ஒறுத்தல்*

[காழி. சிவ. கண்ணுசாமி யவர்கள் பி. ஏ.,]

இறப்பினைத் தானே யொறுத்தலென்பது ஒருவகைத்தாய முரட்டு நீதி கோடலே யாகும்; எனவே மக்களியற்கை எவ்வளவுக் கெவ்வளவு அதை நாடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நீதி அதைக் கண்டித்தல் வேண்டுமே. ஏனெனில் முதற்கண் இழைக்கப்பட்ட இன்னாமை இட்ட நீதிக்கெதிர் சென்றதாகும்; ஆனால் அவ்வின்னாமையைக் கடிந்து அதனை யொறுத்தலோ, நீதியென ஒன்றிருக்கின்ற தென்பதையே மதியாது ஒதுக்கி இகழ்தலாகும். இறப்பினை யொறுத்தானொருவன் எதிரியுடன் ஒன்றாகவைத் தெண்ணப்படுவான்; ஆனால் அவ்விறப்பினைப் பொறுத்தானோ எதிரியின் மேம்பட்டவனாய்ப் பொன்போற் பொதிந்து வைப்பதற் குரியவனாகின்றான். இன்னாபொறுத்தல் இறைமைப் பண்பன்றோ? [1]மிகுதியான் மிக்கவைசெய்தாரைத் தாந் தந் தகுதியானொறுக்கிப் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் உண்டாம் என்று அறிஞர் கூறுவர். நடந்தது நடந்ததேதான், நடந்தபின் அதை மாற்றியமைத்தல் ஒல்லுமோ? அஃதொல்லாமை யுணர்ந்தன்றோ உண்மை யறிஞர் நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கு முரியனவாயுள்ளவற்றையே செய்து முடிக்க விழைகின்றனர். எனவே சென்றதைக் கருதிச் சீற்றங்கொள்வோர் கடமை யுணரா வீணரேயாவர்.

---

* பேக்கன் ஆசிரியர் கட்டுரைகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

தீங்கிழைப்பதே தேர்ந்ததாகும் என ஓர்ந்து தீங்குபுரிவானொருவனைக் கண்டிலம். மற்றென்னையோவெனின், யாதானுமொரு ஊதியமோ, இன்பமோ, எய்தும் பெருமையோ, மற்றிவைபோன்ற எதுவொன்றையோ குறிக்கொண்டுதான் ஒருவன் தீங்கிழைக்க முற்படுவன். எனவே இனநலங் கருதாது தன்னலமே பெரிதும் விழைவானைக் காய்தலெற்றுக்கு? அற்றன்று; இயற்கையிலேயே தீ நெஞ்சு படைத்தானவன்; ஆதலால் தீங்கிழைக்க முன்வந்தான் என்னில், கானவேல் முள்ளுக்கும் கவடுபடர் கள்ளிக்கும் குத்திக் கிழித்தல் இயல்பன்றோ? அவ்வியல்பை யொத்ததே அவன் பண்பும் என்றொழிக.

அறுதியிட்ட நீதியின்படி யொறுக்க வொண்ணாத் தீமை குறித்து ஒருவன் தானே யொறுக்கப் புகின் அதனைப் பெரிதுங் கண்டிப்பதற்கில்லை. ஆயினும் அவ்வாறு ஒறுக்கப்புகுவான், பிற்பகல் அது காரணமாகத் தன்னை நீதி யொறுக்காதவாறு ஒறுத்தல் வேண்டும்; இன்றேல் எதிரி அவனினும் மேம்பட்டவனாகின்றான். என்னை, ஒன்று கொடுத்து இவன் இரண்டு கொண்டவனாவானன்றோ? ஒரு சிலர் தாம் ஒறுக்கப் புகுங்கால் ஒறுக்கப்பட்டான் யாரால் எதற்காக ஒறுக்கப்படுகின்றான் என்பதை யுணரவேண்டுமென விரும்புகின்றனர். இதை ஒரு விதத்தில் வன்னெஞ்சமற்ற ஒறுப்பு என்றே கூறுதல் வேண்டும். ஏனெனில், பழியொறுப்பான் மகிழ்ச்சி யுறுவது ஒறுத்தற் செயலினாலல்ல; ஆனால் ஒறுக்கப்பட்டான் தான் முதற்கண்ணிழைத்தது குற்றமே என்பதை யுணர்ந்து நெஞ்சங் கரைவுறச் செய்தலினாலேயேயாகும் என்பதனாலன்றோ? அன்றிக், கயமையுங் கரவும் பூண்ட கோழைகளோ இருட்டில் மறைந்து வந்து கொல்லும் அம்பை யொத்தவராவர். "மிகச்செய்து தம் மெள்ளுவாரும்", "அல்லற் கண்ணுற்றறுப்பாரும்" ஆகிய நட்பாளரது செயல் பெரிதும் அஞ்சி வெறுக்கற்பாற்று என [2]அறிஞர் ஒருவர் கூறினார். [3]ஏதிலார் குற்றம் பொறுக்கவேண்டுமென நூல்கள் கூறிற்றே யொழிய நட்பினர் பிழைபொறுக்க மென்று கூறிற்றில்லையே? என அவர் இடித்துக் கேட்டதுண்டு. ஆனால் [4]நன்மை யெய்துங் காலத்து மகிழ்ச்சியுடனதை யேற்போர் தீமையுறுங்காலத்தே அதையும் அவ்வாறே ஏற்றல் முறையன்றோ? அஃதேபோல் நட்பினர் மாட்டும் நன்றே வரினும், தீதுவரினும் பொறுத்துக்கோடல் முறையேயாகும். இன்னா செய்தாரை யொறுக்க உளங்கொண்டானொருவன் அவ்வின்னாமையை யகத்திடைப் போற்றி வளர்த்தவனேயாகின்றான்; அவ்வாறு உளங்கொள்ளானாயின் அது தானே ஆறியடங்கும்.

இனநலங் குறித்துப் பழிபொறுத்தல் பெரும்பாலும் நலமாகவே முடிவதுண்டு; ஆயின் தன்னலங் கருதிச்செய்வதோ அதற்கெதிரிடையாகவே முடியும். உற்று நோக்கின் பழிகோடும் இழிதகைமையுடையோர் வாழ்வு பெரிதும் மாயவித்தைக்காரரின் வாழ்வையே யொக்கும் என்பது புலனாம்! எப்படிப் பின்னவர் பலர் மெச்சப் பகட்டிப் பொருளீட்டி வந்தாலும் இறுதியி லவதிபுற்றுமாய்கின்றனரோ அப்படியே தான் முன்னவர் முடிவுமாகும்.

பொருளின் பிண்டக் கருத்துகள்.

இன்னா வொறுத்தல் நீதியை மதியாது ஒதுக்குவதாகும். அம்முரட்டு நீதி பொறுத்தல் என்னும் உயர்ந்த பண்புக்குக் கீழ்ப்பட்டதேயாகும். சென்றதையே கருதி நிகழ்வதை நீக்கிக் கெடுப்பதுடன் அது மனித இயற்கை யுணருமாற்றலின்மையையும் அறிவிப்பதாகும். நீதி கொண்டொறுக்க முடியாவிடத்தும் ஒறுக்கப்பட்டானறியக் கிடக்கவும் ஒறுத்தல் ஒருவாறு நேரிதெனக்கருதப்படலாம். எதிலாரன்றி அடுத்துக் கெடுப்போரும் உற்றுழித்தீர்வோருமாகிய பண்பிலா நட்பினரது பிழையும் பொறுத்தற் குரியதேயாகும். இனநலம் நாடி யொறுத்தல் பெரும்பாலும் நன்மைபயப்பதுவிக்கும்; ஆனால் தன்னலம் நாடியதோ திண்ணமாய்த்தீமையே பயக்கும்.

குறிப்புகள்

1. இக்கருத்து ஸாலமனது பழமொழிகளில் ஒருவாறு காணப்படுகிறது

2. இக்கருத்து ப்ளாரன்ஸ் நாட்டுப்பெரு நிலக்கிழவராகிய காஸ்மோ டிமெடிஸி என்பவர் கூற்றெனப் பேக்கன் ஆசிரியர் கூறினர்.

3. இதுவும் மேற்குறித்த காஸ்மோவின் கருத்தே. நட்பிற் பிழை பொறுத்தல் என்பது தமிழரின் சால்பாகும் என்பது ஈண்டு நோக்கற்பாலது.

4. இது விவிலிய நூற்கண் அரும்பாடுழந்தும் பொறுமை பூண்ட ஜாப் என்பவர் கூறியதாகும்.

"பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினர் காடாள்வர்"

(பழமொழி)

"பொருந்தாப் பழியென்னும் பொல்லாப் பிணிக்கு
மருந்தாகி நிற்பதாம் மாட்சி—மருந்தின்
தணியாது விட்டக்கால் தண்கடல் சேர்ப்ப!
பிணியீ டழித்து விடும்."

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்—ஒறுத்தாற்றின்
வானோங்கு மால்வரை வெற்ப! பயனின்றே
தானோன் றிடவரும் சால்பு." (பழமொழி)

"இறப்பவே தீய செயினுந் தன்னட்டார்
பொறுத்த றகுவ தொன்றன்றோ?—நிறக்கோங்
குருவ வண்டார்க்கு முயர்வரை நாட
ஒருவர் பொறையிருவர் நட்பு." (நாலடியார்)

"கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்."

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்."

"ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து."

"உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்கண் ணாற்றறுப்பார் நட்பு." (குறள்)

பொங்கலும் தமிழர் விழாக்களும்

[திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பி. ஏ.]

'நமது பாரத நன்னாட்டுக்கு வந்து குடியேறின அயல் நாட்டார் பலர், தமிழர் இந்நாட்டுப் பழைய மக்கள்' என்பது எல்லா வரலாற்றாசிரியராலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற உண்மை. ஆனால் அவர் வாழ்ந்த தமிழகத்தின் எல்லைதான் பலதிறப்படப் பேசப்பெறுகின்றது. தமிழர் கொண்டாடியனவாய்த் தமிழர்க்கே சிறப்பாய் உரியனவாய்ச் சில திருவிழாக்கள் உண்டு. அவற்றுட் சிறந்தது பொங்கல் விழா ஆகும். இது தமிழருக்கே சிறப்பா யுரிய தென்பது இதன் பெயரினாலேயே விளங்கும். பொங்கல் என்பது சோற்றைப் பொங்குகின்றதாகிய தொழிலைச் சிறப்பாக மேற்கொண்ட விழா நாள் என விரியும். பொங்கல் என்னும் மொழி அல் ஈற்றுத் தொழிற் பெயராய்ப் பொங்கும் தொழில் எனப் பொருள் பெறும். அது அத் தொழிலைக் கொண்ட விழாவிற்கு ஆகுபெய ராயிற்று. இந்

நாளினை வேறு பற்பல மொழி பேசுபவர்களும் இப் பெய ராலேயே வழங்குகின்றார்களே யன்றித் தத்தம் மொழிகளில் அதற்கு வேறு பெயரிட்டு வழங்கக் காண்கின்றோ மில்லை. ஆகவே, இது தமிழருக்கே சிறப்பா யுரிய விழா என்பது வலி யுறுத்தப் பெறுகின்றது. ஒரு பொருள் ஒருவரிடத்தே உள்ளதாயின் அதைக் குறிக்கும் சொல்லும் அவரிடமிருக்கும். பொருளில்லையேற் சொல்லுமிராது. எனவே சொல் காணாத போது அதனாற் குறிக்கப் பெறும் பொருளும் அவர்பா லில்லை என்பது வெளிப்படை. இவ்வா றன்றிப் பிறர் கொண்டாடும் நாள்களை அவரது நீண்ட சேர்க்கை முதலிய காரணத்தாலே தமிழர் மேற்கொண்ட நாள்களும் விழாக்களும் வேறுண்டு. உகாதி என்பது ஒரு நாள் தென் றமிழ் நாட்டிலே இக்காலத்து மிகுதியும் பாராட்டப் பெற்றுத் தமிழர் வீடுகளிற் கொண்டாடப் பெறுகின்றது. இது தெலுங்கர் சேர்க்கையின் காரணமாக அந்தப் புரோகிதர்களின் வலி யுறுத்தலினால் வழக்கம் பெற்றுப் புதிதாய்ப் புகுந்ததொன்று. அதன் பெயராலேயே இவ்வுண்மை புலப்படும். எனவே, இது தமிழர்க் குரிய விழா நாட்களி லொன்றாகாது. இதுபோல இக்காலத்திலே புதிதாகப் புகுந்த தமிழருக்கு வேறான சில விழாக்களும் நாள்களும் உண்டு. மகமதிய நோன்பாதிய முகரம் பண்டிகையிலும், கிறித்தவர் நாளாகிய ஜனவரிப் பண்டிகையிலும் விழாக் கொண்டாடும் வழக்கம் நமது தமிழ் மக்களுக்குட் புகுந்து கொண்ட புதுமையை நோக்க யுகாதி புகுந்தது பெரிதாகக் காண மாட்டாது. இனி நாளடைவில் 'ஜனவரி'யும் யுகாதி போலவே கொண்டாடவும் பெறலாம். ஆனால் அவை எவ்வகையிற் கொண்டாடப் பெறினும் அவற்றின் பேர்கள் அவற்றைப் புதியன புகுதல் என்றும், தமிழர்க் குரியன அல்ல என்றும் தம்முடைய வேற்றுமையைக் காட்டிக் கொண்டே நிற்கும். இதுபோன்று தமிழர்க் குரியனவாகவும், உரியன வல்லாதன வாகவும் இக்காலத்துத் தமிழரால் எத்தனையோ விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. அவை நமக்கு உரியதென்றும் அல்லவென்றும் மேலே காட்டிய அவற்றின் பெயராலேயே பெரும்பாலும் விளக்கித் துணிந்துகொள்ளலாம். ஐப்பசித் திங்களின் தீபாவளி நம்முடையதன்று. அது நரக சதுர்த்தசி என்ற பெயரால் வந்தேறியாய்ப் புகுந்து கொண்டது. தீபாவளி என்றால் விளக்கு வரிசை அல்லது மாலை என்று பொருள். (தீபம் - ஆவலி) இது வடமொழிச் சொல். நாம் இந்நாட் கொண்டாடும் ஐப்பசித் தீபாவளியில் விளக்குகளை வரிசையாக ஏற்றிவைக்கிற வழக்கம் காணவில்லை. ஆனால் கார்த்திகை மாதத்தில் அவ்வாறு விளக்கு வரிசைக் கொண்டாட்டம்

காண்கிறோம்; இக்கார்த்திகை விழாவுக்கு விளக்கீடு என்ற தமிழ்ப் பெயர் உண்டு.

துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த் திகைநாள்
விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்

என்று திருஞான சம்பந்த நாயனார் திரு மயிலாப்பூர்த் தேவாரத்திலே சொல்லி யருளினார். இவ்வாறு அந்தத் திருப் பதிகத்திலே பல விழாக்கள் சொல்லப் பெற்றிருக்கின்றன.

ஐப்பசி ஓண விழா.
கார்த்திகை விளக்கீடு.
மார்கழி ஆதிரை நாள்.
'நெய்ப் பூசும் ஒண் புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்'.
மாசிக் கடலாட்டு.
பங்குனி உத்திரம்.
பதினெண் கணங்கள் தம் 'அட்டமி' நாள்.

என்றிவ்வாறு பல விழாக்கள் அந்நாளிற் கொண்டாடப்பெற்றன வாம். ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவும் கொண்டவிழாவை மறந்து இப்போது நரக சதுர்த்தசியாகிய தீபாவளியைக் கைக்கொண்டு தமிழர் தடுமாறுகின்றனர். இது போலத் தம் உரிமையை இழந்து உரிமை யற்றன வற்றைக் கைக்கொண்டன பல. பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள் என்பது மேற்போந்த வரிசையிலே சித்திரைத் திங்களிலே இருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது.

தீர்த்தமா மட்டமி முன் சீருடை ஏழு நாளுங்
கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

என்று அப்பரடிகளும் அருளிச்செய்துள்ளார்கள். இது இந் நாளில் கொண்டாடப் பெறுவதாய்க் காணவில்லை. இதன் நிலையிலே சித்திரைத் திங்களின் முழு நிலா கொண்டாடப் பெறுகின்றது. இவைபோலப் பழையன கழிந்தும் தமிழ ரிடையே புதியனபுகுந்தும் உலாவுகின்றன. இத்துறையிலேவல் லவர்கள் ஆராய்ச்சி செய்வார்களாயின் அது மிகப் பயன்தரும்.

பொங்கல் என்பது கதிரவன் ஒன்பதாவது இராசி யாகிய தனு ராசியிலிருந்து பத்தாவதாகிய மகர ராசியில் புகுகின்ற நாளாகிய தைத் திங்களின் முதல் நாளிற் கொண்டாடப்

பெறும். தமிழர்கள் தங்கள் வீடுகளை முழுதும் தூய்மைப் படுத்திச் சுண்ணாம்பு பூசி மெழுகிக் கோலமிட்டு அழகுபடுத்து வைப்பார்கள். புதிய தானியங்கள் வந்து சேர்ந்திருக்கும். புதிய தானியத்தைக் கொண்டு பொங்கலிட்டுப் பகலவனையும், பிள்ளையாரையும் தங்கள் தங்கள் குலதெய்வம் வீட்டுத் தெய்வங்களையும் வணங்குவார்கள். இந்தப் பொங்கலானது புதிய மட்பானைகளில்தான் செய்வது வழக்கம். யாதொரு வகையான தீட்டுத் தொடக்கு அழுக்கு முதலியன இல்லாமல் இவ்விழவை மிகவும் அச்சத்துடனும் அன்புடனுங் கொண்டாடுவார். இதிலே ஏதாவது கெடுதியோ இடைஞ்சலோ வந்து விட்டால் அதை அவ்வாண்டிலே குடும்பத்துக்கு நேரிடும் கெடுதியைக் காட்டும் கெட்ட அறிகுறியாகக் கருதுவார். இது நன்றாக நிறைவேறின அவ்வாண்டு முழுமையும் நன்மையே பயக்கும் என நம்பி மகிழ்வர். தமிழரின் பொங்கலும், பிறர் ‘சங்கராந்தி’ என வழங்குவதும் ஒரே நாளைப்பற்றியன. ஆயினும் வெவ்வேறு பொருளைக் குறிப்பனவாம். புதுத் திங்கள் தொடக்கமாதலின் வடமொழிவாணர் இதனைச் சங்கராந்தி என்பர். இவ்வாறே, ஒவ்வொரு திங்கட் கழிவினும் புதுத்திங்கட் புகுவதால் ஒவ்வொரு திங்கள் முதலினும் அவர்களுக்குச் சங்கராந்தியாம். ஆதலின் இதனை மகர சங்கராந்தி அல்லது மகர ராசியிலே சூரியன் புகுகின்ற நாள் எனப் பிரித்துக் கூறுவர். ஆனால் தமிழருக்கு ஆண்டுக்குப் பொங்கல் ஒன்றே. சங்கராந்தி பொங்கலாகவில்லை; பொங்கல் சங்கராந்தியுமாகவில்லை. தனித் தனி வடமொழியும் தென் மொழியும் இந்நாளின் பெருமையைத் தாமாக உணர்ந்து தத்தம் முறையிலேயே கொண்டாடின. ஒன்றினொன்று கடன் வாங்கவில்லை. நாள் ஒன்றாயினும் இருவர் கொண்டாட்டங்களும் வெவ்வேறாயின.

தமிழர் பொங்கலுக்குச் செய்கின்ற சடங்குகள் வடமொழியாளர் சங்கராந்திக்குச் செய்கின்றதில்லை. வடமொழியாளர் செய்வனவற்றைத் தமிழர் செய்யும் ஏற்பாடும் கிடையாது. எனவே, ஒரே நாளை வெவ்வேறு வகையில் இவர்கள் அறிந்து கொண்டாடினர். எனவே, பயிர்களுக்கு இன்றியமையாத வெப்பத்தைத் தந்து உயிர் கொடுத்து வளர்த்து வந்த கதிரவனை நோக்கி உழவராகிய தமிழர்கள் அவ்வுதவியினால் வந்த புதிய விளைவைக்கொண்டு கொண்டாடுவதாகிய இப் பொங்கல், தமிழர்க்கே சிறப்பா யுரிய நோன்பாகின்றது என்பது வெளிப்படை.

இவ்விழா திங்கள் முதலாகவும், கதிரவன் ஓடத்தின் தென் பிரிவு வட பிரிவு (அவ்வாறு திங்களில்) ஆகிய இரண்டிலே வட

பிரிவின் துவக்கமாகவும் இருக்கும் நிலைமையினையும், இதன் நடை முறை அமைப்பினையும் உற்று நோக்கும்போது இதுவே தமிழர் கணக்கில் ஆண்டின் தொடக்கமாக இருக்கலாமென்று எண்ண இடமிருக்கிறது. முதன் முதலில் ஆண்டின் தொடக்கம் தைத்திங்கள் துவங்கி நின்று நாளடைவில் மாறி மாறி இப்போது சித்திரையில் தொடங்கிக் கணக்கிடப் பெறுகிறதாக நூலாசிரியர்களும் கூறுகின்றார்கள். ஆங்கிலம் முதலிய மேற்றிசை யாளர்க்கு ஆண்டுத்தொடங்கும் காலமும் இதுவே யாதல் இக்கொள்கையை வலியுறுத்தும்.

(லோகோபகாரி)

சாதிச் சடங்குகள்

[அரு. சோம. எழுதியது]

நமது மக்கள் சாதிச் சார்பில் செய்யும் சடங்குகளைப்பற்றி ஆராய்வாம். சமயச் சடங்குகளைப்போல் சாதிச் சடங்குகளும் வீணாக வரம்பின்றியே விரிந்திருக்கின்றன. ஒரு குழந்தை கருப்ப முற்றது முதல், பிறந்து வளர்ந்து, மணம்புரிந்துகொண்டு உலக வாழ்வை முடிக்கும் வரையில் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாகப் பல சடங்குகள் பெருஞ் செலவுடன் செய்யப் பெறுகின்றன. மரணத்தின் பின்னரும் சில சாதிச்சடங்குகள் நடை பெறுகின்றன. இவை கட்டாயச் சடங்குகளாக இருத்தலால் ஏழை செல்வர் ஆகிய இரு பாலாரும், மிகச் செலவு செய்து பெரிதுந் துன்புறுகின்றனர். பணமுடையால் தினசரி வாழ்க்கையை நடத்த முடியாது வருத்தப்படுவோர் கூடக் கடன்பட்டாவது, பிச்சை வாங்கியாவது, சாதிச் சடங்குகளைப் போட்டி போட்டுக்கொண்டு செய்கின்றனர். ஏனெனில், குடிக்கக் கூழில்லாவிடினும் சடங்கு செய்யவேண்டுவது இன்றியமையாத கடமையாக ஏற்பட்டுவிட்டது.

வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டே சடங்குகள் செய்யப்படுகின்றன. ஏழைமக்கள் வழக்கத்தை விடவும் அஞ்சுகின்றனர்; செலவு செய்தற்கும் முடியாது தவிக்கின்றனர். செல்வர்களுடைய சடங்குகள் ஒவ்வொன்றும் ஏராளமான ரூபாய்களை விழுங்குகின்றன நூறுயிரரூபா வரையில் செல்வருடைய சாதிச் சடங்குகள் நடை பெறுகின்றன. பெரும்பான்மையோர் ஆடம்பரத்தின் பொருட்டே இச் சடங்குகளைச் செய்கின்றனர். இவ் வீண் சடங்குகள் விரிவதால் சமூக வாழ்க்கை

முறையானது பெரிதுங் கெட்டுப்போய்விட்டது. மனித வாழ்விற்கு முக்கியமான திருமணம் எளிதில் முடியவில்லை. ஸ்ரீதனம், வரதக்ஷிணை ஆகியவை வரம்பின்றி விரிந்துவிட்டபடியால், பல பெண்குழந்தைகளைப் பெற்றிருக்கின்ற செல்வர் பெரிதுந் தவிக்கின்றனர். ஏழைகளோ வெகு தைரியமாகப் பெண்மக்களை அடிமைகளென நினைத்து விற்கின்றனர். அந்தோ! கொடுமை! கொடுமை!! பணத்தின் பொருட்டுப்பெண்மக்கள் இரண்டு ஆண்டுகளில் இறந்துபோகும் கிழவர்களுக்குக்கூடக் கட்டப்படுகின்றனர். பெண்ணை விற்போரிற் பெரும்பான்மையானவர் சடங்குச் செலவின் பொருட்டே விற்கின்றனர். தம்மாலியைந்த சிறு செலவுடன் சடங்கை நடத்தினால் நல்ல மணமகனுக்கு மணமகளைக் கொடுக்கலாமன்றோ? ஆடம்பரச் சடங்குகள் அன்றோ பெண்ணை விற்கச் சொல்லுகின்றன?

மணம் புரிந்துகொண்டே நாயகனும் நாயகியும் தாம் தமது பிள்ளைகளுக்கு நடத்தவேண்டிய சடங்குகளைச் செய்ய முடியாது பின்னர் பரிதபிக்கின்றனர். தினசரி வாழ்க்கைக்குப் பணஞ் சேர்ப்பதே துர்லபமாக இருக்கும் இந்நாளில், ஏழைகளைச் சடங்குச் செலவுகள் கழுத்தையறுக்கின்றன என்பது மிகையாகாது. மனிதன் தினசரி இன்ப வாழ்வு வாழவேண்டியதே முக்கியம். அதிகமான வீண்சடங்குகள் செய்ய வேண்டுவது அநாவசியமே. பொது மக்கள் சடங்குகளால் வரும் வருத்தத்தை உணருகின்றார்களேயொழிய, "சடங்குகள் அனைத்தையுஞ் செய்து தன்புறவேண்டியது அவசியமா" என்பதை ஒருவரும் ஆலோசிக்கின்றார்களில்லை. எல்லோரும் வழக்கத்தையே பின்பற்றிக்கொண்டு சென்று அல்லலுறுகின்றனர். ஏழைகள் தாம் சொல்லமுடியாத துன்பத்தை யநுபவிக்கின்றனர். பணக்காரர் பெருமையில் ஈடுபட்டுப் பணத்தை விரையஞ்செய்கின்றனர்.

சடங்குகளால் சமூகவாழ்வில் ஏற்படும் இன்னல்களுக்கு ஓர் அளவில்லை. வாழ்வு முழுவதும் வெறுப்பைத் தருவதாக ஆகிவிட்டது. பணத்தேவை அதிகப்பட்டுவிட்டது. பணமில்லாதவர் மணமின்றிப் பரிந்து தவிக்கின்றனர். மணம் புரிந்து கொண்டவர்களுடைய வாழ்க்கைக் கப்பல் நடுக்கடலில் செல்ல முடியாதபடி வீண் சடங்குகள் எனும் அலைகளால் பெரிதுந் தாக்கப்படுகின்றது. ஒரு இந்துவின் வாழ்வு துன்பத்தால் இழைக்கப்பட்டதாக இருக்கின்றது. இந்து சமூகம் முன்னேறுதல் வேண்டுமானால், வீண் சடங்குகள் தொலைதல்

வேண்டும். எளிமை வாழ்வு தழைத்தல் வேண்டும். எனவே சடங்கு விவரத்தை ஆராய்வாம்.

சடங்குகளின் விவரம்

இந்நாட்டில் பலவகையான சாதிச்சடங்குகளை மேற்கொண்டிருக்கின்றனர். அவைகள் அனைத்தும் எனக்குத்தெரியாது; ஆனால் பிராமணரது சடங்குகளைப்பற்றியும், தனவைசியரது சடங்குகளைப்பற்றியும் ஒருவாறு கூறுவாம். அவைகளிலிருந்து மற்றவைகளை அன்பர்கள் ஆலோசித்துக் கொள்ளுவார்களாக.

பிராமணரது சடங்குகள்

முதலில் பிராமணரது சடங்குகள் வருமாறு:—(க) வளைகாப்பு. இச்சடங்கு பெண் நான்கு ஐந்துமாதக் கர்ப்பமாக இருக்கும்பொழுது செய்யப்படுகிறது (உ) சீமந்தம். இது அதன்பின்னர் நடைபெறுகிறது (ங) அப்தபூர்த்தி. குழந்தையின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவாக இச்சடங்கு நடைபெறுகிறது இதில் குழந்தைக்குக் காது குத்துதலும் நடைபெறுகிறது. (ச) சௌளம் இச்சடங்கு குடுமிவைக்கும் பொருட்டு நடைபெறுகிறது (ரு) (சு) அன்னப்பிராசனம், நாமகரணம் எனச்சோறு ஊட்டுதற்கும், பெயரிடுதற்கும் இரண்டு சிறு சடங்குகளும் நடைபெறுகின்றன. (எ) வித்யாப்யாசம் குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் வைப்பதற்கு இச்சடங்கு நடைபெறுகிறது. (அ) உபநயனம் குழந்தைக்குப் பூணூல் அணிவித்து, காயத்திரி மந்திரோபதேசம் செய்யும் பொருட்டு இச்சடங்கு நடைபெறுகிறது. (கூ) திருமணம். இதில் பலவகைச் சில்லரைச் சடங்குகளும் செய்யப்படுகின்றன. (க0) சாந்திமுகூர்த்தம். பெண் ருதுவானதும் சாந்திமுகூர்த்தம் என ஒரு சடங்கு நடைபெறுகிறது. இது மிகவும் ஆபாசமான முறையில் நடைபெறுவது என்பதை அன்பர் அனைவரும் அறிவர். (கக) சஷ்டியப்தபூர்த்தி இது அறுபதாவதாண்டு விழாவாக நடைபெறுகிறது. (கஉ) சதாபிஷேகம். இது எண்பதாவதாண்டு விழாவாக நடைபெறுகிறது. மேற்கூறிய சடங்குகளில் பெண்மக்களும் வைதிகரும் சேர்ந்து செய்யும் சில்லரைச் சடங்குகள் அளவிட முடியாதன. அவைகளில் அநாகரிகமான வழக்கங்கள் பல உண்டு.

தனவைசியரது சடங்குகள்

(க) தீர்த்தங் குடித்தல். பெண் ஐந்துமாத கர்ப்பமாக இருக்கும்பொழுது இச்சடங்கு நடைபெறுகிறது. கோவில்

தீர்த்தத்தையாவது, ஐந்து மருந்துகள் இடித்துச் சேர்த்த சாற்றையாவது பெண் குடிக்கின்றாள். (உ) பிள்ளை பிறந்த சில நாளில் காது குத்துதல் சடங்காக இல்லாமல் சாதாரணமாக நடைபெறுகிறது. (௩) சோறு ஊட்டுதல் ஒரு நல்ல நாளில் நடைபெறுகிறது. (௪) பெயரிடுதல் குலதெய்வங்கள் எனும் கறுப்பர் கோவில் முதலியவற்றில் நடைபெறுவதும் உண்டு. (௫) புதுமை. இது நினைத்த வருடத்தில் ஆண்டு நிறைவு விழாவின் அறிகுறியாக நடைபெறுகிறது. இதில் சௌளம் எனும் சடங்கும் நடைபெறுகிறது. குழந்தைக்கு மொட்டையடிக்கப் பெறுகிறது. சௌளத்தின் பொருள் குடுமி வைத்தல் என்பது. தனவைசியருள் வெறுந்தலையாக இருப்பது என்று விரதம் வைத்துக்கொண்டிருக்கிறபடியால், குழந்தைக்குத் தலைமயிர் முழுவதும் வழிக்கப்பெறுகிறது. அன்று முதல் குழந்தை மொட்டைத்தலையுடன் இருந்து வருகிறது. மாரார்ப்புப் பாசியென்று குழந்தைக்கு இரண்டு பாசிக் கோவைகள் கட்டப்பெறுகின்றன. குழந்தையை மரவையில் வைத்துச் சில பெண்கள் சுற்றுகின்றனர். பிறகு ஆசீர்வாதத்துடன் இச்சடங்கு முடிவுறுகிறது. (௬) பிறகுபையனைப் பள்ளிக்கூடத்தில் வைத்தல் நடைபெறுகிறது. (௭) கார்த்திகைப் புதுமையும் திருவாதிரைப் புதுமையும். பையனுக்குக் கார்த்திகை மாதத்தில் கார்த்திகைத் திருநாளில் இது நடைபெறுகிறது; பெண்ணுக்கு மார்கழிமாதத்தில் திருவாதிரைத் திருநாளில்இது நடைபெறுகிறது. புதுமைக்கும் கல்யாணத்திற்கும் இடையில் இவை இரண்டும் நிகழ்கின்றன. (அ) திருமணம், திருமணத்தில் நாளிடுதல், சீர்வைத்தல், மாப்பிள்ளை யழைத்தல், மாப்பிள்ளை யறிதல், கன்னி நீராடுதல், நாட்குறிக்கப்போதல், உப்பெடுத்தல் கழுத்துருவாங்கப் போதல், புறங்கழித்தல், வேவு எடுத்தல், பகவத்யானம், திருப்பூட்டுதல், குதிரையேறல், பெண்ணெடுக்கிக் காட்டல் மணவறை பெண்ணழைப்பு, மஞ்சள் நீர் எனப் பல சில்லரைச் சடங்குகள் நடைபெறுகின்றன.

மணவறையில் புரோகிதரது கிரியைகளும், பெண்மக்களது வழக்கச் சடங்குகள் பலவும் செய்யப்படுகின்றன. பெண்மக்கள் ஒரு தட்டில் பல மங்கலப்பொருள்களை வைத்துச் சடங்குசெய்கிறார்கள். பெண் கையில் வெற்றிலையை வைத்துக்கொண்டு நிற்கிறாள். சடங்கு செய்கின்றவள் வெற்றிலையில் தண்ணீரை ஊற்றுகின்றாள். பெண் அதைக் கீழேவிட்டு விட்டு நெற்றியில் வைத்துக்கொள்கின்றாள். பெண் கையில் அம்மிக்குழவியொன்று பிள்ளையாகக் கொடுக்கப்பெறுகிறது. இவ்வாறு கர்நாடக வழக்கங்கள் பல நடைபெறுகின்றன. மணமகனுக்குப் பிரதிநிதியாக

ஒரு கிழவர் பெண்ணுக்குத் தாலிகட்டுவது மிகவும் விநோத மானதாகும். பலவற்றிற்கு அர்த்தமில்லை. சில தேவையானவை; பல அநாவசியமானவை. இவைகள் ஒவ்வொன்றிற்கும் காரணம் கண்டு பிடிக்கவேண்டுமென்பது இக்கட்டுரையின் கருத்தன்று. (௯) வேவுகள் ஐந்து வேவுகள் எடுக்கப் பெறுகின்றன. (௧௦) சஷ்டியப்தபூர்த்தி (௧௧) சதாபிடேகம் இவ்விரண்டு சடங்கும் மிகப்பெரிய சடங்குகள்; கிரியைகளும் அதிகம்; செலவும் அதிகம்.

(௧௨) முகூர்த்தம்வைத்தல், ருது சடங்கு, உபதேசப் புதுமை, கிரகப்பிரவேசம் எனப் பலவயையான சில்லரைச் சடங் குகளும் நடைபெறுகின்றன. ஏதோ ஒருவாறு எனக்கு இப் பொழுது ஞாபகத்திற்கு வந்த சடங்குகளின் விவரத்தை எடுத் துக் காட்டியுள்ளேன். இவைகளில் சிலவற்றிற்கு நூற்றுக் கணக்கான சாதிச் சடங்குகளால் பணச் செலவும், வீண் வேலையும், மூடத்தனமும் உண்டாவதால், இவைகளை எப்படிச் சுருக்கவேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கம். அந்நோக் கத்தைக் கூறுவாம்.

புதிய முறை

ஆண்டு நிறைவு விழா, திருமணம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிடேகம் என நான்கு சாதிச்சடங்குகள் மட்டும் இருந்தாற் போதும் என்பது என் கருத்து. இந்நான்கிலும் சமயக்கிரியை சாதிக்கிரியை ஒன்றும் புரோகிதராலும் பெண் மக்களாலும் நடத்தப்பெற வேண்டுவதில்லை. நான்கும் நான்கு இன்பவிழாக் களாகவே கொண்டாடப்பெறுதல் வேண்டும். ஒருவேளை உண வுடன் ஒவ்வொரு விழாவும் முடிவுறுதல்வேண்டும். வழ வழ வென்று எட்டு நாட்கட்கு நடைபெறுதல் கூடாது. செல்வ நிலைக் குத்தக்கவாறு விருந்தினர் எண்ணைப் பெருக்கியும் குறைத்தும் கொள்ளலாம். ஐந்து ரூபாய்முதல், ஐந்நூறு ரூபாய்வரை ஒவ்வொரு சடங்கும் நடைபெறலாம். எவ்வளவு செல்வ ராயினும் அதற்குமேல் செய்வது ஆடம்பரத்தைப் பெருக்குவதே யாகும். நிறைந்த செல்வம் உடையவர்கள் மக்களை முன்னேற் றக்கூடிய நிலைபெற்ற அறங்களுக்குத்தான் செலவு செய்தல் வேண்டும். மணமகளுக்குப் பெற்றோர் மணத்திற்குப் பின் எவ்வளவு ரூபாய்களை வேண்டுமானாலும் நன்கொடையாக ஒரே முறையில் கொடுக்கலாம். பின் முறைகள் எனும் கொடிய வழக்கம் கூடாது.

ஆண்டு நிறைவு விழாவில் குழந்தையை ஆடைகளாலும் அணிகலன்களாலும் அலங்கரித்து வைத்து, எல்லோரும்

வாழ்த்தி மகிழவேண்டியதுதான் முக்கியம். ஒரு கிரியையும் செய்யவேண்டாம். வருகிறவர்களுக்கு ஒரு வேளை உணவைத் தவிர ஒன்றும் கையில் கொடுத்தனுப்ப வேண்டுவதில்லை. திருமணத்தில், மணமகனையும் மணமகளையும் அலங்கரித்து ஒரு இடத்தில் அமரச்செய்து மாலை மாற்றிக்கொள்ளச் செய்தல் வேண்டும். இறைவனை நோக்கி இருவரையும் பிரார்த்திக்கச் சொல்லவேண்டும். வேறு ஒருவிதமான கிரியைகளும் செய்ய வேண்டுவதில்லை. சஷ்டியப்தபூர்த்தியிலும் சதாபிடேகத்திலும் நாயகியும் நாயகனும் நல்ல ஆடைகளைப் புனைந்துகொண்டு மகிழ்வுடன் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்துவிட்டு, விருந்தினரை உபசரித்து மகிழவேண்டுவதே முக்கியமாகும்.

இம்முறையானது புதிதாதலால் படிப்பவர்களுக்குச் சிறிது பிடியாதிருக்கலாம். ஆனால் அன்பர்கள் ஆழ்ந்து ஆலோசித்துப் பார்ப்பார்களானால் இவைகள் எல்லோருடைய மனத்தையும் ஈர்க்கும். இதனால் செலவுச் சுருக்கமும், இன்பப் பெருக்கமும்; நாகரிக முறையும் ஏற்படும்; மூடத்தனம் தொலைந்து அறிவு வளரும். சமூகவாழ்வு மிக எளிதாகிவிடும். இப்பொழுது நான் காணும் இக்கனவு நம் நாட்டில் இன்னும் சில ஆண்டுகளில் நனவாகி இன்பந்தரும் என்ற நம்பிக்கை கொண்டே நான் இவைகளை எழுத முன்வந்துள்ளேன். அன்பர்கள் இவைகளை ஆராய்ந்து தமது நல்லபிப்பிராயத்தைத் தெரிவித்தல் தகுதியுடையதாகும். அன்பர்கள் பழமையில் பதித்திருக்கின்ற கண்களைத் திருப்பிப் புதுமையை நோக்கிச் செலுத்துவார்களாக. (ஊழியன்)

குழந்தைகளின் நல்வளர்ப்பு

[திரு. பு. க. முத்துசாமிப் பிள்ளையவர்கள்]

முன் பங்குனித் திங்கட்செல்வியில் குழந்தைகளின் உடல் நிலை அவர்களது தாயின் கருப்பகாலத்திற்கு முந்திய உடல் நிலையைப் பொறுத்ததென்றும், அத்தாய்மார்களின் உடல்நிலை நன்மகவைக் கருவுயிர்த்தற்கு ஏற்றதாயில்லை என்றும், தாய்மார்கள் பேறுகாலத்திற்கு அண்மித்த காலத்தில் மிகுந்த வேலையின்றி ஓய்ந்திருக்கவேண்டுமென்றும், ஓய்வினால் விரைவுப் பேறுகாலம் உண்டாகாமல் சரியாது காலத்தில் குழந்தை பிறக்குமென்றும், கருப்பிணிகளைக் குருடர் முதலிய உறுப்புக்குறையுள்ளாரைக் காப்பதினும் பன்மடங்கு மிகுந்த கவலையுடன்

காக்கவேண்டுமென்றும், வருங்கால அரசிருக்கை அக்கால உயிரை ஆக்கவும், வளர்க்கவும் வல்ல தாய்மார்களினதே யாதலால் அவ் உரிமை மேம்பாடுடையதென்றும், மக்கட் கூட்டத்தினர் அதனை மணத்தினால் பெறுகின்றனர் என்றும், ஒருத்தியை மணந்துகொள்வதால் சில பொறுப்புக்களைத் தாங்க நேரிடுகின்றதென்றும், அரசுறுப்பினரும் நல்வளர்ப்பாளனும் திக்கற்ற குழந்தை நலம் நாடி உழைத்தல் வேண்டுமென்றும் தெரிவித்தேம்.

இனி நம் நாட்டு மக்கள் நன்மக்களாக இருக்கவேண்டுமென்று விழைகின்றோம். போர்முனைக்குச்செல்லும் வீரர்களின் உடல் நல மின்மையைக் கருதி வருந்துகின்றோம். கவாத்து, உடற்பயிற்சி முதலியவற்றான் இவர்களது குறைபாடுகளை நீக்கிக்கொள்ளலாம் எனக்கருதி அதற்கு வேண்டுவன பலவுஞ் செய்து வருகின்றோம். உடற்பயிற்சியால் எவ்வகைய நலங்களைப் பெறலாம்? வளைந்த எலும்புகளையும், சாய்ந்த நடையையும், அறிவின்மையையும் எத்தகைய உடற்பயிற்சியும் நன்றாக்குமென எண்ணுதல் கூடாது. இவ்வாறு இவர்கள் தம் உடல்நிலை நன்றாயிராமைக்குக் காரணந்தான் என்னையோ? எனக் கருதுவோமாயின் பள்ளியிற் பயிலும் சிறார்களின் உடல்நலமோ அஃதின்மையோ இங்கு வந்துள்ளது என அறிகின்றோம். ஆங்கு இச்சிறார்கள் இந்நிலையிலிருத்தற்குக் காரணம் என்னை என்று ஆழ்ந்து நினைக்குமளவில், இவர்களது குழவிப் பருவத்திலுள்ள உடற்கூற்றே பள்ளிக்கு வந்துள்ளது எனத் தெரிகின்றோம். அவ்வுடற்கூற்றைச் செவ்வையாக்குதற்குத் தாய்மார்களின் உடல் நிலையை நல்லதாக்குதல் இன்றியமையாதது. ஆகவே நேராகத் தாய்மார்களின் உடல் நலம் பேணும் இன்றியமையாமையை நன்கு உணராத நமக்கு இத்தகைய சுற்றுவழிகளால் நம் வகுப்பினரின் உடல்நிலை தாய்மார்களின் உடல் நிலையைப் பொறுத்திருக்கின்றதென்பது தெளிவாய்த் தெரிகின்றது. ஆதலால் தாய்மார்களின் உடல் நலம் பேணவேண்டியதும் அவர்கள் உரிமையைக் காக்கவேண்டுவதும் மிக இன்றியமையாதன.

இனிக் குழந்தைப்பருவம் ஒரு விலையற்ற தங்கக்களஞ்சியம் என்று யாவரும் ஒப்புக்கொள்ளுதல் பொருந்தும். பிறந்தது முதல் முதலாண்டு முடியும் வரையுள்ள பருவத்தைக் குழந்தைப் பருவம் என்று வைத்துக்கொள்ளலாம்.

இக்குழந்தைக்குச் சில தாய்மார்கள் ஒன்பது திங்கள்காறும் முலைப்பால் ஊட்டுதலும், வேறு சில நாகரிகமற்ற வகுப்பினர்

மூன்றாண்டுகாறும் பாலூட்டுதலும் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். நமது உணவுப்பொருள்களின் ஒரு பாகமாகிய கஞ்சிப்பசை (storch) என்பதைக் குழந்தைகள் பிறந்த முதல் ஆண்டில் செரிக்கக் கூடாததால் அக்காலத்தில் அவைகள் தங்களது தாய்மார்களிடம் பால் சுவைத்தல் பொருந்தும். அவ்வொரு ஆண்டிற்குமேல் பாலூட்டுதலால் குழந்தைகளுக்குச் சில இன்னல்கள் விளையுமெனக் கலைவல்லோர் பலரும் பன்முறை கூறியுள்ளது ஈண்டுக் குறிக்கொண்டு நோக்கற்பாலது. இக்குழந்தைப் பருவத்திலேயே பல குழந்தைகள் இறக்கின்றன. சின்னாட்களுக்கு முன்வரை இங்கிலாந்தில் பிறந்த குழந்தைகளில் ஏழில் ஒரு பகுதி அவர்களின் முதல் ஆண்டு முடிவதற்குள்ளாக இறந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தைவிட மும்மடங்கு மிகுதியான குழந்தைகளை நம்மிந்தியத்தாய் ஆண்டுதோறும் இழந்து நிற்கின்றாள். இவ்வருத்த நிலையை உணருவோர் இந்தியாவில் மிகச் சிலரேயாவர். இப்பொழுது அத்திபூத்ததுபோல் சிற்சிலவிடங்களில் குழந்தைகளின் காப்பிற்கென்று சிலவேலைகள் நடந்துவருவது நம் நாட்டுக்கும் ஒருகால் நல்நிலை வரலாமென நினைப்பதற்கிடமாயிருக்கிறது.

நம் குழந்தைகள் இவ்வாறழிவதைப் பார்த்துக்கொண்டு நாம் வாளாவிருப்போமானால் அவைகளைக்கொலை செய்தவர்களேயாவோம். நல்வளர்ப்பாளன் எவனும் இதற்கு ஒருப்படான். இவ்வாறு குழந்தைகள் மிகுதியாய் இறக்கும் இடங்களில் குழந்தைகள் அல்லாத பிறரும் மற்ற இடங்களைக்காட்டினும் மிகுதியாய் இறக்கின்றார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் நாட்டுமக்கள் இவ்வாறு நற்செய்திகளில் தலையிட்டு நம் மக்கட் கூட்டத்தை நல்வழிப்படுத்த இறைவன் இன்னருள் புரிவானாக!

இனி இவ்வாறிறக்கும் குழந்தைகளில் ஆண்குழந்தைகள் பெண்குழந்தைகளைக் காட்டினும் மிகுதியா யிறக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக எக்காலத்தும் எந்நாட்டகத்தும் பிறப்பதில் ஆண்குழந்தைகள் பெண்குழந்தைகளைவிட மிகுதியாய் இருக்கின்றன. பின்னர் இருபது இருபத்திரண்டு ஆண்டு அடைந்த ஆண்களைவிட அப்பருவமுடைய பெண்களின் தொகையே மிகுதியாயிருக்கின்றது. இவ்வகைப்பட்ட இறப்புக்குக்காரணம் பெரும்பான்மையும் ஆண்குழந்தைகளைவிடப் பெண்குழந்தைகளே தங்கள் நலப் பகைஞர்களினின்றும்

ாளிதில் தப்பித்துக்கொள்கின்றன. நோயைத்தாங்கும் வன்மை
)பண் குழந்தைகளுக்கு உள்ள அளவு ஆண்குழந்தைகளுக்கு
)ல்லை என்பது தேற்றம்.

கொச்சி நாட்டின் கோயில்கள்

கொச்சி நாட்டிலுள்ள, சித்தூர் - கொச்சியில் வசியும் திரு. எம். பி. குமாரநாயகம் பிள்ளை அவர்கள் நமக்குப்பின் வருமாறு எழுதுகிறார் :—

“நான் சில நாட்களுக்கு முன்னே கொச்சி நாட்டிலுள்ள முதன்மையான நகரங்களிலொன்றாகிய திருச்சூருக்குச் செல்ல நேரிட்டது. நான் ஓர் சைவனானபடியாலும், சமயத்தின்பால் மிக்க ஈடுபட்டவனானபடியாலும், திருச்சூரிலுள்ள வடகிநாதசாமி கோயிலுக்குச் சென்றேன். கோயிலுள் நான் காலடி வைத்ததும், ஓர் மலையாளி என்னைக் குறுக்கிட்டுச் சிறிதும் மரியாதையின்றிக் கோயிலைவிட்டு வெளியேறுமாறு சொன்னான். நான் திருநெல்வேலிச் சைவனென்றும், கொச்சி நாட்டிலுள்ள சித்தூர் தாலுகாவில் வசிப்பவனென்றும், ஓர் நாயர் அல்லது மேனனை விடச் சமயத்தின்பால் மிக்க ஆர்வமுடையவனென்றும் அவன் பால் தெரிவித்தேன். தெரிவித்தும் அம் மலையாளி என்னை உள்ளே செல்லவிடாமல் ஒரேயடியாய் வெளியே சென்றுவிடுமாறு சொல்லிவிட்டான். நான் நெஞ்சம் வருந்தி என் நிலைமையைப்பற்றி ஆராயத் தொடங்கினேன். இவ்விருபதாம் நூற்றாண்டில், கல்வி எங்கும்பரவி அறியாமையாகிய இருட்டினை அகற்றிவரும் இந்நாளில், இந்தியாவில் எங்கணும் மக்கட் கூட்டுறவு மதச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு நாகரீகமடைந்துவருமிந்நாளில், சாதி வேற்றுமை ஒழிந்துவருமிந்நாளில், ஆங்கில ஆட்சியிலுள்ள நாடுகளில் சமய வழிபாட்டு உரிமை கொடுக்கப்பட்டு வரும் இந்நாளில், கொச்சி நாடானது இன்னும் இருட்டில் உழன்று கொண்டிருப்பது வருந்தத்தக்கதல்லவா? கொச்சி வாசிகள் ஆங்கிலக் கல்வியில் முன்னேறி வருகிறார்கள். வாழ்க்கையின் பிறதுறைகளிலும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தம் பழைய குருட்டு வழக்கங்களையும் சமயத்துறைகளில் குறுகிய நோக்கத்தையும் விட்டுவிடாமல் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இம்மலையாளிகள், உயர்ந்த குலத்தார்முதல் தாழ்ந்த குலத்தார்வரை, தென்னிந்தியாவிலுள்ள பழநி, இராமேச்சுவரம்

போன்ற புண்ணிய நகரங்களுக்குச்சென்று கோயில்களுக்குச் செல்லுங்கால், யாதொரு பாகுபாடும் காட்டப்படாமல், பிற இந்துக்களுக்கு ஒப்பாய் ஆலயத்தில் தொழுவதற்கு உரிமை யளிக்கப்படுகின்றார்கள். அக்கோயில்களில் பிற இந்துக்களுக்கு ஒப்பாய் இம்மலையாளிகள் நின்று தொழக்கூடாது என்று தடுக்கப்பட்டால் இவர்கள் நெஞ்சம் எத்துணைப்புண்படும் என்பதை இதனைப் படிப்பவர்களே நினைத்துக் கொள்க.

இராமேச்சுவரம் கோயிலுக்குச் செல்லும் ஒவ்வொரு மலையாளிக்கும் தலைவரி விதிக்கப்பட்டு வந்தது. சிறிது காலத்துக்கு முன்பாகத்தான் இந்துசமய அறநிலையப் பாதுகாப்புக்கழகத்தாரின் 'சிபார்சின்' பேரில் அவ்வரி நிறுத்தப்பட்டது. சமய 'விவகாரங்'களில் கொச்சியைப் போன்றுள்ள திருவாங்கூரில் கூட வைக்கத்தில்,கோயிலில்சென்று கடவுளைத் தொழும் உரிமை எல்லாச் சாதியாருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. கொச்சியும் ஏன் திருவாங்கூரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி உள்ளூர் இந்துக்களுக்குள்ள உரிமைகளைப் பிற இடங்களிலிருந்துவரும் இந்துக்களுக்கும் வழங்கக் கூடாதென்பது தெரியவில்லை.

இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக்கழகத்தார் இதில் தலையிட்டுப் பிற இடங்களிலிருந்துவரும் உயர்குலத்தவர்களையாவது கொச்சிக் கோயில்களில் உட்செல்லுமாறு, அந்நாட்டு அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வது முறையாகும். அவ்வாறு செய்யின் கொச்சிச்சட்ட சபை அங்கத்தவர்கள், இக்குறைகளை நீக்க ஓர் தீர்மானங் கொண்டுவரவும் வழிகாட்டுவதாயுமிருக்கும்.

[நமது பிள்ளையவர்கள் மேலே குறித்துள்ள குறைகள் வருந்தத் தக்கனவாகும். சாதிவேற்றுமையின்றி இந்து சமயிகள் எல்லோருமே நமது கோயில்களில் சென்று கடவுளை வழிபட உரிமை பெறவேண்டுமென்பதே நம் கொள்கையாகும். கடவுள் அனைவருக்கும் பொதுவாயுள்ளவர். அவர் கோயிலில் வேற்றுமை பாராட்டப்படுதல் அறிஞர் செயலாகாது.]

இருபெண்மணிகளின் உரையாடல்

[திரு. மு. பெ. குமாரநாயகம் பிள்ளையவர்கள்]

(௫-ம் சிலம்பு, ௬௩௪-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வதி—உரை நடை நூல்களில் சிறந்தனவும் இன்பம் பயப்பனவுமில்லை என்றல்லவா சொல்கின்றனை.

திலகவதி—இராமலிங்க அடிகள் இயற்றியருளிய 'மநுமுறை கண்டவாசகம்' போன்ற ஒரு சிலவே இன்பம் விளைப்பன. அவ்வடிகள் அச்சிறு புத்தகத்தில் தமது செய்யுளியற்று மாற்றல் முழுவதும் தோற்றுமாறு அருளியுள்ளார்கள். அறியாப்பொருளொன்றை எல்லாரும் நன்கு அறியவேண்டிப் பாவலர்கள் செய்யுட்களிலே, பல உவமைகளை யமைத்துக்கூறி விளங்கவைப்பார்கள். உரை நடையிலோ ஒன்று அல்ல திரண்டு எடுத்துக்காட்டுகளுக்குமேல் காண்பதரிது. பின்வரும் பாக்களைப்பார்.

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மர
னஞ்செ ழுத்து முணரா வறிவிலோர்
நெஞ்சு மென்ன விருண்டது நீண்டவான்
(தடுத்தாட்கொண்ட புராணம், ௧௫௬)

கலகமிடு மமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடாத் தியசிந்தா மணியை மெய்யென்
றுலகிலுள்ளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணு
துமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க விரும்பைமென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்.
(சேக்கிழார் நாயனார் புராணம், ௨௰)

இப்பாக்களிலுள்ளவாறு ஒன்றுக்கு மேற்பட்ட எடுத்துக்காட்டுகளை அருள்வள்ளலார் ஒருவரே, பலவிடங்களில் அணிபெற அமைத்திருக்கின்றார்கள்.

பார்வதி.—அறிஞர்பலர் செவ்விய உரை நடைநூல் வெளிவர உழைக்கின்றனரே. அஃது எதற்கு?

திலகவதி.—ஆம். முன்னாட்களில் இருபாலாரும் தமது கருத்துக்களைப் பாக்களாகவே யியற்றிப் போயினர். அவைகளிலுள்ள பொருள்களை; விரைவிலும் எளிதிலும் சிறிது கற்றோர் உணரச்

கூடாமையால், அவர்கள் அவற்றின் பயனைத் துய்க்குமாறு செய்யவேண்டியே யன்றிச் செய்யுளைவிட உரை நடை சிறப்புடைத்தென நன்கு மதித்தன்று. இன்னும் ஒன்றெண்ணிப்பார். ஒருவன் ஒரு செய்யுளை நன்குணர்ந்துவிட்டாலோ பின் ஒரு பொழுதும் அவன் அதை இழக்க முடியாவண்ணம் அது அவனது உள்ளத்தில் பதிந்துவிடும்.

பார்வதி.—பாக்களாயின் கருத்துக்களை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்வது எளிதென்கிறாய். வேறு நலன்களுமுண்டோ?

திலகவதி.—சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் நயம் செய்யுட்கண்ணே மிகுதியும் காணலாம். திருத்தொண்டர் புராணசாரத்தில் இரண்டு செய்யுட்கள் நினைவுக்கு வருகின்றன.

“போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்குறுக் கையர்திபர் புகழ னார்பான்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடசெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.” (௨௪)

வந்தமைக் கையரருளா னீறு சாத்தி
வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னாரே. (௨௫)

இவ்விரண்டு செய்யுட்களில் செறிந்துள்ள நிகழ்ச்சிகளை உரையாய் எழுதிப்பார். எவ்வளவு நீண்டு செல்கின்றது. மேலே யுள்ளவற்றை நெட்டுருச் செய்து கொள்வதுபோல் உரை நடையி லுள்ளதை அவ்வளவு எளிதில் பாராமல் படிக்கக்கூடுமா? புல்லறிவுடையோரும் வள்ளுவர் வாய்மொழியை (திருக்குறளை) நெட்டுருச்செய்து கொண்டு வேண்டும் காலங்களில் அவற்றை எடுத்தாண்டு தங்கள் கருத்துக்களை நிலைநாட்டுகின்றனர். அப் பொய்யாமொழி உரை நடையிலிருப்பின் அவ்வளவு எளிதாய்ப் பயன்படுமோ என்று ஐயுறுகின்றேன். பெரும்பாலார் கம்ப இராமாயணத்தை விரும்பிக்கேட்பது, இராமாயண நிகழ்ச்சி

உண்மை குறித்தாவது இராமனிடத்திலுள்ள கடவுட்டன்மைக் காகவாவது மன்று. பின் எற்றுக்கெனின், கம்பரது செய்யுள் நலம் குறித்தேயாகும்.

பார்வதி.—இராமாயணத்தின் உண்மைக்காகவுமன்று என் றனையே அஃதென்னை?

திலகவதி.—நன்று கடாவினை. இராமாயணம் என்பது கந்த புராணத்திலுள்ள பல அடிப்படைகளின் தொகுதிகளை (The composition of many main plots of Kandapuranam with necessary changes here and there to suit their own (Aryans interests) பெருக்கியும், குறைத்தும், சிறிது வேற் றுமைப்படுத்தியும் ஆரியராகிய தாங்கள் புகழும் உயர்வும் அடையுமாறு தொகுத்து வைக்கப்பட்டதாகும்.

பார்வதி.—அன்பு கூர்ந்து விளக்கிக்காட்ட வேண்டுகிறேன்.

திலகவதி.—எடுத்துக் கொண்டதை ஒருவாறு முடித்து விட்டுப்பின் அதை நோக்குவோம்.

பார்வதி.—நல்லது.

திலகவதி.—பாக்களிலுள்ள பண்களைப் பயின்று கொண் டால் இசையுடன் படிக்கவியலும். அப்பொழுதுண்டாகும் மகிழ் விற்கு ஓர் எல்லை காண்பதரிது. பண்ணும் இசையும், திருவருளை நமது உள்ளக் கண்ணிற்குக் காட்டும் ஆற்றலுடையன என்பது திருவெண்காட்டடிகள் அருளிச்செய்த "பண்ணுண்டுபாட" என்பதையும், தாயுமான அடிகள் அறிவுறுத்திய

"மூவர் செய்பனுவலது பகரவோ விசையுமில்லை"

என்பதையும்,

"பண்ணேறு மொழியடியார் பரவிவாழ்த்தும் பாதமலர்"

என்று திருவருட்பா இராமலிங்க வள்ளலார் மொழிந்துள்ள தையும் உற்று நோக்குவோர்க்குப் புலனும். மேலும் சமய குரவர்களெல்லாம் திருவருளின் பெற்றியையும் அத்திருவருள் அடியார்க்குளளிவந்துதவும் அருளாற்றலையும் செய்யுட்களாகவே திருவாய்மலர்ந்துள்ளார்கள். ஒருவன் இறைவனுடைய அருட் டன்மைகளையுணர்ந்து அவனுடன் இரண்டறக்கலக்க வேண்டு மாயின் அவன் அவற்றைத்தானே ஓதிப் பொருள் அறியவேண் டியது இன்றியமையாததென்பதை நீ மறுக்க முடியுமா?

பார்வதி.—மறுக்கவியலாது.

திலகவதி.—திருவருளுக்கு இலக்காகவும் செய்யுள் நலம் நன்கு பயன்படுமென்பதை நீ உணர்ந்து கொண்டாய். நிற்க,

பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினு டிருவுருவின் மென்சாய
லேர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழுபரவை.

அஞ்சிலே யொன்றுபெற்று னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றுருக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற வணங்கைக்கண் டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தா னவனெம்மை யளித்துக்காப்பான்.

மேல் காட்டிய இரண்டு பாக்களை எடுத்துக் கொள்வோம். அவற்றில் வியக்கத்தக்கவை ஏதேனும் உனக்குத் தோன்றுகின்றதா?

பார்வதி.—ஆம். முதலிலுள்ளதில் பரவை என்ற சொல் ஏழு இடங்களிலும், பின்னதில் அஞ்சிலே என்ற மொழி ஐந்திடங்களிலும் வருகின்றனவேயன்றி வேறு நயம் எனக்குப் புலப்படவில்லை.

திலகவதி.—அப்படியாயின் விளக்குவேன் என்று சொல்கையில், பார்வதியின் தங்கை காந்திமதி இவர்களிருக்குமிடம் குறுகி, அக்கா! கோயிலுக்குப்போக உன்னை அழைத்துவரச் சொல்லி அம்மாள் சொன்னுள் என்றஅளவில், திலகவதி,இன்று திருவாதிரை திருவிழா ஆகையால் யானும் உடன் வருகின்றேன் சற்று நில் என்று பார்வதியிடம் சொல்லிவிட்டு உள்ளேசென்று இருமுதுகுரவர்பாலும் விடைபெற்று, ஒருதட்டில் பூ, தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு முதலிய எடுத்துக்கொண்டு பார்வதியை யடைந்து அவள் வீட்டிற்குச்சென்று அவள் அன்னையும் வேறு சிலரும் உடன் வரச்சென்று கூத்தப்பெம்மானைப் பணிந்து கொண்டு சென்று அவற்றை வழிபாடியற்றுவித்துத் திருநீறுடன் பெற்றுக்கொண்டதும் திலகவதி,

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஊன டைந்த வுடம்பின் பிறவியே
தான டைந்த வுறுதியைச் சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாந டஞ்செய் வரதர்பொற் றடொழு.

என்று இனிமையுடன் பாடிப் பணிந்து எல்லோரும் மீண்டனர்.

பார்வதி.—பத்துமணியாகிறது. பள்ளிக்குச் செல்லவேண்டும். நாளைக் காலையில் எஞ்சியுள்ளவற்றைப்பற்றிக் கலந்து உரையாடுவோமாக?

திலகவதி.—நல்லது. அவ்விதமே செய்வோம். (என்று சொல்லிவிட்டுப் பிரிந்து போயினுள்.) .(தொடரும்).

தொண்டர் படை

[திருவாளர் இலங்கை செ. சின்னதம்பி]

(௨௯௭-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவதாகத் தொண்டர்கட்கு 'அவா வின்மை' வேண்டும். தனக்கென ஒரு வகை ஆக்கமும் தேடாது பிறர் நல உழைப்பையே தனது ஆக்கமாகக் கொண்ட ஒருவனே உண்மைத் தொண்டன். அவனே அவா அற்றவன். தந்நல விழைவு எனும் அலகையைச் சிதைத்து நாட்டு நல விழைவு எனும் எழிலின் நங்கையைத் தன்னுள்ளத்தில் ஈர்த்துக் கொண்ட ஒருவனே இப்பிறப்பின் முழுப்பேறும் எய்திய விழுமியோன். அவனது மனமும், விழைவும், பேச்சும், செய்கையும், வாழ்வு மெல்லாம் ஓர் இன்ப உலகைச் சார்ந்தனவா யிருக்கும். அவன் இருப்பது இம்மண்ணுலகேபோற் றோன்றினும், அவன் நிலவும் நாடும் வேறு; உலவும் உலகும் வேறு. இவ்வுலகினிடை வாழ்வோர்க்கு இன்பமென்பதெது? ஆக்கமென்பதெது? பிறர் துன்பத்தில் ஒருவனது இன்பம்! பிறர் நலிவில் ஒருவனது பொலிவு! பிறர் கேட்டில் ஒருவனது ஆக்கம் ! பிறர் துன்பமே ஒருவனது இன்பமாயின், அஃது எங்ஙனம் இன்பமாகும்? பிறர் நலக்கமே ஒருவனது செழுமையெனின், அஃது எங்ஙனம் செழுமையாகும்? அன்பர்களே நினைமின் ! இவ்வுலகத்தில் இன்பப் பெரும்பெயர் புனைந்து உலவுவனவெல்லாம் உண்மையில் இன்ப உலகிற்கு உரியனவல்ல. இக்கால வணிக உலகில் ஒரு பொருள் ஆக்கினொருவன் அதற்கு ஒரு 'குறி' (Trade Mark) இட்டு வெளிப்படுத்த, அக்குறியிடத்து உலகினர்க்கு உண்டாய பற்றை அறிந்த ஏனைய வியாபாரிகள் தாமும் தம் பொருள்களுக்கு அந்தக் குறியைப் புனைந்து உலகத்தை மருட்டி ஏமாற்றி வருவதைக் காண்டும். அந்தக் குறிக்குரிய உண்மைப் பொருள்வேறு; உரிமையில்லாத பொய்ப் பொருள்கள் வேறு. ஆயின் இரண்டு வகையும் விரவிக் கலந்து ஒன்றாகவே உலகிடை வழங்கிவரும். இவற்றுள் உண்மைப் பொருளைப் பெற்றவர்கள் அதனால் உறும் பயனை யெய்தலும், பொய்க்குறி யிடப்பெற்ற பொருளைப் பெற்றவர்கள் அப்பொய்ப் பொருளால் ஒருவகைப் பயனும் அடையாது ஏமாந்துபோய் இடர்ப்படுதலும் கண்கூடு. இன்ப உலகிலும் இத்தகைய சூழ்ச்சிகள் பல உண்டு. உண்மை இன்பம் இனையதென்பதை முற்றும் உணர்ந்த முழுமுதற் பெரியோர்கள் 'இன்பக்குறி' வகுத்துச் சென்றனர். பின்வந்த புன்மையோர் பலர் இக்குறியைப் பொய்ப் புன் பொருள்களுக்கும் புனைந்து

விட்டனர். ‘பிறர் இன்பமே தன் இன்பம்’, பிறர் ஆக்கமே தன் ஆக்கம்’ என்ற உண்மை இன்பக் குறிகளெல்லாம் இக்காலத்தில் மழுங்கிக் கிடக்கின்றன. ‘பிறர் ஆக்கம் தன் கேடு,’ ‘பிறர் கேடு தன் ஆக்கம்’ என்ற குறிகளே கவடுகொண்டெழுகின்றன. இக்கொடுங் கவடுகளும் கோடுகளும் அறவே களையப்படல் வேண்டும். தம் நாட்டின் கேடும் ஆக்கமும் தமது கேடும் ஆக்கமுமாகக் கருதும் அவர்களே பெருந்தொண்டர்கள். தம் முழுவதையும் நாட்டிற்கு ஈந்து (தியாகஞ் செய்து) வாழும் திருவினர்களே உண்மைத் துறவிகள். ‘கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கும் விழுமியோரே தொண்டருள் தொண்டர்’. இறை வழிபாடுதானும் அன்னார்க்கு இறைவன்பால் இயல்பாய் எழுந்த ஒரு அன்பின் கனிவினால் நிகழ்வதே யன்றிப் பிறிதொன்று கருத்திற்பட அதனான் நிகழ்வதில்லையென்க. வீட்டின்பத்தையேனும் இப்பெரியோர் தமக்கெனவேண்டி நிற்கமாட்டார்கள். பிற உயிர்களெல்லாம் இன்னல் நீங்கி இன்பம் எய்தவேண்டுமென்பதே தொண்டர்களது முழுமுதல் விழைவு. அவர்களுக்குத் தமக்கெனவொரு ‘முத்தி’ யில்லை, ‘அத்துவிதக் கலப்புமில்லை. தம்முயிரைப் பிற உயிர்களோடு ஒன்று சேர்த்து எண்ணும் அவர்கட்குத் தனித்த முத்திதான் யாண்டுளது’. பிறஉயிர்களுக்கு அருட்டொண்டு ஆற்றுதலைத் தம்தலைமேற்கொண்ட அன்றைக்கே தொண்டர்கட்கு இறையுடன் ‘அத்துவிதக் கலப்பு’ நிகழ்ந்ததென்றுணர்க. ‘அன்பர்பணி செய்யஎன்னை யாளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே’ என்ற செம்மொழியின் பொருளையுமோர்க. இறை பணியே இன்ப இறுதிநிலை யென்று கொள்ளல் வேண்டும். இறை பணியில் தோய்ந்தான் ஒருவன் இன்பவெளியில், இறையொளியில், புகுந்தான் என்று தயங்காது சொல்லலாம். இறைபணியே முடிந்த இன்பநிலை யென்பதற்கும் சைவநூல் முடிபுகட்கும் ஏதும் வேற்றுமையுண்டோ தெரியவில்லை. ஆயின் பணியே எமது சைவம்; பணியே எமது சித்தாந்தம்; பணிப்பெருக்கே எமது சைவசித்தாந்தம். பணியின் விளைவே பேரின்பப் பெருவிளைவென்க. இப்பணிப்பெருஞ்சுனைத் தண் புனலிற் றிளைத்து ஆடுவதே பிறவிப் பெருநோய் தீர்ந்து உய்தற்குரிய பெருநெறி யென்று யான் தயங்காது சொல்வேன். “கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்” “அற வாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலறிது” என்ற இக்குறள்களினும் இப்பணிப்பொருள் எனக்குக் காட்சியளிக்கின்றது. பணியின் முதன்மையைப் பேசாத சமய ஆசிரியர்களை யான் இன்னும் அறிந்திலேன்.

(தொடரும்)

சேட்படை

[இளவழகனார்]

நெறிமருப்பு எருமை நீல இரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன் மகள்இவள்
பழன வெதிரின் கொடிப்பிணை யலளே.

(ஐங்குறுநூறு, கூ௩.)

அறல்பட்ட கொம்புகளையுடைய கருநிறம் வாய்ந்த பெரிய எருமைக்கடாக்கள் குளங்களிலுள்ள மணங்கமழும் ஆம்பன் மலர்களை மேய்ந்து கெடுக்கின்ற, வயல்கள் சூழ்ந்த ஊரன் றனக்கு மகளாய இவள் கரும்பின் பூக்களாற் றொடுக்கப்பட்ட மாலையையுடையவள்' என்பது.

நெறிமருப்பு - அறல்பட்ட கொம்பு; ஆவது நெறி நெறியாக இடையிடையே வெட்டுப்பட்டதுபோன்ற தட்டைக் கொம்பு. 'நெறி மருப் பெருமை நீல இரும்போத்து' என்னு மித்தொடரை இருந்தவாறே முழுதொத்து 'நெறிமருப் பெருமையின் ஒருத்தல் நீளினம்'* என்று வருஞ் சிந்தாமணிச் செய்யுளடியும், 'அறல்பட்ட கொம்பினையுடைய எருமைச் சாதியிற் கடாவாகிய பெரியதிரள்' என்று அதற்கு உரை யெழுதும் ஆசிரியர் நச்சினார்க்கினியருரையும் இங்கு நினைவு கூரற் பாலன. போத்து - ஆ எருமை புலி முதலிய விலங்குகளின் ஆண் பாற் பெயராதலின், இங்கு 'எருமைக்கடா' என்று உரைசெய்யப் பட்டது.

> "போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
> யாத்த ஆண்பாற் பெயரென மொழிப" †
>
> "பெற்றம் எருமை புலிமரை புல்வாய்
> மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே"‡

என்பன தொல்காப்பியம். ஆம்பல் வயலிலும் மலருமென்பது 'வயன் மலராம்பல்'§ என்னும் இவ்வைங்குறுநூற்றின் மற்றொரு செய்யுளிற் றெளியப்படுதலின் பொய்கையிற் பூக்கும் ஆம்பல் இங்குப் பொய்கை யாம்பலெனப்பட்டது. 'வெறிமலராம்பல்' என்று கூட்டுக. மயக்கும் - கெடுக்கும். அதாவது தின்று கெடுத்தல். 'மயக்கும் ஊ'ரென்க. ஊரன்- மருத நிலத்துத் தலைமகன். இதனை "மகிழ்நனூரன் கிழவன் றலை மகன்"$ என்னும் பிங்கலந்தையாற் றெளிக. அணுகவந்த தலைமக னைத் தோழி சேட்படுத்தல் ஊடல்போலுதலால், இச்செய்யுள் ஊடல்

---

* சிந், நாமக,கடு. † தொல், மரபியல், உ. ‡ தொல் மரபியல், சக.
§ ஐங்குறு, எஉ. $ பிங்கலந், ருஅக.

திணையாகிய மருதத்திணைபற்றி வந்தது. எருமை, பொய்கை, ஆம்பல், கழனி, ஊரன், பழனவெதிர் என்பவை இதனைத் தெளியச் செய்யும். பழனவெதிர் - கரும்பு; பழனம் - கழனி; வெதிர் - மூங்கில்; கழனியில் மூங்கிலைப்போன்று வளர்ந்து விளைவது கரும்பாதலால், அது பழன வெதிரெனப்பட்டது. கரும்பின் பூ கொடிபோலுதலால், கொடி ஆகு பெயராய் அப்பூவை உணர்த்திற்று. அல்லது கொடி என்பதற்கு 'நீண்ட' வெனக்கொண்டு கொடிப்பிணைய லென்பதனை நீண்டமாலை என்றுரைத்தலு மொன்று. பிணையலள் - மாலையையுடையவள். ஏ - இறுதிநிலை.

தோழியைக் குறையிரந்து வருந் தலைமகன் கையுறைத் தழை கொண்டுவந்து அதனை ஏற்றுத் தன் தலைவிக்குத் தந்து அவளை எப்படியா னுங் கூட்டிவைத்திடுமாறு தோழியை வேண்டுதலும், அப்போதவள், தன் தலைவியை இவனோடு கூட்டுவிக்குந் தன் முயற்சியினருமையும், அத்தலை வியின் அருமை பெருமையும், இவ்வாறு நீளக் களவுப் புணர்ச்சியில் நின் றொழுகாது உடனே மணமுடித்துக்கொள்ளுதலே நன்றும்போலுமென் னும் எண்ணமும் அவனுக்குத் தோற்றுவித்தற் பொருட்டு, 'உங்கள் தலைவியை நீங்கள் இப்போது கூடுதலியலாது; யான் கூட்டுதலுமியலாது' என்னுங் கருத்தைப் பற்பல ஏதுக்களாற் குறித்துக் கூறித், தோழி எப்படியானுங் கூட்டிடுவாள் என்று நம்பித் தலைவியையும் அத்தோழியை யும் அணுக்கமாய் நினைத்து வந்த அத் தலைமகனை 'ஓ! ஓ ! இவர்கள் நாம் நினைத்தபடி எளிதிலே கிட்டுதற்குரிய அத்துணை அணுக்கமாயினாரல்ல' ரென்று உட்கொண்டு அகன்று போம்படிச் சேட்படுத்துவள். சேட் படுத்துதலாவது அகற்றுதல்; நடத்தல், நடை என்று நின்றவாறு போலச் சேட்படுத்தல் என்னுந் தல் விகுதியேற்ற இத்தொழிற் பெயர்ச் சொல்லே சேட்படை என்று ஐ விகுதியேற்று நின்றது. இங்குச் சேட் படுத்துதல் என்பது அணுக்கமாய் நினைத்த அவன் நெஞ்ச நினைப்பையே யென்று கொள்க. ஒரு பொருளை அடைவித்தற்கு முன்னால் அதனை அடைவித்தலில் உள்ள அருமையைப் புலப்படுத்திப் பின்னரதனை அடைவித்தால், அடைதற்கரிய பொருளை அடைந்தோமே யென்று அதனை அடைவார்க்கு முன்னினும் பெரும் பேரின்பம் பெருகுதலோடு, அதனை அடைவித்தார் மாட்டும் இத்துணை அரிதாய பொருளை எப் படியோ அடைவித்தார்களே யென்று நினைத்து அவர் திறம் உணர்ந்து உள்ளம் நெகிழுமாற்றால் அன்பு வளரும். அடைந்திட்ட அப்பொருளின் மாட்டும் 'அரிதாய இப்பொருள் எமக்குக் கிட்டிற்றன்றே' என்று உலவாத உள்ள வீழ்ச்சியும் ஆணித்தரமான மெய்யன்பும் முறுகி நிலைக்கும். இங்ங னம் அகற்றி அணுகுவிக்குந் திறத்தாற் பேரன்பும் பேரின்பமும் முறுகி வலுப்பெற்று நிலைபெறாய் விளைந்திடுதலாலன்றே, இங்ஙனமே அகற்றி அணுகுவிக்கும் அம்மகளிர் திறமான ஊடலுக்கு ஊடலுவகை என்னுந் தலைப்பெயரிட்டு ஓரதிகாரம் நிறுத்து மற்றதன்கண்,

"தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன் றுடைத்து"

"உணலிலும் உண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது."

"ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு."

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்."

என்று பல பொருட்டிறம் வாய்ந்த திருக்குறள்களை நம் திருவள்ளுவனுர் அருளிச்செய்தனரென்பது. தோழி சேட்படுத்துதல் ஊடல்போ லுதலால் இச்செய்யுள் ஊடல் திணையாகிய மருதத்திணைபற்றி வந்த தென்றுமேலே கூறியதும் இக்கருத்தொற்றுமை கருதியேயா மென்க.

இவ்வாறு ஊடற்கருத்தின்பாலதாய்க் கருதியுரைக்கப்படும் இச் சேட்படை நுதலிச் "சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்" * என் றெழுந்துவரும் இறையனாகப்பொருள் நூற்பாவுக்கு உரையெழுது மிடத்து ஆசிரியர் நக்கீரனார், நல்ல ஆவின் பாலினைத் தயிராகத் தகுதிப் படுத்து முறியக்கடைந்து முன்னர்ப் புலனாகாத வெண்ணெயைப் புலனும் படியெடுத்து வைத்திடல்போல, அதனைக் கண்ணழித்துச் சொற் பொருள்கூறி அவற்றினின்றும் முன்னர்ப் புலனாகாத ஊடற்கருத்தினை யொத்ததோர் உயர்பெருஞ் செறிபொருள் நுட்பத்தை உருவியெடுத்து விளக்குகின்றார். அது:

"(சொற்பொருள்) சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும் - சிறை என்பது காப்பு, உற என்பது மிக, கிளத்தல் என்பது சொல்லுதல், சேண் என்பது அகற்றல், பட என்பது நிகழ்தல், நிறுத்தல் என்பது தழீ இக்கோடல்,

(பொழிப்பு) காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக்கோடலும் என்றவாறு:

(விரிவுரை) ஆற்றாத தன்மைக்கண் நிறுத்தலென்னுஞ்சொல் தழீஇக் கொள்ளுமென்பது;

(கருத்து) எனவே, தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று ஆற்றுவிப்பன சொல்லுமென்பதும் போந்தது."* என்பது.

நூற்பாவின் சொற்பொருள்கூறி அதன் ஆழ்பெருங்கருத்தை இவ் வாறு துருவியெடுத்துத் திட்பநுட்பஞ் செறியச் சுருங்கிய சொல்லால் விளங்க வைத்துரைத்த மதித்திறன் வாய்ந்த நக்கீரனாரது தனிப்பெரும் உரைக் கூற்றுமொழியிலும் 'ஆற்றாமை செய்வன போன்று ஆற்று விப்பன சொல்லும்' என்னும் ஊடற்கருத்துத் தெளியப்புலனாதல் காண்க.

இனி இவ்வாறு தோழி தலைமகனைச் சேட்படுத்துதற்கு மேலே தலைப்புச் செய்யுள் எடுத்துக் காட்டிய ஏது 'தலைமகள் மங்கைப் பருவ மடையாதவள், இன்னும் பேதைப் பருவத்தினளாவே இருக்கின்றனள்.

* இறைய. கஉ

ஆகவே நீங்கள் சொல்லும் செய்தி சிறிதும் பொருத்தமாகாதே' யென்பது. விளக்கமாகக் கூறப்படும் இச்செய்தியை அவ்வைங்குறு நூற்றுச்செய்யுள், விளக்கத்துக்கு ஏதுங் குறைவில்லாத முறையில், கற்பார்க்கு வியப்பும் அதன்வழி ஊக்கமும் ஒருங்கே உண்டாம்படி மிக அழகான குறிப்பின் வைத்து 'இவள் பழனவெதிரின் கொடிப் பிணையலள்' என்று கூறிற்று. 'கரும்பின் பூவினாற் செய்யப்பட்ட மாலை மணமில்லாதது; ஆகவே அதனை அணிந்திருக்கின்றனள் என்று கூறப்பட்ட தலைமகளும் மணங்கமழாதவள்;அஃதாவது மணங்கமழ்தற்குரியமலர்ச்சியில்லாதவள் ஆவது மங்கைப் பருவத்தின் பூப்பில்லாத பேதைப் பருவத்தினள்' என்பது. இங்ஙனமே இன்னொன்றும் அச்செய்யுளிற் குறிப்பின் வைத்துக் கூறப்படுகின்றது. அது, 'கதிரவன் மறைந்தான்; இவ்விடம் சாவலுடைத்து; நும்மிடமுஞ் சேய்த்து; எம் ஐமயன்மாருங் கடியர்; யான்தாழ்ப்பின் அன்னையு முனியும்; நீரும்போய் நாளைவாருமென இசைய மறுத்துக் கூறுநிற்றல்.' * இது 'காப்புடைத்தென்று மறுத்த' லென்னுந் துறையாம். இதனையே மேற்செய்யுள் 'எருமைப் போத்து ஆம்பன் மயக்கும் ஊர்' என்பதனாற் குறித்து விளக்கிற்று. அஃதாவது மேயத்தகுந்ததிது மேயத்தகாததிது என்னும் உணர்ச்சியின்றி, எருமைக்கடாக்கள் குளத்திலுள்ள ஆம்பன் மலரைக் கடித்துக் கெடுக்கும் ஊர் இவ்வூரென்பது. எனவே, 'அவ் வெருமைக்கடாக்களைப் போலவே இங்குக் காவலாளரெனவும் ஊராரெனவும் உள்ளவர்கள் நல்லதிது கெட்டதிது என்று எதனையும் ஆராயாது செய்து கெடுப்பர்; ஆதலால் நீங்கள் இறைவன் குறிப்போடு முழுதொத்த இயற்கை உள்ள வீழ்ச்சியினாற் களவொழுக்கத்தினின்று உங்கள் காதலியைத் தேடி வரினும் அதன் நன்மையை யறியமாட்டாது உங்களையும் எங்களையும் ஊறுபடுத்து வருத்துவர்; ஆதலால் இப்போது நீங்கள் இங்கு வருதல் பொருந்தாது' என்பது பெறப்படும். 'நெறிமருப்பு' 'நீலஇரும்' என்னும் அடைமொழிகள் எருமையின் கொடுமையையும், அதன்வழி ஊராரின் தீத்தன்மையையும் விளக்கியவாறும். அங்ஙனமே,'வெறிமலர்ப் பொய்கை' யென்பது ஆம்பலின் உயர்ந்த மென்றன்மையையும் அதன்வழி அத்தலைமகன் பொருந்திய காதலினிமைச் சிறப்பையும் உணர்த்திற்றெனக.

இவ்வுட்கருத்து நுட்பங்களை யெல்லாம்,

'நாற்றங் கொள்ளப்படாத கரும்பின் பூவாற்செய்யப்பட்ட நெடிய மாலையையுடைய ளென்பதனாற் பேதை யென்றவாறு அறிக. எருமைப் போத்து வெறிமலர்ப் பொய்கை ஆம்பன் மயக்கு மூரென்றது நல்லதன்மையை ஆராயாது கெடுக்கு மூராதலால், நினக்கு ஈண்டுவருதல் பொருந்தாதென்பதாம்'

என்று அச்செய்யுளுரையுங் கூறுவதாயிற்று. இவ்வுரை அச்செய்யுட்குப் 'பதவுரை' யென்று குறிக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட்கு உரையெழுதப்புகுந்த உரையாசிரியன்மார்க்கு, அதன்கண் மொட்டுண் மணம் போல உள்ளுள் விராஅய் ஒளிந்துகிடக்கும் நுண்மாண் பொருளை அதனை மலர்த்துத் தெளிய வெளிப்படுத்துதலே கடமையாம். ஆகவே

* பேராசிரியருரை, திருச்சிற், ௯௮.

மொட்டென்பது செய்யுள், மலரென்பது உரை: மணமென்பது கருத்து; எனவே கருத்தினை வெளிப்படுத்து முறையிற் செய்யுளை மலர்த்து உரைப்படுத்துவதே உரையாசிரியர் தொழில் என்பது நன்கு விளங்கும். விளங்கவே கருத்தினை வெளிப்படுத்துவது உரையாசிரியரின் முதல் நோக்கமென்றும், அதற்கேற்பச் செய்யுளினை மலர்த்தல் எனப்படும் சொல்லுக்குச் சொல் சொற்பொருள் கூறுதலென்பது அவர்க்குத் துணைநோக்க மென்றும் மயக்கமின்றித் தெளியப்படும். ஆகவே சொற்பொருள் கூறுதலை உயர்ந்த உரையாசிரியன்மா ரெல்லாரும் ஒரு பெரிதாநினைத்து அதனையே விரித்துக் கூறிக்கொண்டிராமற் கருத்து விளக்குந் திறத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பாரென்க. ஆதலாற்றான் ‘பதவுரை’ வேறும் விரிவுரை கருத்துரை வேறுவேறு மாகப் பிற்காலத்தார் பிரித்தெடுத்து மிக விரித்து உரைகூறும் உரைப் பகுதிக ளெல்லாவற்றையும் அச் செய்யுளுரை தன் முதல் நோக்கம் பற்றிக் கருத்துக் கூறுந் தொடரிலேயே, அவ்வவற்றின் முதன்மைக்குந் தகுதிக்கும் அளவுக்கும் ஏற்ப விளக்கிச் செல்கின்றது.

இவ்வாறெல்லாந் தமிழ் கற்பார் அரிதின் ஆழ்ந்தகழ்ந்து ஆராய்ந் துணருமாறு செவ்விய கருத்துக்களைத் தங்கட் செறியப் பொதிந்து வைத்துச் சுருங்கிய வடிவில் சருக்கரைக் கட்டியுங் கட்டிப்பாயசமு மென இனிமை விளக்கித் திகழும் எம் பழந்தமிழ்ச் செய்யுட்களையும் அவற்றின் உரைகளையுந் தமது மதிக்கொழுந்தினைத் தீட்டி நிறுத்துப் பயில்வாரன்றே தமிழ்வளம் பயின்றாராவர்! அவரன்றே தமிழின்பம் இனைத்தென்று நுகர்ந்துணர்ந்தாராவர்!!

சொல்லைச் சுருக்கிப் பொருளை விளக்குங் கருத்துட்கொண்டு, செய்யுட் பொருளில் முதன்மைக் கருத்துக்குத் துணையாய்வருங் கருத் துரைகளை யெல்லாம், முதன்மையான சொற்றொடருக்குத் துணைத் தொடர்களாய் அதனை அடுத்து நாட்டுநகர்வளன், இயல்பொருள் வளன், அடைமொழிப் பொருள் முதலியவற்றைக் கூறிவருந் தொடர் களிலேயே, அவற்றுச் சொற்பொருட் கருத்துக்களின் இயற்கை நிலைக்கு முரண்படாத வகையில் அமைத்து நிறுத்தியும், எடுத்துக்கொண்ட செய் யுட்பொருளையும் அதன் பெருமை சிறுமைகட்குஞ் செறிவு விரிவுகட்கும் திட்ப நுட்பங்கட்கும் ஏற்ப இசைத்து நிறுத்தியும் நல்லிசைப்புலவராவா ரெல்லாருஞ் செய்யுளியற்றுவர். ஈதன்றே தமிழ் வளமென்பது! வெறுஞ் சொல்லாவதுவெறும் பொருளாவது வளங் காட்டுமாறில்லை. குமுறிப் பெய்த பெருமழை நீர் நிலத்தின் அமைப்புக்கும் இயல்புக்கும் ஏற்ற வாறு மேடுபள்ள மறிந்தோடித் தங்குமிடந் தங்கி ஊறுமிடத்தூறிச் சுவை மல்குமாயின் அச்சுவையேறிய நிலம் வளங் காட்டுமாறுபோல, சொல் லும் பொருளும் இணைந்து விரவிநிற்குமிடத்து அச்சொல்லியல்புக்கும் பொருளியல்புக்கும் ஏற்றவாறு ஒன்றோடொன்று அமையவேண்டிய விடத்து இணைந்தமைந்து ஒழுகிக் கொழுவிச் சுவை யெதிர்ந்து நிற்கு மாயின் அச்சொற்பொருட் பிணிப்பான அவ்வகைச் செய்யுட்களே தமிழ் வளங் காட்டிடும் என்க. சொற்களூடு பொருள்சென்று நிரம்பிச் சுவை மிகுத்து விளக்குமழகே தமிழ்வளமாகும். இவ்வகைப்பட்ட தமிழழகுந் தமிழ் வளனும் மலிந்தவை மணிவாசகர் திருக்கோவையார், கலித் தொகை, குறுந்தொகை முதலான பொருளிலக்கியங்களும், திருவள்ளு

வர் திருக்குறளென்னும் அறநூலிலக்கியமும், சிலப்பதிகாரம் சேக்கிழார் திருத்தொண்டர் புராண மென்னுங் கதை யிலக்கியங்களும், திருஞான சம்பந்தப்பெருமான் தேவாரத் திருமொழியென்னும் பாட்டிலக்கியமும், இறையனாரகப்பொருளுரை யென்னும் உரையிலக்கியமும், தொல்காப்பிய இலக்கணமும் இன்னும் இவைபோன்ற பிறவுமென்று கொள்க. இவையெல்லாம் விரிப்பிற் பெருகும். அது கிடக்க,

இனித் திருச்சிற்றம்பலக்கோவையாருள், தலைவியின் இளமை கூறி மறுக்கும் இவ்வைங்குறுநூற்றுச் செய்யுட்டுறைக்கு முன்னூற் பதினன்கு துறைகளும், பின்னூற் பதினொரு துறைகளுங் காணப்படுகின்றன. குறையிரந்து செல்லுந் தலைமகன் சந்தனத் தழையைக் கையுறையாக எடுத்துக்கொண்டு தோழியிடைச்சென்று அதனைவாங்கிக்கொண்டு தன் குறையை முடித்துத் தந்தருளுமாறு அவன் வேண்டுவான். இது 'தழைகொண்டு சேற' லென்னுந் துறையாம். இங்ஙனம் வேண்டினனை இனிப் பல ஏதுக்கள் கூறித் தோழி சேட்படுத்துவள். சேட்படுத்துமாறு: இச்சந்தனத் தழை எங்கட்கு வந்தவாறென்னோ வென்று இங்குள்ளாரால் ஆராயப்படுமாதலால், அந்தத் தழை எங்கட்குத் தகாதென்றும், யாங்களிருக்கும் இக்குன்றிலில்லாத தழையைத் தருதல் எங்கட்குக் குடிப்பழியா மென்றுங் கூறிச் சேட்படுத்துவாள். இவற்றைக் கேட்ட தலைமகன் இந்தச் சந்தனத் தழை தகாதென்று மறுத்தாளாமல்லது என் குறையிரவை அவள் மறுத்தவாறில்லையென்று நினைத்து அந் நிலத்துக் குன்றிலுள்ள வேறு தழைகொண்டு செல்வான். செல்வாற்கு, அத்தோழியாவாள் 'என் தலைவியின் நினைவைத் தெரிந்துகொண்ட பின்னர்த்தான் இதனை, ஏற்றுக்கொள்வேன்' என்று கூறி மறுப்பள். அங்ஙனமாயின் தலைவியின் நினைவை அறிந்தே வந்து பெறுகவென்று தலைவன் உண்ணினைந்து நிற்பத், தோழி அவள் நினைவைத் தான் அறிவாள்போற் சென்று மறைந்து பின்பங்கிருந்து மீண்டு, தானேயொன்று படைத்துத் 'தலைவிக்கும் இத்தழை உடம்பாடுதான்; ஆயினும் இப்பூந்தழை குற்றாலமென்னும் ஓரிடத்தன்றி மற்றிடத்தில்லாமையான், அஃதீங்கு வந்தவாறென்னோவென்று பிறரால் ஆராயப்படுமாதலின், அத்தழை எங்கட்கு ஆகாதாம்' என்பள்.

தழையாயினன்றே இவ்வாறெல்லாம் மறுத்துரைக்கப்படுகின்றது: ஆகவே கண்ணிகொண்டு செல்வோ மென்றுன்னிக் 'கழுநீர் மலரைத் தலைமாலையாக அழகு பெறப் புனைந்தெடுத்துச் செல்வான். அதனையும் மறுத்து' என்தலைவியாவாட்குச் செவிலித் தாய்மார் முன்னரே சூட்டியுள்ள மாலைகட்குமேல் யானென்று சூட்டுவேனாயின், அவள் நாணு நிற்பள்' என்று அவட்குள்ள நாணத்தை யுரைப்பாள். அதுதானுமன்றி யாங்களெல்லாரும் வேங்கை மலரை அணிவோமே யன்றித் தெய்வம் அணிதற்குரிய இம் மணங்கமழ் மாலையை அணிவோமல்லோ மென்றும் அஃதிசையாமை கூறுவள். இம்மறுப்புரைகளெல்லாவற்றையுந் தலைமகன் தமது குலத்துக் கிசையாமை கூறியதே யன்றி என் குறைக் கிசையாமை கூறிற்றன்றுமென உட்கொண்டு மாந்தழையும் அதன் மலருங்கொண்டு மீண்டுஞ் செல்வான். அதற்கவள், 'அன்னமும், பெண்மானும், கிளிகளும் முறையே நடையும் பார்வையும் பேச்சும் பெறுதற்கு நேரம் வாயாது நிற்கின்றன. நீங்கள் இவ்வளவு நேரமாக இங்கு

வந்திருந்தவாறும் அவட்குத் தெரிந்திலது. ஆகவே நேரம் பார்த்துத் தான் அவள் மாட்டுச்செல்லல்வேண்டும். ஆதலால் இன்று அவளைப் பார்க்கும் நேரம் வாய்த்திடுமாயின் அப்போதிதனைக் கொண்டுவாருங்க' ளென்று சொல்லிவிடுவாள். இதற்குட் பொழுது சாய்ந்து கதிரவனும் மறைந்திடும். 'கதிரவன் மறைந்து இரவும் வந்ததாதலின் இங்குக் காவலர் சூழ்ந்து கெடுதி செய்வர்; ஆதலால் இன்றுபோய் நாளைவாரு'மென்பாள். இதனைத் தலைவன், 'இங்ஙனமிவள் இங்குள்ள நிலைமையை எனக்கு இருந்தவாறே கூறினாளாயது என்பாலுள்ள அன்பினாலல்லது வேறில்லை; இத்துணை அன்புள்ளவள் எனக்கிக் குறையினைக் கட்டாயம் முடித்திடுவள்' என்றெண்ணி அவள் கூறியவாறே மறுநாள் செல்வான்.

இரண்டாநாள் மிக எதிர்ந்த விருப்பத்தோடு தோழியிடைச் சென்றானுக்கு, அவள் ஐய, 'யான் குற்றேவன் மகளாதலால் நீங்கள்கூறும் இவ்வரும்பெரும் மறைபொருட் செயலை அவட்குக் கூறும் வலியில்லேன்; ஆகவே நீங்களே நேரிற் கூறிக்கொள்ளுங்கள்' என்று கூறிவிடுவாள். இதைக்கேட்ட தலைவன் மிக வருந்துவானாதலின் அவனை ஆற்றுவித்தலுன்னி, 'யான் சிறியேன்: நீங்கள் பெரியீர்; ஆதலால், நீங்களே கண்டு உரையாடினால் விருப்பம் நிறைவேறலா'மென்று தான் முன்னுரைத்ததற்கோர் ஏதுக் கற்பிப்பள். 'நம்மைப் பெருமையாகவேதான் இவள் எண்ணியிருக்கின்றனள், எப்படியானும் நமது குறையை முடித்தேவைப்பள்' என்று நினைத்துத் தலைவன் ஆற்றினனாக, அவன் நிலையைத்தோழியுணர்ந்து நகையாடி மறுத்தும், இரங்கி மறுத்தும், எங்கள் குன்றிலுள்ள மாம்பூக்களுஞ் சுனைப்பூக்களும் எங்கள் தலைவியின் வடிவழகுக்கு அஞ்சி மலர்ந்தறியா வாதலின், நீங்கள் கொண்டுவந்த இச் சிறப்பில்லாப் பூத்தபூ எங்கள் தமர்களால், 'மலர்ந்த பூக்களே யிங்கு இல்லையாக இஃதியாண்டையதோ' வென்று ஐயுறுமாறு மாறுசெய்யுமென மொழிந்து அவன் கொணர்ந்த மாமலரின் சிறப்பின்மைகூறி மறுத்தும் அவனோடு இவ்வாறே நெடுகக் குறியாடுவாள். இவையெல்லாம் முறையே 'சந்தனத் தழை தகாதென்று மறுத்தல்' 'நிலத்தின்மை கூறி மறுத்தல்' 'நினைவறிவு கூறி மறுத்தல்' 'படைத்து மொழியான் மறுத்தல்' 'நாணுரைத்து மறுத்தல்' 'இசையாமைகூறி மறுத்தல்' 'செவ்வியிலளென்று மறுத்தல்' 'காப்புடைத்தென்று மறுத்தல்' 'நீயே கூறென்று மறுத்தல்' 'குலமுறை கூறென்று மறுத்தல்' 'நகையாடி மறுத்தல்' 'இரக்கத்தொடு மறுத்தல்' 'சிறப்பின்மைகூறி மறுத்தல்' என்னுந் துறைகளாகக் கூறப்படும். இவற்றையடுத்ததுதான் இளமைகூறி மறுத்தலென்பது.

இவ்வாறெல்லாந் தன்னை அலைத்தலைத்துரைக்கும் அத்தோழியினுடைய சேட்படையுரைகளை யெண்ணிப் பார்த்து இவளை யொழித்தே இனிஎன்விருப்பத்தைநிறைவேற்றுதற்குமுயலல்வேண்டுமென்றுதலைவன் உட்கொண்டு நிற்ப, இதனையவள் குறிப்பினாலறிந்துகொண்டு 'இனி என் உதவியில்லாமல் நீங்கள் இச்செயலை முடித்துக்கொள்ளுதல் இயலாதென்று' அவன் மறைத்தமைகூறி நகைத்துரைப்பாள். அவள் நகையினைக் கண்ட தலைமகன், மறைத்தால் முடியாதென்றனளாதலின் அதனாலேயே மறையாதிருந்தால் முடியுமென்று கூறினாளாயிற்றென்று உன்னி, 'உன்னுடைய மெல்லென்னும் அருள் நோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணை' யென்று அவளது நகையுரைக்கு மகிழ்ந்து கூறுவான்.

தோழி இன்னுமவனை யலைப்பவெண்ணி இங்குத் தோழிமார்கள் எத்தனை யோபேருளர். அவர் தம்முள் உங்கள் நினைவு யார்கண்ணதோவென்று ஒன்றுமே அறியாள் போன்று அவன் நினைவு கேட்பள். ஓ ஓ இன்னுமிவள் என்னுல் விரும்பப்படுவாளை அறிந்திலள் போலுங் கூறுகின்ருள். எதாயினும், இனியவட்கு என் தலைவியின் அடையாளங் கூறுவேனென்று கூறத்தொடங்கி, தன் தலைவியின் உடலுறுப்புக் குறிகள்கூறி அதன் பின்பு, அன்று இயற்கைப் புணர்ச்சிப்பின் பிரிந்து செல்லும்போது தோழியைக் குறித்துக்காட்டியஅவள் கண்ணினை நினைந்து, அதனைநயந்து கூறுவான். இக் கண்ணயந்துரைக்குங் கூற்றினை மாணிக்கவாசகப் பெருமான்,

"ஈசற் கியான்வைத்த அன்பின் அகன்று அவன் வாங்கியஎன்
பாசத்தின் காரென் றுஅவன்தில்லை யின்ஒளி போன்று அவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்து ஆங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த்தை யின்பெரு நீளம் பெருங் கண்களே.

என்று தமது திருக்கோவையாரில் மிக அழகான கருத்து நுட்பங்களோடு விளக்கிக் கூறுகின்ருர்கள்.

தலைமகன் இங்ஙன முரைப்பக் கேட்ட தோழி, இனியுமிவனை இவ்வாறலைத்தல் தகாதென் றிரங்கி, 'எங்கள் குடிக்கு இவ்வாறு தழை யேற்றல் ஏலாதாயினும் நீங்கள் முன்பு செய்த உதவியையும், உங்கள் பேரன்பையும் நினைத்து இதனை ஏற்றுக்கொள்கின்றே'னென்று தழையை ஏற்றுக் கொள்வாள். இது 'தழை எதிர்தல்' எனப்படும்.

இனித் தழை யெதிர்ந்த தோழி தலைமகண்மாட் டண்மி அவள் குறிப்பறிந்து, அங்ஙனங் குறிப்பறிந்த பின்னர் இச்செய்தியைக் கூறி, இது கூறியதோடமையாமல் இதற்குடம்படுதல் நமது கடமையா மென்றும் அவளேற்குமாறு, நமக்குதவி செய்தற்கு நாமுமுதவி செய்ய வேண்டுமென்று வகுத்துக் கூறித் தழையை ஏற்பித்து அவளை விரும்பச்செய்து, அங்ஙனமவள் விரும்பிய அவ்விருப்பத்தையுந் தலைவனுக்குத் தெரிவித்து அவ்விருவரையும் பகற்குறிக்கட் டலைப்பெய்வியா நிற்பாளென்பது.

இங்கு உதவி செய்தானென்று தோழி பன்முறையும் பாராட்டிச்சொல்லுமாறு தலைமகன் செய்த உதவியாவது, முன்னொருநாள் தலைவியும் இத்தோழியும் தினைப்புனத்தே பறவையோப்பித் தினைக்கதிர் காத்துத் தனியே நின்றகாலை, மதங்கொண்டு பிளிறித் திடீரென்று அவர்மேல் வந்ததொரு மால் யானையை அவர்க்கஃது ஊறுசெய்யாதவாறு அம்பிட்டுக் கடிந்ததாகும். இதனைக்

"கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணூர்தழையும்
துவளத் தகுவன வோசுரும் பார்குழற் றூமொழியே" †

என்று திருச்சிற்றம்பலக்கோவையாருங் குறித்துக் கூறுவதாயிற்று. இவ்வுதவியினையே,

---

* திருச்சிற், ௱௯., † ௧௧௨.

"கார்ப்பெயல் உருமின் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை இருநிலம் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅம் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் அறியே மாகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்துஅவன் பொருந்திச்
சூர்உறு மஞ்ஞையின் நடுங்க வார்கோல்
உடுஉறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை அணிமுகத்து அழுத்தலின்
புண்உமிழ் குருதி முகம்பாய்ந்து இழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது
அயர்ந்து புறங்கொடுத்த பின்னர்"

என்று பத்துப்பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டுந் 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' என்னுந் துறைக்கண் நிறுத்து உரைதருகின்றது.

இனி இச்சேட்படைப் பகுதியுணர்த்தி மேலே காட்டப்பட்ட இத்தனைத் துறைகளுக்கும் இறையனாரகப்பொருள் எட்டுத் துறைகளே கூறி மற்றவற்றைப் புறனடையில் இட்டு அடக்குகின்றது. அவற்றைக்

"குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்,
என்னை மறைத்தல் எவனா கியரென,
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலும்,
மாயப் புணர்ச்சி அவனொடு நகாஅ
நீயே சென்று கூறென விடுத்தலும்,
அறியாள் போறலும், குறியாள் கூறலும்,
படைத்துமொழி கிளவியும், குறிப்பு வேறுகொளலும்
அன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக்கு உரிய வென்ப"†

என்னுமதன் நூற்பாவிற் காண்க. இவற்றுள், திருச்சிற்றம்பலக்கோவையாரிற் காணப்படாத புதுத்துறைகளுஞ் சில உள. அவை 'முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பல்' 'மாயப் புணர்ச்சி அவனொடு நகாஅ' 'குறியாள் கூறல்' 'குறிப்புவேறு கொளல்' என்பன. இனிப் படைத்து மொழிகிளவி' என்னுந்துறைக்கு,

'இவன் இத்தழைநல்ல, கண்ணிநல்ல, இவை கொள்ளற்பால வென்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் இங்ஙனஞ் சொல்லும்:

---

* குறிஞ்சிப், கசுஉ - களச. † இறைய, கஉ

யாதோவெனின், இவ்விடம் என்னையரானுந் தன்னையரானும் பல்காலும் புகுதரப்படுமால்; அவர் நும்மைக்கண்டால் ஏதஞ்செய்வர், கூற்றினுங் கடுஞ்சினத்தராதலான்; நீர் உடையதோர் குறை உண்டேல் எனின், அகன்று நின்று முடித்துக் கொள்ளற்பாற் றென்னும்’ என்று இறையனாரகப்பொருளுரை யொன்றுவும்,

‘(நினைவுகூறி மறுத்தமையின்) நினைவறிந்தல்லது, ஏலேமென்று மறுத்துக் கூறியவாறன்று; நினைவறிந்தால் ஏற்பேமென்றவாறு மெனத் (தலைவன்) உட்கொண்டு நிற்ப, சிறிது புடைபெயர்ந்து அவனினைவறிந் தாளாகச் சென்று, இத்தழை யானேயன்றி அவளும் விரும்பும்; ஆயினும் இது குற்றாலத்துத் தழையாதலால்இத்தழைஇவர்க்கு வந்தவாறுஎன்னோ வென்று ஆராயப்படும்; ஆதலான் இத்தழை யெமக்காகாதென்று மறுத்துக் கூறாநிற்றல்.’*என்று திருச்சிற்றம்பலக் கோவையாருரை மற்றதற்கு வேறாவும் விளக்கங் கூறுகின்றன. பொருளிலக்கணத்திற் றுறைக ளென்று கூறப்படுவனவெல்லாம் அவ்விலக்கணத்தோடு தொடர்புபட் டாரின் நினைப்புச் சொற்செயல் வேறுபாடுகளேயாமன்றிப் பிறிதில்லை யாதலின், அவ்விலக்கணத்தைத் துறையுறுப்புக்கூறி விளக்கவந்த ஆசிரியன்மாரெல்லாருந் தத்தங்கால நிகழ்ச்சியிலே எந்தச் செயல் எந்தத் துறையென்று எந்தச்சொல்லால் வழங்கிவந்ததோ அதனை அதுவாக வைத்தும், அல்லததற்குத் தமது நூற்போக்குக் கேற்பத் தாமே ஒரு பெயர் படைத்தமைத்தும் நூலெழுதிச் செல்வர். ஆதலால் இப்பொருளிலக்கணவிரிவிலே, துறைகளுந் துறைப்பெயர்களும் இங்ஙனம் ஒரு நூலுக்கும் மற்றொரு நூலுக்குந் தம்முண் மாறுபாடாய்க் காணப்படினும், அம் மாறுபாட்டுக் காட்சியால், அவ்விலக்கணத்தின் முதன்மைப் போக்குக்கும் ஒருமைப் பாட்டுக்கும் ஏதும் இழுக்கில்லையென் றறிக. மேலும் ஒருபொருட் பகுதியை எடுத்துத் துறைகளாய்ப் பகுத்து ஒரு நூல்கூறிப் போக, அந்நூலைவிட அப்பகுதியையே விரித்துக்கூற விரும்பிய மற்றொரு நூல், முன்னூல் கூறிய ஒவ்வொரு துறையையும் பல கூறுகளாகப் பகுத்துத் தான் பகுத்துக்கொண்ட பொருட்பகுதிகட்கேற்ப வேறுவேறு புதுப்பெயர் நிறீஇயும், வழக்கப்பெயர் நிறீஇயும் பலவகையான மாறுபாட்டமைப்புகளுடன் காணப்படுதல் அதுதனக்கு இயல்பேயாமென்க. ஆனால், அஃதெடுத்துக்கொண்ட இலக்கணத்தின் முதன்மைக் கருத்துகளுங் கருத்து நுட்பங்களும் மட்டும் முன்னூலொடு மாறுகொளாவென் றறிதல் வேண்டும். இங்ஙனமே புறப்பொருளிலக்கணத்தைத் தெரிந்தெடுத்துரைக்கும் புறப்பொருட் பன்னிருபடலமும் அதன் வழியதான புறப்பொருள் வெண்பாமாலையும் முழுமுதல் நூலான தொல்காப்பியத்தோடு முரணுமென்று அவற்றி னிணக்கமறியாது சொன்மாறு மட்டுங் கண்டு கூறுவாரை நோக்கி, ஆசிரியர் சிவஞானமுனிவர் ‘இவை இங்ஙனம் வேறுபடினும் புணர்ச்சி முடிபும் சொன் முடிபும் பொருண்முடிபும் வேறுபடாமையின் மரபுநிலை திரியாவாயின. இவ்வுண்மை யுணராதார் பன்னிருபடலம் முதலிய நூல்களை வழீஇயினவென் றிகழ்ந்து பன்னிருபடலத்துள் வெட்சிப்படலந் தொல்காப்பியனார் கூறியதன்றெனத் தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப’ என்று தமது தொல்காப்பியப் பாயிரவிருத்தியி லுரை கூறி நிறுவுதலும் இங்கு நினைவு கூரற்பாலது.

---

* திருச்சிற், ௯௪.

இனி, இன்னொன்றும் இங்ஙனமே கண்டுகொள்ளற் பாலது. இச்சேட்படைப் பகுதி ஆசிரியர் தொல்காப்பியனார் கூற்றில், "தோழி நீக்கலினாய நிலைமையு நோக்கி" * என்பதன்கண் அடங்கும். இந்நூற்பாவுக்கு உரையெழுதுமிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'தோழி இவ்விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்படை நிறுத்த லிற் றனக்கு உண்டாகிய வருத்தத்தையும் பார்த்து' என்று உரைகூறி அதன்பின்பு, 'இதுவே மடன்மா கூறுதற்கு ஏதுவாயிற்று' என்றுங் கூறினார். இதனோடொப்பவே, 'தோழி நீக்கலினாய நிலைமையுநோக்கி' என்னுமிதனை அடுத்து 'மடன்மா கூறும் இடனுமா ருண்டே' என்று வரும் நூற்பாவடிக்கு உரை யெழுதுமிடத்து, 'அச்சேட்படை யான் மடலேறுவலெனக் கூறும் இடனும் உண்டு' என்றும், 'நோக்கி மடன்மா கூறுமெனக' என்றும் உரை கூறினார். இவ்வாற்றால், ஆசிரி யர் தொல்காப்பியனார் மடன்மா கூறுதற்கு ஏதுவாகச் சேட்படைப் பகுதியை முன் நிறுத்து மற்றதன் விளைவாக மடன்மாப் பகுதியை அதன்பின் நிறுத்து நூற்பாவியற்றினாரென்னும் அவர் கருத்துப் புல னாயிற்று. ஆனால், திருக்கோவையாசிரியரோவெனின், சேட்படைக் கும் மடன்மாக் கூற்றுக்கும் ஏதோ ரேதுவும் விளைவுந் தோற்று வியாது மடன்மாப் பகுதியை முன்னும், சேட்படைப் பகுதியைப் பின்னுமாக நிறுத்திட்டார். இங்ஙனம் நிறுத்தியதற்கு அதன் உரையா சிரியர் பேராசிரியரும், தொல்காப்பியனார் கருத்தோடொத்த வகையில் ஏதோரியையுங் காட்டினாரல்லர். மற்று அவர்காட்டும் இயைபு வேறாவே உள்ளது. இவ்வாறு இக்கருத்தில் தொல்காப்பியக்களவியலுந் திருக் கோவையாரும் பொதுநோக்கத்திற்கு மாறுபட்டனபோலக் காணப் படுகின்றது.

இனி, இவ்விருபெருதெய்வ அருநூலும் இங்ஙனம்மேற்பார்வையில் மாறுபட்டனபோலக் காணப்படுமாறே உள்ளுள்ளும் மாறுபாடுடை யனவோவென்றறிதல் வேண்டுமன்றே! அங்ஙனம் அறியும்வழி அவற்றுள் ஓர் இணக்கம் உண்டென்றே இறையனாகப்பொருளும் அதனுரையும் இடைநின்று தெளிவிக்கின்றன. இறையனாரகப்பொருளும் அதன் உரை யும், மடற்றிறப்பகுதியை முன்னுஞ் சேட்படைப் பகுதியைப் பின்னும் நிறுத்தித் திருக்கோவையாரோடு அமைப்பில் ஒத்து, மற்று அம்மடற் றிறத்துக்குச் சேட்படையை ஏதுவாகக் கூறித் தொல்காப்பியத்தோடும் ஒத்து நிற்கின்றது. இன்னும் அவ்விறையனாரகப் பொருளுரை, திருக் கோவையாருரை யுரைக்கும் ஏதுவினையுஞ் சேட்படைக்கு உரைக்கும். ஆகவே இவைதமக்குள் உள்ளியைந்ததோ ரியையுண்டென்பது வெளிப்படுமன்றோ? மேலும், பலவகை ஏதுக்களால் நிகழும் ஒரு செய்தியை யுரைக்கும்பொழுது ஒருவர் ஓரேது கூறி நிறுவினாராக, மற் றொருவர் மற்றோரேது கூறி நிறுவுவாராதலின், அதனாலவை முரண் படுமாறில்லை யென்றுங் கொள்கவென்பது.

---

* தொல், கள, ௧௧.

மதிப்புரை

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A., M. L.,]

தாகூர்ச்சட்ட விரிவுரையாளர்

பருந்தும் நிழலும்:

திருவாளர்பாலகிருஷ்ணபிள்ளையவர்கள் B. A., M. L எழுதியஇந்நூலானது ஆங்கிலத்தில் விழுமிய கருத்துக்கள் பொதிந்த உயர்ந்த கட்டுரைகளைச் செந்தமிழில் நயமுற மொழிபெயர்க்கு முறையினை இனி தெடுத்து விளக்க வந்த முதனூலாகத் திகழ்கின்றது. ஆங்கிலப் பெரும்புலவரது நினைவின் போக்கினையும் கட்டுரைக்காப்பிய மெழுதும் முறைகளையும் அரிய உணர்ச்சிகளையுந் தமிழ் மாணவர்க்குத் தெள்ளிதின் விளக்கும் ஒரு கண்ணாடி போலவும் இந்நூல் பாராட்டப்படுதற்குரியது. ஆங்கிலச் சிறப்புப்பெயர்ச் சொற்களை நேரே மொழி பெயர்க்காமல் அவற்றிற் கேற்ற செவ்விய தமிழ்ச்சொற்களைத் தெரிந்தெடுத்து இவர் வழங்கி யிருப்பதை மொழிபெயர்ப்பாளர் மிகவும் நன்கு கடைப்பிடித்தல் வேண்டும். ஆங்கிலத்திற் கற்றவர்களே நன்கு தெரிந்து பயன் துய்க்கும் படியாக உயர்ந்த நடையிலெழுதியுள்ள கருத்துக்களைத்தமிழிலேயாவரும் எளிதிற் பொருளுணரத்தக்க செவ்விய நடையில் இந்நூலாசிரியர் வரைந்திருப்பது மிகவும் வியக்கத்தக்கது. ஆங்கில ஆசிரியர்களது கருத்து நுட்பங்களை நுண்ணிதின் ஆய்ந்து தேர்ந்து அவற்றின் ஒரு பகுதியையுந் தப்பவிடாது தமிழில் நன்கு அமைத்துக்காட்டிய இவரது மொழி பெயர்ப்பு வன்மை பெரிதும் போற்றற்பாலது. அஃது இவரது இருமொழி நுண்புலமையைத் தெற்றெனப்புலப்படுத்துவதோடு தமிழ் மொழியை வளம் படுத்த வேண்டுமென்ற இவரது பேரவாவினையும் இனிது விளக்குகின்றது. ஆங்கிலப்பெரும்புலவருள் யாராவது ஒருவர் கருத்துக்களை மட்டும் மொழிபெயர்ப்பதனோடமையாது பல்வேறு வகைப்பட்டார் அறியுங் கொள்கையு முடைய பன்னிரு புலவர்களின் வெவ்வேறு வகைத்தாய கட்டுரைகளின் பகுதிகளை இவர் மொழி பெயர்ப்பான் எடுத்துக்கொண்டமையால் அப்புலவர்களின் வெவ் வேறுவகையான மன நிலைகளையும், நினைவின் போக்குகளையும் சொன்ன டைகளையும் இவர் நன்குணர்ந்து தமிழ் மக்களுக்கு அவற்றை அறி வுறுத்துங் கடமைப்பாட்டினைக் கைக்கொண்டவராவர். இப்புலவர் களின் தன்மைகளையும் அவர்களது நூல் நடைகளின் இயல்புகளையும் தமிழின் உரை நடை நூல் வரலாற்றோடு இவர் ஆங்கிலத்திற் செவ்வி திற்றெரித்த முன்னுரை யொன்று இந்நூன்முகத்தே இணைக்கப்பட்டி ருப்பதாலும், ஒவ்வொரு புலவரது வாழ்க்கை வரலாறும், அவரியற்றிய நூற்றொகையும், மொழி பெயர்க்கப்பட்ட அவரது கட்டுரையின் வழியும், கருத்தும், சுருக்கமும், அரும் பொருள் விளக்கமும் இறுதியிற் சேர்க்கப் பட்டிருப்பதாலும் இந்நூலானது பல்கலைக் கழகமாணவர் ஆராய்ச்சி யொடு கற்றற்குரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவைகள் முறையே உருவகத்தால் உண்மை விளக்கும் முறையை யும் இரக்கத்திற்குக் காரணமாகிய ஓரிடத்தையும், அச்சத்திற்குக் காரணமான பிறிதோரிடத்தையும், வெவ்வேறு புலவர் வர்ணிக்கும் வகையினையும், கிட்டாத பொருளை ஆசைப்பட்டவன் அதனைக்கனவிற் காணும் இயல்பினையும், உயிரில்லாத குண இயல்புகளை உயிர்ப் பொருளாக அமைத்துக் கூறும் முறையினையும், இசையின் நுட்பங்களை யும், உருக்கமிக்க அற நிலையையும், கவின்கலை இன்பத்தையும், தனித்த துறவியின் இயற்கைத் துணைகளையும், பேராசிரியர் மன நிலையையும், வெவ்வேறு வகையாக எடுத்துரைப்பனவென்று தெளிக.

இந்நூலின் முதற்கட்டுரையானது மக்களுள் மிகச்சிறந்த ஆண் மகனிடத்திலும் நுணுகிப்பார்க்குங்கால் குற்றங்குறைக ளுண்டென் றும், தாழ்மையுடன் மெய்யான வழியிலே அவன் சென்றால் திருவருள் அவனுக்கு உதவி புரியுமென்றும் குறிப்பாலுணர்த்துகின்றது. அதனுள் கூறப்பட்ட அழகிய வடிவம் கடவுளுடைய திருவருளின் உருவகமாகும். நக்கீரன் என்பவன் கற்று வல்ல மனிதனுக்குப் பிரதிநிதியாக விளக்கு கின்றான். அவன்தலையிலுள்ள நரைத்த மயிர்களே குற்றங்களைக் குறிப்பன இக்கட்டுரை உருவகநயம் வாய்ந்தது. இது போதிப்பது யாதெனில்,

"அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு"

என்பதே.

இந்நூலின் இரண்டாவது கட்டுரை ஒரு பெரு நகர்க்கண் இரவில் ஊரடங்கிய நிலைமையையும், செல்வர்க்கும் வறியவர்க்கும் அதன் கண் காணப்படும் பரிதாபமான வாழ்க்கை வேறுபாட்டையும் கண்ணுற்ற அறிஞனொருவன் தனக்குள்ளே பேசிக்கொள்ளும் பேச்சாகத் திகழ் கின்றது. இது நிலையாமை வற்புறுத்தி ஏழைகள் மாட்டு இரக்கத்தை வருவிப்பது. இஃது உருக்கம் விளைக்கும் எளிய தெளிய நடையில் எழு தப்பட்டது.

மூன்றாவது கட்டுரை பாலை நிலத்தின் இயல்பினை ஒற்றுமை வேற் றுமை நயந்தோன்ற புலமைமிக்க வழிப்போக்கனொருவன் நயமாகப் புனைந்துரைப்பதாய் அமைந்துள்ளது.

நான்காவது கட்டுரை மணம் புரியாத ஒருவன் புதல்வரோடு அள வளாவி விளையாடும் இன்ப வாழ்கையைப் பற்றிக் கண்ட கனவினைக் கூறுவதாகத் தோன்றுவது. எண்ணங்களின் நுணுக்கத்தை மிக அழ காக எடுத்துக்காட்டும் ஆங்கில மூலத்திற்கேற்ற சொற்றொடர்கள் வாய்ந்துள்ளது.

ஐந்தாவது கட்டுரை கண்ணீர்த்துன்பம் தேம்பல் துன்பம் மயக்கத் துன்பம் என்னும் மூன்றையும் துயரமகளிர் மூவராக உருவகித்து அவற் றினியல்புகளைப் படிப்படியாக வகுத்து விரித்து யாவர்மனத்திலும் பதியும் படி வருணிப்பதில் இணையற்றதாய்த் திகழ்கின்றது.

ஆறாவது கட்டுரை இசையின் அரிய நுட்பங்களை இரண்டு இசைப் பெரும்புலவர்களின் நயங்களை ஒப்பிட்டுக்கூறுமுகத்தால், ஜெர்மானியப் புலவரொருவர் ஆய்ந்து விளக்கியதின் மொழிபெயர்ப்பாக விளங்கி யுள்ளது.

ஏழாவது கட்டுரை டாலிஸ்டா என்னும் ருஷிய நாட்டுப்பேரரு ளாளர், எல்லாமக்களும் இறைவன்முன் சமநிலையுடையா ரென்னுறுங் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, வேலைசெய்யும் ஏழைமக்களின் முயற்சியின் பயனாக முயற்சியில்லாத செல்வர்கள் பணம் ஈட்டுவவை திருத்தல் கொடுமைகள் உலகத்தில் நிலைப்பதற்குக் காரணமாம் என்று தம்முடைய வாழ்க்கையின் வைத்து விரித்து விளக்கிய உரையினைத் தெரிவிப்பது.

எட்டாவது கட்டுரை கவின் கலை யுணர்ச்சியால் உலகப்பொருள் களில் தோன்றும் உள்ள இன்பத்தை அழகாக வகுத்துக்கூறுவது.

ஒன்பதாவது கட்டுரை தனித்துவாழும் துறவியொருவருக்கு இரு வகைப்பட்ட மக்களியற்கை எவ்வாறு தோன்றுகின்ற தென்பதையும், எப்பொருளும் ஒவ்வொருவகையில் துணையாக அவனுக்குத் தோன்று வதையும் விரித்துரைப்பது.

பத்தாவது கட்டுரை ஜெர்மானியப் பேரரசராகிய கேட்டை என்ப வரின் உயர்ந்த மனநிலையை ஆங்கிலப் பெரும் புலவராகிய (காரலே) என்பவர் பலபடப் பகுத்து நுண்ணிதின் ஆய்ந்த முறையை மொழி பெயர்த்து விளக்குவது.

பதினொன்றாவது கட்டுரை இன்பந்தரும் கலைகள் உயர்நோக்கங் களைப் பிறப்பித்து உள்ளத்தை எவ்வாறு உயர்த்துகின்றன என்பதைத் தெளிவான விவகார முறையில் ஓர் அமெரிக்கப் பேராசிரியர் இயற்றிய ஆராய்ச்சியைத் தமிழில் உரைப்பது.

பன்னிரண்டாவது கட்டுரை பெண்களின் வீட்டுக்கடமைகளையும் வெளிக் கடமைகளையும் அவர்கட்கேற்ற கல்வியையும் படமெடுத்துக் காட்டினாற்போல இரஸ்கினா ரென்னும் ஆங்கில உரைநடை வல்லார் கூறியதனைச் செவ்விதின் மொழிபெயர்த்துரைப்பது.

இப்பன்னிரண்டு கட்டுரைகளும் வெவ்வேறு அரும்பொருள்களையும் வெவ்வேறு இலக்கிய முறைகளையும் எடுத்து விளக்குவதால் இந்நூ லானது பெரும் பயன் விளைப்பதோர் இலக்கியமாம். ஆதலின் இவை மாணவராலும் பிறராலும் பெரிதும் பாராட்டிக் கற்றற்குரிய முதன்மை வாய்ந்தது.

இக்கட்டுரைகளின் பொதுத்தன்மையைச் சுட்டி இதனை முடிவு செய்கின்றோம்.

இதன் விலை ரூபா 1.

கிடைக்குமிடம்:

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு சென்னை.

வரகுணனுக்குச் சிவலோ ாட்டியது